கல்கி

KALKI 8-3-81 90 காசு



இலண்ட் மைதானத்தில் ஐஸ் விளையாட்டு

'ஹாலிடே ஆன் ஐஸ்!' என்ற விளம்பரம் செய்தித்தாளில் பார்த்ததுமே

ஒருவேளை ஏதோ கோடை வாசஸ்தலத் துக்கான விளம்பரம் போலிருக்கிறது என்று விசாரிக்கப் போனல்— முற்றிலும் புதிய சமாசாரம் நமக்குத் தெரிய வந்தது. உலக ஐஸ் ஸ்கேட்டிங் சாம்பியன்களைக் கொண்டு ஒரு புதுமையான நிகழ்ச்சி நடத்த இருக்கிறார்கள், ஐலண்ட் கிரவுண்டில். ஆறேழு அம்சங்களைக் கொண்டு சுமார் இரண்டு மணி நேரம் நடக்குமாம்.

இதற்காகவென்றே 2400 சதுர அடி பரப்பு முழுதும் ஐஸ் வைக்க ஏற்பாடு நடக்கிறது. குழாயைத் தரைக்குக் கீழே பதித்து, அதன் மூலம் கால்ஷியம் குளோரைட் செலுத்தி ஐஸ் கட்டி தயாரிக்கப் பல லட்சம் ரூபாய் செலவில் வேலை நடக்கிறது.

''இத்தகைய காட்சி முதல் தடவையா?''

''சென்னைக்கு இதுதான் முதல் முறை. நல்ல வரவேற்பு இருக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.'' என்கிறார் லலித் கபூர். — இன்டர் நேஷனல் ஐஸ் ஷோ



கம்பெனியின்மானேஜர். இதன்உரிமையாளர் திரு அருண்குமார் — தென் அமெரிக்கா வில் வசிக்கும் இந்தியர்.

திரும்பத்திரும்ப'ஸ்கேட்டிங்'கே காண்பிப்பது போரடிக்காதோ?

சலிப்புத்தட்டாமல் இருக்க விதவிதமான காட்சிகளைப் புகுத்தி யிருக்கிறார்கள். நவீன யுகத்தின் பிரதிபலிப் பான டிஸ்கோ இருக்கிறது.

JesusChrist Super Star என்ற ஒரு காட்சிச் சிப்பாய்களின் 'பரேட்' போன்ற பல.

மூன்று கால்களுடன் ஸ்கேட்டிங் செய்வதை நகைச்சுவைக்கு உதாரண மாகக் கொள்ளலாம் என்றால், தீயில் மூழ்கி எழுந்து நீக்கங்களை விழுங்கும் காட்சியை (ஸ்ரீலங்காவைச் சேர்ந்த டான் என்பவர் இதைச் செய்கிறார்) அற்புதத் துக்கு ஒப்பிடலாம். காட்சிகளின் ஊடே பதிவு செய்யப்பட்ட இசைஒலிபரப்பப் படுகிறது.

கொஞ்ச நாளைக்கு நம் ஐலண்ட் மைதானத்தை ஐஸ்லண்ட் மைதானம் என்றே அழைக்கலாம்!

—தமயந்தி

Kalki Shopping Page

பொன் கொழிக்கும் வாழ்க்கை!


வளமான வாழ்க்கைக்கு வழி கூறும்
பயனுள்ள சிறந்த ஜோதிட, மருத்துவ நூல்கள்!
முனிவர்களும் ஞானிகளும் வழங்கிய
பழம்பெரும் சுவடிகளிலிருந்து ஆய்ந்து
இன்றைய விஞ்ஞான முறையில் கணிக்கப்பட்டவை!

மு.செல்வராசன் தயாரிப்பு


திருமணப் பொருத்தம்	விலை	ரூ	4-50
புத்திர பாக்கியம்	"	ரூ	2-75
உத்தியோகப்பலன்	"	ரூ	3-75
யோகாதி யோகங்கள்	"	ரூ	4-50
ருது ஜாதக பலன்கள்	"	ரூ	5-50
மங்கையர் ஜாதக மர்மங்கள்	"	ரூ	5-00
எண் கணித ஜோதிடம்	"	ரூ	4-50
சனீஸ்வர சாந்தி	"	ரூ	3-25
சித்தர்கள் கண்ட சிறந்த மருந்துகள்	"	ரூ	4-00
குழந்தை பெறுவது எப்படி?	"	ரூ	3-75

எல்லா நூல்களும் சேர்த்து வாங்குவோருக்கு தபால் செலவு இலவசம். தனிப்பிரதி வேண்டுவோர் விலையுடன் தபால் செலவு ரூ 1-25 சேர்த்து M.O அனுப்பவும். (வி.பி.பி இல்லை)

யமுனா பிரசுரம்
96, சல்லிவன்ஸ் கார்டன் ரோடு,
மயிலாப்பூர், சென்னை-600004.



டிவி நிகழ்ச்சிகளை ரேடியோவிலும் எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளை டிவியிலும் கேட்டு மகிழ ஒரு அற்புத படைப்பு



ரூ.325/- மட்டுமே

சாலிடேர் டிவி/எஃப்எம் ட்யூனரை உங்களது ரேடியோவுடன் இணைத்து, டிவி இல்லாமலேயே டிவி நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழலாம். டிவியில் இடம்பெறும் திரைப்படம், நாடகம், இசை போன்ற பல நிகழ்ச்சிகளைக் கேட்க இது ஒரு அற்புத படைப்பு.

இது தவிர உங்களது டிவியில் 'பிக்-அப்' வசதி இருக்குமேயானால் சாலிடேர் டிவி/எஃப்எம் ட்யூனரை இணைத்து எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளைக் கேட்கலாம்.

சாலிடேர் டிவி/எஃப்எம் ட்யூனரை எந்தவொரு ஆம்ப்ளிஃபையருடனும் இணைத்து டிவி நிகழ்ச்சிகளையோ, எஃப்எம் ரேடியோ நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்.

சாலிடேர்

டிவி/எஃப்எம் ட்யூனர்

HE-250



மாயாஜால் கே.லால்

● ஒரு பெண்ணை இரண்டு துண்டாக வெட்டி, கால் பகுதியையும், தலைப் பகுதியையும் நீக்கிய பிறகு, அதே பெண் அடுத்தநிமிஷமே குதித்தோடி வந்து மேடையில் நிற்கிறார்!

● ஒருத்தியை மூட்டையாகக் கட்டிப் பெட்டியில் வைத்துப் பூட்டி, இரண்டு பூட்டுக்களின் சாவிகளையும் பார்வையாளர் ஒருவரிடம் கொடுக்கிறார் மாயா ஜாலக்காரர் லால். அடுத்த நிமிடம் அந்தப் பெண் தானாகவே வெளியே வர, பூட்டுக்களைத் திறந்து பார்த்தால் — லால் அதன் உள்ளே நிற்கிறார்!

● எகிப்திய 'மம்மி' உயிர் பெற்று வருகிறது. மறுபடியும் 'மம்மி'யாகி விடுகிறது.

● வாத்திய இசை அலையாக அரங்கு முழுதும் பாய, நாற்பது உதவியாளர்களுடன் நிகழ்ச்சிகளை நடத்தி ரசிகர்களைப் பிரமிக்க வைத்துக் கைதட்டல்களை ஏகமாகப் பெறுகிறார்...

யார் இந்த கே. லால்?

"கேம் சோ?" (சௌக்கியம்தானே?) என்று அவர் தாய்மொழி குஜராத்தியில் குசலம் விசாரித்துக்கையை நீட்டுகிறேன்.

"இதுவரை கிட்டத்தட்ட 9000 நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறேன். இது ஓர் உலக ரெகார்ட்!" என்கிறார் லால்.

அங்கங்கே ஆங்கிலம் தெளித்து, சரளமான இந்தியில் உரையாடுகிறார் பெரும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த லால்.

"எத்தனை வயதில் இந்த மந்திர மாயா ஜாலங்களைக் கற்றீர்கள்?"

"ஏழு வயதில்! என் குரு ஸ்ரீ கணபதி — தென்னிந்தியப் பெயராய் இருக்கிறதே என்று பிரமிக்கிறீர்களா? — வங்காளி! பி. ஸி. சர்க்காருக்கும் அவர்தான் குரு."

"வெளிநாட்டு நிகழ்ச்சிகளின்போது மறக்க முடியாத சம்பவம் ஏதாவது உண்டா?"


"ஜப்பானில் ஒரு முறை பன்னிரண்டரை மணி ஷோ துவங்க இருக்கும்பொழுது, அப்பெண்டிசைடிஸ் வலி வந்து நான் துடித்தேன். கிட்டத்தட்ட 20 லட்ச ரூபாய்க்கு டிக்கட்டுகள் விற்று, ஏற்பாடு செய்திருந்தவர்கள் வெலவெலத்துப்போய் விட்டார்கள். ஜப்பானிய மருத்துவ மனை ஒன்றில் ஆபரேஷனுக்குத் தயாராய் இருந்த நான் அத்தனை பணத்தையும் திருப்பிக் கொடுத்து, பதினைந்து நாட்களுக்கான நிகழ்ச்சிகளையே ரத்து செய்ய வேண்டியிருக்கும் நிலையிலிருந்த அமைப்பாளர்களின் சோர்ந்த முகத்தைப் பார்த்தேன். ஆபரேஷன் டேபிளிலிருந்து குதித்து, "என் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்தப் போகிறேன். ஆண்டவன் என்னைக் காப்பாற்றுவான்!" என்று ஹாஸ்பிடலை விட்டு வெளியே வந்தேன். சர்ஜன்கள் என் பின்னாலேயே ஓடி வந்து, 'இப்படி அலட்சியப் படுத்தாதே! நீ உயிரையே இழக்க நேரிடும்!' என்று கூறினர். நான் அன்றைய நிகழ்ச்சிகளை மட்டுமல்ல, மாஸமோடோ நகரில் ஏற்பாடு செய்திருந்த பதினைந்து நாள் நிகழ்ச்சிகளையும் ஒரு தடங்கலும் இன்றி நடத்தினேன். டாக்டர்கள் ஆச்சரியப்பட்டனர். அமைப்பாளர்கள் "நீங்கள் எங்களைக் காப்பாற்றினீர்கள்!" என்று கண்ணீர் மல்கச் சொன்னார்கள். கடவுளைவிட ஒரு பெரிய மெஜிஷியன் கிடையாது என்பது என் அநுபவம்!"


பொறாமை உணர்ச்சி காரணமாக ஒருவர் தமது ஸ்டேஜ் மானேஜரிடம் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து, பெண் ஒருத்தியை இரண்டாக வெட்டும் நிகழ்ச்சியின் போது, இரும்பு உருளையின் 'போல்ட்' 'நட்'டுகளைக் கழற்றி உண்மையில் அந்தப் பெண்ணைக் கொல்லும்படி செய்திருந்ததையும் தெய்வாதீனமாக அந்த நிகழ்ச்சியின் பொழுதும் கடவுள் தம்மைக் காப்பாற்றியதையும் ஒரு சிறு கதையின் சுவாரஸ்யத்தோடு விவரிக்கிறார் லால்.

கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் பொது நலன்களுக்காக வசூலித்துக் கொடுத்திருக்கும் லால், நூற்றுக் கணக்கான தாய்மார்களைப் பிரசவவேதனையில் துடிக்கும்போழுது ஹிப்னடிஸம் மூலம் வலியே உணராது செய்து பிள்ளைப் பேற்றை வெகு சுலபமாக்கியிருப்பதைப் பெருமையுடன் குறிப்பிட்டார்.

— எஸ். விசுவநாதன்

※ பெண் ஒருத்தியை இரண்டாக வெட்டி....





வட்ட மேஜை

◒ உயிர்களைப் பறித்த விபத்துக்களைப் பற்றிய தலையங்கம், ஒரு உணர்ச்சிபூர்வமான அறிவைப் புகட்டும், உயிர்க் களை சொட்டும் காவியம்!

பங்களூர் — வசந்தா கோவிந்தன்

◒ தலையங்கத்தில், ''பகவானே!.... தேச பக்தியையும் ஊட்டக்கூடிய ஒரு நேர்மையாளனைப்' பெருந் தலைவனாகக் கொடுத்து உதவு'' என்ற வரியில் தெய்வ பக்தியையும் என்று எழுதத் தவறிவிட்டீர்களே!

கும்மிடிபூண்டி — மு. ஷாகுல் அமீத்

◒ மணமக்கள்: செல்வி சீதா—செல்வன் ரவி

''ஒரு மனதாயினர் – இந்தத்
திருமண மக்கள் என்றும் வாழி!''
—பாவேந்தர் பாரதிதாசன்

மணமக்கள் நீடுவாழ கல்கி நேயர்கள் அனைவர் சார்பிலும் எனது வாழ்த்துக்கள்!

'கல்கி'யும் அவர் எழுத்தும் போல்
கல்கியும் அதன் தரமும் போல்
இணைந்து வாழ்க!

சென்னை-61 — வி.ஜி. நேசன்

◒ ''வெற்றியின் பின்னணியில் சில வேதனைகள்'' ஓர் அருமையான கட்டுரை. ஆயிரக் கணக்கான கிரிக்கெட் ரசிகர்களின் மனத்தில் தோன்றியுள்ள எண்ணத்தின் பிரதிபலிப்பாக விளங்கியது. தயக்கமின்றி வெளியிட்டதற்கு எங்கள் பாராட்டுக்கள்.

சேலம்-1 — சஞ்சீவி, ராகவேந்திரன்

◒ ''கம்ப்யூட்டர் பூக்கள்'' என்று கார்த்திகா ராஜ்குமார் எழுதிய அறிவியல் சிறுகதை தொடர்பாக (15–2–81 இதழ்):

ஒரு மனிதனின் குணாதிசயங்களை நிர்ணயிக்கும் ஜீன்கள் (Genes) DNA என்ற உயிர் ரசாயனப் பொருட்களால் ஆனவை. RNA என்று குறிப்பிட்டது தவறு.

புதுதில்லி — டாக்டர் ரகுராமன்

◒ ''சுப நேரங்களில் சில மனிதர்கள்'' என்னும் கதையில் 'மாப்பிள்ளை ஊர்வலம்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், 'ஜயந்தி' அக்கதைக்குப் போட்டுள்ள படத்தில் மாப்பிள்ளையுடன் பெண்ணும் ஜம்மென்று மாலையும் கழுத்துமாக அமர்ந்துள்ளார்.

அம்பத்தூர் — ப. வத்ஸலா

◒ கல்லூரிகளில் இடம், வேலை வாய்ப்பு என்று வரும்போது சமநீதி கோரி இந்திய அரசியல் சட்டத்தைக் காட்டும் பிராமணர்கள் ஆண்டவன் சந்நிதியில் வழிபாட்டு உரிமை, வழிபடும் முறை என்பவை வரும்போது மட்டும் ஆகமத்தையும் சாஸ்திரத்தையும் காட்டி சமநீதி மறுத்து சுப்ரீம் கோர்ட் வரை போய் வாதாடுவது ஏன்?

பெங்களூர் — க. கிருஷ்ணன்

◒ ஆர். சேகரின் ''அவளைத் தொடுவானேன் அவஸ்தைப் படுவானேன்'' சிறுகதை முதுகெலும்பில்லாத இன்றைய இளைஞர்களுக்குச் சரியான சாட்டையடி!

பெங்களூர்-53 — 'மலர் மடந்தை'

◒ பி.எஸ்.ஆரின் ''அட தெய்வமே, நான் கர்ப்பவதியா!'' கட்டுரையைத் திரும்பத் திரும்பப் படித்து ரசித்தேன். தமிழில் இத்தகைய நகைச்சுவைப் புத்தகங்களை யாரும் எழுதுவதில்லையே என்ற ஏக்கமும் ஏற்பட்டது.


விழுப்புரம் — ஆர். மார்க்கண்டன்

◒ அரசியலில் மட்டுமின்றி சினிமாவிலும் கருணாநிதி செல்வாக்கு நமத்துப் போன பட்டாசாகி விட்டது என்பதற்கு அத்தாட்சி 'குலக்கொழுந்து' — நளினி சாஸ்திரியின் துணிச்சலான விமர்சனம்!

சென்னை-11 — மணிமகன்

◒ அகம்பாவம் ஒரு குடும்பத்தையே எமனுலகுக்கு அனுப்பி விட்டது என்பதை 'கல்மண்டபம்' சிறுகதை மூலம் ராஜேஷ் குமார் அழகாக உணர்த்துகிறார்.

மேலகிருஷ்ணபுதூர் — ஆர்.கே. லிங்கேசன்



குட்டிக்குதிரை : ''வின்னிங் போஸ்ட்டுன்னு என்னம்மா...?''

தாய்க்குதிரை : ''அடிபோடி.. அதைத்தான் நானும் தேடிட்டு இருக்கேன்.


— கு. சொக்கலிங்கம்

மலிவான விலையில் எழிலான சேலைகள்.

அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட
கண்ட்ரோல்டு விலையில்
ஜனதா சேலைகள், வேட்டிகள், லுங்கிகள்.

	பழைய விலை ரூ. பை.	புதிய விலை ரூ. பை.
லுங்கிகள்	15.60	10.40
	22.00	14.15
சேலைகள்	35.50	17.20
	36.60	21.20
வேட்டிகள்	8.80	4.50




ரயில்வே பட்ஜெட்
மத்திய பட்ஜெட்
மாநில பட்ஜெட்
திமுக
நிழல் கொடுப்பதற்காக நான் குடை பிடிப்பதாக யாரும் நினைக்க வேண்டாம்!
எம்.பி. சுப்ரமணியம்

PENNY WISE AND POUND FOOLISH

பட்ஜெட்டுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படும் பொருளாதார அறிக்கை பிரமாதமான அங்கதபாணி நகைச்சுவைக் கட்டுரை!

பொருளாதாரம் அபிவிருத்தி அடைந்ததற்கான நிச்சயமான அறிகுறிகள் தெரிகின்றன என்று அடித்துச் சொல்கிறது; கூடவே பணவீக்கம் மிகுந்துள்ளதாகவும் பேசுகிறது! விவசாய உற்பத்தி அதிகரித்துள்ளதாக ஆணித்தரமாகக் கூறுகிறது; கூடவே விலைவாசிகள் மேலும் உயரலாம் என்கிறது! தொழில்துறை உற்பத்தி பெருகியுள்ளதாக மகிழ்ச்சியடைகிறது; கூடவே ஏற்றுமதியில் சுணக்கம் என்று துக்கம் கொண்டாடுகிறது!

இப்படியே தொடரும் பொருளாதார அறிக்கையைப் படிக்கும்போது நமக்கு ஒரு விஷயம் வெட்ட வெளிச்சமாகிறது: எது எப்படியோ நமக்கு இன்னும் விடிவு காலம் பிறக்கவில்லை!

எப்படிப் பிறக்கும்? நோட்டு அச்சடிக்கும் வசதி இருப்பதால் அரசுச் செலவினங்களை அதிகரித்துக் கொண்டே போகும்போது அது பணவீக்கத்தையும் விலைவாசி உயர்வையும் பொருளாதாரச் சீர்குலைவையும்தானே உருவாக்கும்?

நமது பிரதமரும்தான் பாவம், சிக்கனத்தை உபதேசிக்கிறார். சமீபத்தில் கூடத் 'திருமணங்களில் ஆடம்பரச் செலவுகள் வேண்டாம்' என்ற அவரது கருத்து விளம்பரமாகப் பத்திரிகைகளில் வந்தது. இந்தப் பொன்மொழிகள் மக்களுக்கு மட்டும்தானே யொழிய அரசுக்கு இல்லை போலும்!

புது தில்லியில் நடந்த இந்திரா காங்கிரஸ் கட்சியின் விவசாயப் பேரணிக்கு மக்களின் வரிப்பணம் எவ்வளவு செலவாயிற்று என்பதற்குப் பல கோடிகள் வரை பல்வேறு மதிப்பீடுகள். எதிர்க் கட்சியினர் வேண்டிய அளவுக்குத் தாக்கிப் பேசிவிட்டனர்.

கூடவே நடந்த கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டில் விரயமான பணம் எவ்வளவு, கண்ட பலன் எவ்வளவு என்று பார்த்தால் தலை சுற்றும்! பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் எனில் இதோ ஒரு உதாரணம்:

மாநாட்டுக்கு மொழிபெயர்ப்பாளர் படை தேவைப்பட்டது. இதனை இந்தியாவிலேயே யாரேனும் பொறுப்பேற்றுச் செய்ய மாட்டார்களா என்பது கவனிக்கப் படவேயில்லை. மிஸஸ் பென்னி என்ற பிரிட்டிஷ் பெண்மணியிடம் பணியை ஒப்படைத்தனர். அவருக்கு இதற்கென தரப்பட்ட தொகை எண்பத்திரண்டு லட்சம் ரூபாய்க்கும் அதிகம்! இது அந்நியச் செலாவணியில் கொடுக்கப்பட்டது. பல மொழிபெயர்ப்பாளர்களை உதவிக்கு அமர்த்திக்கொண்ட அவர் அவர்களுக்குத் தலா நாளொன்றுக்கு முந்நூறு டாலர் தரப் போவதாக நமது அரசுக்குக் கணக்குச் சொன்னார். பயணச் செலவு, தங்குமிடச் செலவு தனி என்றார்! ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால் அவர் தம்முடன் அழைத்து வந்தவர்கள் பாதிப் பேர்தான். மீதமுள்ளவர்களை இந்தியாவிலேயே தேடிப் பிடித்தார். அவர்களுக்குத் தலா நாளொன்றுக்கு முப்பது டாலர்தான் தந்தார்!

அவர் தமது குழுவினருடன் இங்கு வந்து சேர்ந்த விமானமாவது ஏர்—இந்தியாவாக இருந்திருந்தால் அந்நியச் செலாவணியில் ஒரு பகுதி நமது நாட்டுக்கே திரும்பி வந்திருக்கும். ஆனால் ஒப்பந்த ஷரத்தில் இந்த நிபந்தனை இல்லை! மேல் நாட்டு விமான கம்பெனியே பயனடைந்தது. முழு டிக்கெட்டுக்கும் ஏழை இந்தியன் பணம் தர, மிஸஸ் பென்னி ஒரு கூட்டத்துடன் வந்ததால் அடையக்கூடிய சலுகையைப் பெற்றார்!

ஒன்று நிச்சயம்; மிஸஸ் பென்னிக்கு உள்ள சாமர்த்தியத்தில் பாதி அளவு நமது அரசுக்கு இருக்குமானால் போதும், நமது தேசம் ரொம்ப ரொம்பப் பணக்கார நாடாகி விடும்! ஆனால் மிஸஸ் பென்னி Penny wise ஆக இருக்க நமது அரசு Pound foolish ஆக அல்லவோ செயலாற்றுகிறது!



கல்கி



1981 மார்ச் 8

ரௌத்திரி மாசி 25

மலர் : 39 இதழ் : 32

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா


10. அது என்னவோ?

சரிந்த கூரையின் மேல் சமீபத்திய செல்வாக்கைக் கலந்து கட்டப்பட்ட வீடு அது. அதனுள் அந்த சதாசிவம் நுழைந்து உள்ளே சென்றதைப் பார்த்தான் வஸந்த். சற்று நேரம் திகைத்தான். உள்ளே சென்று பார்க்கலாமா? வேண்டாம், மற்றொரு ட்ரெஸ்பாஸ் வேண்டாம். காத்திருக்கலாம். உள்ளே போன ஆள், வெளியே வந்துதானே ஆக வேண்டும்.

வரவில்லை. முப்பது நிமிஷமாச்சு, நாற்பதாச்சு, ஒரு மணியாச்சு. ஆள் அட்ரஸே இல்லை. உள்ளே கரைந்து போய் விட்டானா? எத்தனை நேரம் கிராமத்து வீதியில் இப்படி உலாத்துவது? எத்தனை நேரம் இப்படி சிகரெட் குடிப்பவன் போல் அலட்சியமாக நிற்பது? அவ்வப்போது ஆர்வ முகங்கள் யாரு வேணுங்க, யாரைப் பார்க்கறீங்க? என்று விசாரிக்கத் துவங்க வஸந்த் தீர்மானித்தான்.

கதவைத் தட்டினான். ''யாரு?'' என்று உள்ளே இருந்து சற்று வயதான குரல் கேட்டது. ''மரகதம்! யாரு, பாரு!''

ஈரக் கையைத் துடைத்துக்கொண்டு வந்த மரகதத்துக்கு முப்பது வயதிருக்கலாம். தேவைக்கு அதிகமான அளவு பொட்டு. உதட்டில் வெற்றிலை ரத்தம். உன்னிப்பாக



வஸந்தைப் பார்த்து, புருவத்தால் ''என்ன வேணும்?'' என்றாள்.

''சதாசிவம் இங்கே வந்தாருங்களே அவரைக் கொஞ்சம் பார்க்கணும்.''

''சதாசிவமா? அப்படி யாருமில்லே.'' அவள் ரேடியோ டிராமாவில் போல் அனாவசியத்துக்குச் சிரித்தாள்.

''கொஞ்ச நேரம் முன்னாடி இந்த வீட்டுக்குள்ள நுழைஞ்சாரே?'' மறுபடி ரேடியோ டிராமா. ''ம்ஹூம். யாரும் வரலிங்க.'' இப்போது சிரிப்பு அடக்க முடியாமல் வெடித்தது. வஸந்த் சற்று நேரம் கண்ணை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று தீர்மானமில்லாமல் திருதிரு என்று விழித்தான். ''நீங்க தானே மரகதம்?''

''ஆம்மா.''

''கொஞ்சம் குடிக்கத் தண்ணி கிடைக்குமா?''

''கொண்டாரேன்.''

''அப்படியே எனக்குக் கை கால் முகம் கழுவிக்கணும்.''

அந்த ஆள் நிச்சயம் புறக்கடைப் பக்கம் தான் போயிருக்க வேண்டும்.

''அப்ப வாங்க பின்கட்டுப் பக்கம்.''

கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்த மரகதத்திடம், ''உள்ளுக்குள்ள குரல் கேட்டுதே அது யாரு உங்கப்பாவா?'' என்றான்.

இப்போ பள்ளிக்கூட மணி அடித்ததுபோல அவள் சிரித்தாள். ''அப்பாவா? இல்லே! ஊட்டுக்காரரு.''

''அப்படியா ஸாரி. குரலைக் கேட்டா வயசான மாதிரி இருந்தது.''

''வயசானவர்தான்.'' அவள் சிரிப்புக்கு விவஸ்தையே கிடையாதா? இதற்குக் கூடவா சிரிப்பார்கள்? வஸந்த் முகம் கழுவிக் கொள்கிறவன் போல் சுற்று முற்றும் பார்த்தான். தென்னை, வானம் பார்த்த கழிவறை, சொறி பிடித்த இட்டிக் கதவு. ''இந்தக் கதவு எங்க போறதுங்க?''

''ஒட்டஞ் சந்துக்கு'' — சிரிப்பு.

''சரி, தாங்க்ஸ் வரேங்க.''

''கொஞ்சம் இருங்க.''


''மரகதம், லொக்கு-லொக்கு. யாரது?''

''யாரோ குடிக்கத் தண்ணி கேக்க வந்த வங்க மாமோவ்.''

இப்போது அவள் குரலைத் தாழ்த்தி ''சதாசிவம் வந்தாரு. சந்து வளியாப்போயிட்டாரு'' என்றாள். அவள் சிரிப்பதை நிறுத்திவிட்டாள். இந்தப் பக்கம் அந்தப் பக்கம் துருதுரு என்று கண்கள் அலைந்தன. ''அப்பவே போயிட்டாரு. எல்லாம் இருடங்க.''

''என்ன சொல்றாரு அவரு?'' என்றது முன் வீடு.






''ஒண்ணுமில்லே மாமோவ். நீங்க ளெம்புங்க. இறம் மெள்ள எழுந்து வந்துரும்.'' அவள் கண்களில் லேசான வருத்தம் தென்பட்டது.

''தாங்க்ஸ் மரகதம். நான் மறுபடியும் வரேன்.''

''வாங்க எல்லாம் சொல்றேன். இந்தாங்க கண்ணாடி!'' அவள் வெய்யில் கண்ணாடியைத் திருப்பிக் கொடுக்கும்போது கை பட்டது.



பால்காரியின் மகன் : ''எங்க அம்மா, வெளுத்ததெல்லாம், பால்னு, நினைப்பாங்க...!''

நடிகையின் மகன் : ''இதென்ன...! எங்க அம்மா, கறுத்ததெல்லாம், பணம்னு, நினைப்பாங்களே...!''

- ஏ. என். ஜெயராமன்

''சரியான அராபியன் நைட்ஸ் அனுபவம் பாஸ்! கதவு திறக்கிறது அடிமைப் பெண் ஜரீனு வரா.''

''சதாசிவம் என்ன ஆளுன் அதைச் சொல்லு முதல்லே.''

''பின் வழியா ஜகா வாங்கிட்டாருஅவரு''

''அப்ப அவரு அவ்வளவு இன்னொஸெண்ட் இல்லேன்னு தெரியுது. அவர் விலாசம் உக்கல் முதலியார் தெருவில் இருக்கு.''

''ஒரு நடை போய்ப் பார்த்துட்டு வந்துடலாமே?''

''இல்லே. முதல்லே பேராசிரியரையும் மகளையும் பத்திரமா ஊருக்கு அனுப்பலாம். போலீஸ் கேஸ்லே அவங்களைப் போட்டுக் குழப்ப வேண்டாம். அப்புறம் எப்படியும் நாம மறுபடி உக்கல் திரும்ப வேண்டியிருக்கும். விசாரணை இன்னிக்கு முடியாது.''

''மாட்டிக்கிட்டோம் பாஸ்.''

''இல்லே. கேஸ் சுவாரஸ்யமா இருக்கு வஸந்த்! இவங்கள்ளாம் எதுக்காக இப்படி வெட்டுப் பழி குத்துப் பழியா அலையறாங்க அதைக் கண்டு பிடிக்க வேண்டாமா?''

''ஹாய் வஸந்த்! எங்க ஆளு காணுமப் போயிட்டீங்க?'' இனியா வந்தாள்.

''எல்லாம் பேராசிரியர் இனப்பிலிட்ட வம்புலதான். ஸார், நீங்க என்ன பண்றீங்க சமத்தா மெட்ராஸ் போயி அந்த ஆராய்ச்சிக் குறிப்புக்களை சந்தேகத்துக்குச் சாம்பாரா இன்னொரு தடவை பார்த்துட்டு ஏதாவது புதையல் கிதையல் விட்டுப் போயிருக்கான்னு எங்களுக்குச் சொல்லுங்க. அதுக்குள்ள நானும் கணேஷும் இனியாவும்...''

''இனியா எதுக்கு?''

''சும்மா ஒரு பேச்சுத் துணைக்கு.''

கணேஷ், ''ஸார், அதெல்லாம்வேண்டாம். நீங்க உங்க டாட்டரை அழைச்சுண்டு போங்க.'' நாங்க மறுபடியும் மெட்ராஸ்ல வந்து சந்திக்கிறோம்'' என்றான்.

''அப்ப பை! வஸந்த் உடம்பைப் பாத்துக்குங்க. ராத்திரி வேளையில தனியா எங்கேயும் போகாதீங்க.''

''போகலே இன்னி.''

''ஸ்வெட்டர் போட்டுக்குங்க.''

''போட்டுக்கிறேன் இன்னி.''

''யோவ்! இன்னி என்னய்யா இன்னி!''

''ஓ! நீங்க இருக்கீங்களா மறந்துட்டேன் ஸார்!''

''இனியா! வஸந்த்கிட்டச் சொல்லியாச்சா!''

''இல்லேப்பா'' என்று சற்று ஹீனஸ்வரம் பேசினாள்.

''என்ன?''

''இனியாவைப் பாக்க வராங்க.''

''யாரு?''

''பையன் அமெரிக்காவில ரிஸர்ச் பண்றான். லீவ்லே வரான். நாளைக்கு வந்து பார்க்கப் போறான்.''

''அப்படியா? சந்தோஷம்'' என்றான் வஸந்த் சந்தோஷம் இல்லாமல்.

''சும்மா பார்க்கத்தான்வராங்க வஸந்த்.''

''நீ என்ன சுற்றுலா பொருட் காட்சியா?''

''பார்த்துட்டுப் பிடிச்சிருந்தா மேரேஜ் செட்டில் ஆயிடும்.''

''அவ்வளவு தூரத்துக்குப் போயிடுமா?''

''ஏன்?''

''ஸார், உள்ளூர்ல மாப்பிள்ளை கிடைக்கலியா?''

''தங்கமான பையனும்பா.''

''ஏன் லோகல் தங்கம் உதவாதோ?''

''வஸந்த், அப்புறம் பார்க்கலாம்'' என்றாள் இனியா.

''எப்ப? ரிஸப்ஷன்போதா?''

''வா, இனியா.''

அவர்கள் சென்றதும் வஸந்த் ஒரு ஒதெல்லோ பெருமூச்சு விட்டு ''அமெரிக்காவில இருக்கிற ஆசாமி பேசாம அமெரிக்காவிலேயே ஒரு வெள்ளைக்காரியைப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே? எதுக்காக பெஸண்ட் நகர் வரணும்? அநியாயம்'' என்றான்.

''கவலைப்படாதே வஸந்த். இனியா கடைசியா உன்னைப் பார்த்த பார்வையில நம்பிக்கை இருந்தது.''

''சான்ஸே இல்லே பாஸ். ஹூம் நம்ம கேஸைப் பார்க்கலாம் வாங்க.''

''இறந்து போன அந்தாளு யாருன்னு கண்டு பிடிச்சுட்டோம் மிஸ்டர் கணேஷ்.'' என்று இன்ஸ்பெக்டர் அவர்கள் அருகே வந்தார். ''சர்க்கார் உத்தியோகஸ்தர்.''

''அப்படியா!''

''கூழமந்தல்ல ஒரு கோயில் இருக்குது. அதில ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட் காவல்காரன். பேரு செல்வ மாணிக்கம்.''

''அவன் கொலை செய்யப்பட்டதுக்குக் காரணம் என்னன்னு நீங்க நினைக்கிறீங்க?''

''சொல்ல முடியலீங்க. ஏதாவது நிலத் தகராறு இருக்கலாம்.''

''இன்ஸ்பெக்டர்! சமீபத்தில் உக்கல் கிராமத்தில் வெளியூர் ஆசாமிங்க நடமாட்டம் அதிகமா யிருந்ததா?''

''இல்லீங்களே.''


கல்கி ஏப்ரல் 5

கோடை சிறப்பிதழ்
அதிக பக்கங்கள்

கோபுலு வரையும் சித்திரங்களுடன்

ஸ்ரீவேணுகோபாலன் எழுதும் சரித்திரத் தொடர்

செம்பியன் அளிக்கும் முழு நீள நாவல்



"பழுப்பு நிறத்திலே ஒரு வான், மெட்ராஸ் வண்டி, வந்ததா ஞாபகம் இருக்குங்களா?"

"இல்லியே! ஏன்?"

"எனக்கென்னவோ இது நிலத் தகராறுத் தெரியலே."

"வேறென்ன?"

"அதான் தெரியலே. எதுக்கும் நாங்க நடந்ததை ஸ்டேட்மெண்ட் எழுதிக் கொடுத்துடறோம். நீங்க எஃப். ஐ. ஆர். தயாரிங்க. உங்களுக்கு முழு ஒத்துழைப்பும் தரோம். நீங்க எப்ப திரும்பிப் போகலாம்னு சொல்றீங்களோ அப்பப் போறோம், சரிதானே?"

"சரிதாங்க. எஸ்பி. வருவாரு. அவரைப் பார்த்துப் பேசிட்டுப் போய்டலாம். நீங்க திரும்பியும்கிராமத்துக்குத்தானேபோறீங்க?"

"ஆமாங்க. கார்ல போறோம். நீங்களும் எங்க கூட வரிங்களா?"

"இல்லிங்க! நீங்க போங்க. எனக்கு ஏகப்பட்ட சோலி கிடக்குது."

"என்ன வஸந்த் பேச்சே இல்லே!"

"ப்ச்! லவ் இஸ் எ மித்னு சும்மாவா சொன்னான்? அமெரிக்காவில இருந்து வர ப்ளேன் புறப்படறப்பவே டயர் பர்ஸ்ட்டாகி வெடிச்சு 'என்னடாது கிளம்பறப்பவே அபசகுனமா இருக்கே'ன்னு அந்த ஆசாமி என்ன மண்ணாங்கட்டி ரிசர்ச் பண்றானோ அவன் பேசாமத் திரும்பிப் போயிட்டான்னு..."

கணேஷ் சிரித்து, "பரவாயில்லே. ப்ளேனைக் கவுக்காம டயர் பர்ஸ்ட்டோட நிறுத்தினியே! வஸந்த்! கவலைப்படாதே! இனியா இந்தப் பையனைப் பிடிக்கலேன்னு சொல்லிடுவா பாரேன்" என்றான்.

"நீங்க அப்படி நினைக்கிறீங்களா பாஸ்?"

"மேலும் இந்த ராஜ ராஜன் கிணறு மர்மத்தைக் கண்டு பிடிச்சா பேராசிரியர் உம்மேல படு இம்ப்ரெஸ் ஆகி கொண்டுவா கையைன்னு பொண்ணைக் குடுத்துடுவார்."

"ஐஸ் ஃபாக்டரியையே வெக்கறிங்க."

"அப்படியே இந்த இனியா இல்லேன்னாலும் மெட்ராஸ்ல வேற பெண்களே இல்லேயா?"

"இல்லே பாஸ். தப்பித் தவறிப் போய் ஒருத்தி என்னை லவ் பண்ண ஆரம்பிச்சா. அது என்னடான்னு டீரெய்ல் ஆய்டும்போல இருக்கு. 'இனியா! இனியா! பாஸ்! படக்குனு மெட்ராஸ் போயி சின்னதா ஒரு காந்தர்வ விவாகம் பண்ணிண்டு வந்துறவா?"

"பொறு மகனே. இந்த விவகாரத்தை முடிச்சுட்டு அப்புறம் உன் காதலைக் கவனிக்கலாம்."

"சொல்லிட்டிங்க. அது போதும்."

"இப்ப உக்கலுக்குப் போய் முதல்லே அந்த சதாசிவத்தை விசாரிக்கலாம்."

"சலாம்! வாங்க."

சதாசிவத்தின் வீடு சற்றுப் பிரதானமாக இருந்தது. வாசலில் சதுரமாகக் கொஞ்சம் தெருவில் ஆக்கிரமித்து சிமெண்ட் போடப்பட்டிருந்தது. ஈட்டி ஈட்டியாகக் கம்பிக்குருத்துகளுக்குப் பின் திண்ணை, மரக் கதவு, பிறையில் கார்த்திகைக் கருப்பு.

"வாங்க உங்களை ஒரு விதத்தில எதிர் பார்த்துக்கிட்டுத்தான் இருந்தேன்."

"அப்படியா? எந்த விதத்திலே?"

"அ, சும்மா பாசாங்கு பண்ணாதீங்க. ஆஸ்பத்திரி சந்தடியிலே உங்ககூட அதிகம் பேச முடியலே. போலீஸ் வேற இருந்தாங்க. அதனால கண்டுக்காம வந்துட்டேன். கொஞ்சம் உள்ளே வரிங்களா?"

உள்ளே குளுமையாக இருந்தது. சகல வசதிகளும் இருந்தன.

"டெலிவிஷன் இங்கே தெரியுதுங்களா?"

"ஏன் கேக்கறிங்க! சவுண்டு வந்தா படம் வரதில்லே; படம் வந்தா சவுண்டு இல்லே. எப்பஞச்சியும் ரெண்டும் தெரிஞ்சா விவசாயம் காட்டறாங்க" என்று செயற்கையாகச் சிரித்து "என்ன சாப்பிடறீங்க?" என்றான்.

"ஒண்ணும் வேண்டாங்க."

"அப்ப வந்த காரியத்தைப் பளிச்சுன்னு சொல்லிப்போடுங்க."

"நீங்கதான் சொல்லணும்."

"எத்தினி தருவிங்க?"

"பொருளைப் பார்க்காம எப்படி?"

"கைவசம் ஒண்ணுதான் வந்திருக்கு."

"முதல்ல அதைப் பத்திப் பேசலாம்" என்றான் கணேஷ்.

"கொஞ்சம் இருங்க, வாசக் கதவைத் தாப்பாப் போட்டுட்டு வந்துர்றேன்."

அவன் சொல்லக் கணேஷும் வஸந்தும் பார்த்துக் கொண்டார்கள்.

"என்ன பாஸ் சொல்றான்" என்று வஸந்த் சைகையில் கேட்க "வெயிட்! பார்க்கலாம்" என்று கணேஷ் கையமர்த்திக் காட்டினான்.

திரும்பி வந்த சதாசிவம் மரத்தூண்களைச் சுற்றிச் சென்று ஓரத்தில் இருந்த மரக் கதவைத் திறந்து அதன் இருட்டுக்குள் மறைந்தான்.

சற்று நேரத்தில் பழுப்புக் காகிதத்தில் சுற்றப்பட்ட ஒரு என்னவோவுடன் திரும்பினான்.

சுமார் மூன்றடி இருந்தது. கச்சாவாக சணல் கயிற்றில் கட்டியிருந்தது. அதை மேசை மேல் வைத்து மெல்லக் கயிற்றைப் பிரித்தான். "இது எங்கிட்ட இருக்கிறது யாருக்கும் தெரியாது. ரெண்டு நாளிலே கைமாறிடும். டெம்பரரியாத்தான் நம்ம கைல வந்திருக்கு."


"புரியுது" என்றான் கணேஷ் புரியாமல்.

சணல் கயிற்றை அகற்றி அகற்றி அவன் அந்தப் பழுப்புக் காகிதத்தைப் பிரிக்கும் நிலையில் வாசலில் கதவு தடதடக்கப்படும் சப்தம் கேட்டது.

உடன் "சதாசிவம்! சதாசிவம்! கதவைத் திற, சீக்கிரம் கதவைத் திற" என்று அதட்டல் கேட்டது.

"பாவி வந்துட்டானே! இப்ப என்ன செய்வேன்!" என்று சதாசிவம் அந்தப் பொருளை ஒரே அள்ளாக அள்ளி அணைத்துக் கொண்டு "நீங்க என்ன செய்யறீங்க, அந்த ரூம்ல கொஞ்ச நேரம் போய் இருங்க. நான் அவனை அனுப்பிச்சுட்டு வந்துர்றேன்" என்று அவர்கள் பதிலுக்குக் காத்திராமல் இருவரையும் அந்தச் சிறிய அறைக்குள் தள்ளிக் கதவைத் தாளிட்டான். (தொடரும்)

"வீட்டுக்குத் தெரியாம 'மார்னிங் ஷோ'வுக்கா போனே.. பத்து தோப்புக் கரணம் போடுடா ராஸ்கல்!"
"இருபது போட்டுடறேன் அப்பா!"
"ஏண்டா?"
"ஈவினிங் ஷோவுக்கும் டிக்கட் வாங்கி வச்சிருக்கேம்பா!"



- கிரிஜா மணாளன்

அவனும் அவன் நிழலும்

சுப்ரபாலன்

பொன்னம்மாக் கிழவி செத்துப் போனாள். அவள் கண்ணும்பாய் ஆனாளா, இல்லை, சத்தமாய்க் கரைந்து போனாளா என்பது நாளை சுடுகாட்டில் மூட்டம் பிரிக்கும் போதுதான் தெரியும்.

'வயசான ஒடம்பு... நெட்டி மாதிரி இருப்பா. ஆனாலும் எம்மாங் கெனம் கெழவி பொணத்துக்கு' — மாகாளி அலுத்துக் கொண்டான். இருந்தாலும் கிழவியின் கடைசிப் பயணத்துக்குச் சுமந்து போனதில் அவனுக்குப் பெருமைதான்.

அவனுக்கு மட்டுமென்ன? எனக்கும் அவளைச் சுமந்து கொண்டு போன மற்றவர்களுக்கும் பயணத்தில் அவளை வழியனுப்பி வைக்க வந்த மற்றவர்களுக்கும்தான்.

கிழவி ரொம்பவும் கொடுத்து வைத்தவள் — அதைவிட, அவள் உயிரோடிருந்தவரை நாங்கள் எல்லோருமேதான் கொடுத்து வைத்திருந்தோம். இனிமேல், பொன் குன்றம் கிராமத்தில் கிழவி இல்லை என்கிற வெறுமையை யாராலும் அவ்வளவு எளிதாக நிரப்பி விட முடியுமா?

பொன்னம்மாக் கிழவி கிராமத்தின் ஜீவன். ஒவ்வொரு கிராமத்திலும் அவளைப் போல் யாரேனும் இருப்பார்கள்தான். ஆனாலும்—

பத்து வருடங்களுக்கு முந்திய நிகழ்ச்சிகள் நினைவில் நெருடுகின்றன. சுடுகாட்டுப் பாதையில், வெறுங் காலில் நடக்கும் அனுபவத்தில் கல்லும் முள்ளும் குத்துகிறபோது, அந்த நினைவின் நெருடல் சற்று இதமாய்க்கூட இருக்கிறது.

'நீரிலே மூழ்கி நினைப்பொழிந்தார்களே!' —எனக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. கிழவியின் நினைப்பைக் கரைத்து விடக் கூடிய ஆற்றல் வெறும் ஆற்று நீருக்கு இருந்து விடக் கூடுமா?

கொள்ளிடக் கரை மேட்டில் ஈர வேட்டியைப் பிழிந்து உலர்த்திக் காற்றுடன் அது போராடிப் படபடக்கும் பேச்சை ரசித்தபடி நடக்கிறேன். தூரத்தில் வான விளிம்பில் எங்கோ தீப்பிடித்து எரிகிறது — ஊழித் தீயின் பெரு நெருப்பா? அந்த ஒளியையும் புறக்கணித்துக் கொண்டு சற்று மேலே கருமையைத் தேடிப் பிடித்துக் கொண்டு வெள்ளி நட்சத்திரமாய் மின்னுகிறது.

கூட நடப்பவர்கள் எதை எதையோ பேசிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் 'நினைப்பொழிந்து' விட்டவர்கள். ஆனால் நான்?

நினைவுகளின் சிலிர்ப்பில்—

கடந்து போன எத்தனையோ நாட்கள் கண் முன் விரிகின்றன. அன்று மட்டும் பொன்னம்மாக் கிழவி இல்லாம லிருந்தால் என்று நினைப்பதும் ஓர் அச்சமாகவே இருக்கிறது.

திருமணமான புதிதில் நானும் அவளும் புது வீட்டில் குடித்தனம் தொடங்குகிறோம். கிராமத்துச் சாவடி அறை ஒன்றில் மூன்று ரூபாய் வாடகைக்கு நான்கு பேர் ஒண்டியிருந்த நிலையை மாற்றிவிட்டு நான் குடும்பஸ்தனாகிறேன்.

அரசாங்க வேலை. அரசாங்கக் குடியிருப்பு வீடு. பேச்சுத் துணைக்குக் கூட ஆளில்லாத ஒரு தனிமை.





நான் அலுவலகம் போய்விட்டால் நீலாவுக்கு யார் துணை? நான் நினைத்துப் பார்க்கவில்லை. நீலாவுக்கும் நினைக்கத் தோன்றவில்லை. ஆனால்—

அவனுக்கு அந்தத் தனிமையின் மகத்துவம் தெரிந்திருந்தது. சிறையிலிருந்து பசியோடு தப்பி ஓடிவந்த அவனுடைய கண்களில் பட்டது நீலாவா? அல்லது அவளுடைய நகைகளா?

அவனுடைய முரட்டுப் பிடியில் அவள் அகப்பட்டுத் தவித்தபோதுதான் பொன்னம்மாக் கிழவி குறுக்கிட்டாள். கீரை விற்க வந்த அவளுடைய உதவி மட்டும் அப்போது இல்லாதிருந்திருக்குமானால்—

நினைத்துப் பார்க்க இப்போதும் பயமாகத்தான் இருக்கிறது. கிழவியின் கையிலிருக்கும் பூண் போட்ட தடியால் திருடனின் மண்டை பிளந்தது. நல்ல காலம், படுகாயத்துடன் அவனைப் பிடித்து விட்டார்கள். அவனுக்கு மறுபடியும் சிறை வாசம். போய்விட்டான்.

இப்படி அறிமுகமான பொன்னம்மாக் கிழவி எங்களைப் பொறுத்தவரை அப்போது கீரை விற்கிற கிழவிதான். பல நேரங்களில் அவள் ஊரையே விற்றுவிடக் கூடியவள் என்பதைப் போகப் போகப் புரிந்து கொண்டோம்.

திருடப் போய் அடிபட்டு அகப்பட்டுக் கொண்டவன் வேறு யாருமில்லை. கிழவியின் சொந்த மகள் வயிற்றுப் பேரன் என்கிற உறவு முறை தெரிந்தபோது நாங்கள் அதிர்ச்சியே அடைந்தோம்.

கிழவி கீரை விற்ற நேரம் போக, பெரும்பாலும் நீலாவுக்குத் துணையாகவே வரத் தொடங்கினாள்.

''அய்யாருட்டம்மா!'' என்று கிழவி அழைப்பதில் மரியாதையை விடப் பாசமும் பரிவுமே மிகுந்திருக்கும். நீலாவிடம் அவளுக்குத் தனிப்பட்ட ஈடுபாடு ஏற்படக் காரணம் என்னவாய் இருக்கும் என்று ஊகிக்க நான் முயலவில்லை.

வல்லடி வழக்குகள், கிராமத்தின் சச்சரவுகள், பஞ்சாயம் எல்லாவற்றிலும் பொன்னம்மாவின் குரலுக்கும் ஓர் இடம் உண்டு.

எங்கள் குழந்தைகள் நான்கும் நீலாவை விடப் பொன்னம்மாவையே நன்கு அறியும். கீச்சுக் குரலில் அவள் பாடுகிற தாலாட்டைக் கேட்டது முதல் சின்னச் சின்னக் கதைகளாக அந்தப் படிப்பறியாக் கிழவி சொல்லக் கேட்டது வரை — குழந்தைகளின் அறிவுக்கு நாங்கள் —படித்தவர்கள் ஒன்றும் பெரிதாய்க் கிழித்துவிடவில்லை என்பதை எண்ணுகிறபோது கொஞ்சம் பொறாமை கூட மேலிடுகிறது.

''பொய்யே சொல்லக் கூடாது தெரியுமில்லே... பாட்டி சொல்லியிருக்கா'' என்று மூணு வயசு நந்து எங்களையே திருத்த முயல்கிறபோது நான் நெகிழ்ந்து போவேன்.

பொன்னம்மா — கிழவியாவதற்கும் முன்னால் — தனக்காக வாழ்ந்தது ஒரு வருடம்கூட இல்லை. ' முழுக்க முழுக்க ஊர்ப் பிரச்னையே உனக்குச் சரியாகப் போய்விடும் என்றுகூட

கொண்ட அவளுடைய 'அவன்' கண்ணை மூடியபோது —

பொன்னம்மா அழவே இல்லையாம். அழுகை வரவில்லை என்று கிழவியே சொல்வாள். மடியில் கிடந்த குழந்தை பெரியவளாகிக் 'கண்ணாலம்' பண்ணிக் கொண்டு அவளும் ஒரு பிள்ளையைப் பெற்றுப் போட்டு விட்டுப் போய்ச் சேர்ந்த பிறகு — அந்தப் பேரனும் நாளொரு திருட்டும் பொழுதொரு சண்டையும் என்று சிறைப் பறவையாய் அலைந்து திரிய நேர்ந்து—

பொன்னம்மாக் கிழவி வாழ்க்கையில் வசந்தத்தையே பார்த்திருக்க மாட்டாளோ?

வீட்டு வாசலில் போய் நின்று கை கால் அலம்பிக் கொண்டு உள்ளே நுழைகிறேன். முதலில் கண்ணில் படுவது கிழவியின் படம் தான். பொக்கை வாய்ச் சிரிப்போடு எங்கள் முதல் பெண் மீனுவைத் தூக்கி வைத்துக் கொண்டு நிற்கிறாள். அந்தப் படத்தில் அவளைச் சிறைப்பிடிக்கச் சம்மதிக்க வைப்பதற்குள் நான் பட்ட பாடு—

''ஏஞ்சாமி என்னெப் படம் எடுக்கிறீங்க? நீங்க, புள்ளாங்களெ எடுங்க சாமி!—''

கட்டாயப்படுத்தி, மீனுவுடன் அவளை நிற்க வைத்து எடுத்த படம் எவ்வளவு மதிப்பு வாய்ந்தது என்று இப்பொழுது தான் தெரிகிறது.

உணவருந்திவிட்டு, இனம் புரியாத ஆயாசத்துடன் படுக்கையில் சாயும்போது—

வாசலில் கதவு தட்டப் படுகிறது. விளக்கைப் போட்டுக் கதவைத் திறந்த நீலா அவசரமாய் உள்ளே வருகிறாள். அந்தப் பரபரப்பு எனக்கும் எதையோ உணர்த்தவே நான் எழுந்து வாசலுக்கு வருகிறேன்.

அவன் நிற்கிறான் — கிழவியின் பேரன்... திருடன் ... கைதி ... முரடன். கூடவே அவனோடு நிழலாய் நிற்பது யார்?

அவன் நோக்கம் வித்தியாசமாய் இருக்க நியாயமில்லை என்கிற உணர்வு வருகிறது. மௌனமாய் அவர்கள் உள்ளே வருகிறார்கள்.

''ஆயாவைக் கடைசித் தடவையாக் கூடப் பாக்க முடியாமப் போயிடுச்சு சாமி! இவளெக் கூட்டிக்கிட்டு ஆயா கிட்ட வந்து இனிமே நல்லபடியா இருக்கேன்னு சொல்லிட்டுப் போக ஓடியாந்தேன். அதுக்குள்ளாற போயிட்டாளே சாமி!'' — சிறு பிள்ளை மாதிரி அவன் அழுதான். சிலை போல் அந்தப் பெண் நின்றிருந்தாள்.

பெண்களின் மன ஆழத்தை எப்படிப் புரிந்து கொள்வது? இவனைப் போன்ற ஒரு முரடனையும் துணிந்து மணந்து கொள்ள ஒருத்தி முன்வர முடியுமா?

சில கனமான நிமிடங்கள் கரைகின்றன. கிழவியின் எப்போதோ கேட்ட குரல் பசுமையாய் எதிரொலிக்கிறது. ''சாமீ! என்னைக் காச்சும் என் பேரப் பய மனசு மாறி யோக்கியனா வந்தான்னா.. அவனுக்கு ஒரு கண்ணாலம் கட்டிப் பார்த்துப்புடணும். அது ஒண்ணுதாஞ் சாமி எனக்கு ஆசை...'' உடல் நலமற்று அவதிப்பட்டுக் கிடந்தபோது அவள் சொன்னாள்.

அவனுடைய ஆசை நிறைவேறியிருந்தது என்பதை அறிந்திருந்தால் கிழவி இன்னமும் மகிழ்ச்சியுடன் இறந்திருப்பாளோ?

''நீது... சாப்பாட்டுக்கு ஏதாவது வைச்சிருக்கியா?... மொதல்லே பின் பக்கமா இவங்களை வரச் சொல்லிக் கிணத்துலே தலை முழுகச் சொல்லு. கெழவிக்கு அதுதான் இவங்களாலே முடியும்...'' என்று சொல்லிக் கொண்டே அவனுடைய கைப் பையைத் திண்ணையில் ஓரமாக வைக்கச் சொல்கிறேன்.

அவனும் அவளும் குளித்து முழுகிய பின், ஏதோ குடும்பத்தில் ஒருவர் என்கிற உணர்வு என்னுள் எழுகிறது.

கணவன் மனைவியாகக் கிழவியின் படத்தின் முன்னால் அவர்களை விழுந்து வணங்கச் சொல்கிறேன். அவனுடைய 'அவள்' தூண்டியதன் பேரில் அவர்கள் எங்களையும் விழுந்து வணங்குகிறார்கள்.

''இன்னிக்குப் புதுசு கட்ட வேண்டாம். ஆயா செத்துப் போயிருக்கு... இருந்தாலும் இதை வாங்கிக்கோ'' என்று பீரோவிலிருந்து புதிய வேட்டி துண்டையும், அவளுக்கு ஒரு சாதாரணக் கைத்தறிச்சேலையையும் சோளித் துண்டுடன் எடுத்துத் தருகிறேன்.

அவனுடைய கண்களில் நீர் பனிக்கிறது.

உணவு கொள்கிறார்கள். உறங்க இடம் வேண்டும். எப்படியோ சமாளித்து முன் புறத்துச் சாமான் அறையை மிகுந்த எச்சரிக்கையுடன் தருகிறேன்.

நீலா மிரண்டு போய் இருக்கிறாள். ''அவர்களுக்குச் சோறு போட்டது போதும். வெளியில் அனுப்பி விடுங்கள். நெருப்பை மடியில் கட்டிக் கொண்டு....'' அவள் கண்களின் பயம் என்னைச் சுண்டுகிறது.


''அது மாஜியாகிப் போன நெருப்பு நீலு... அது கனிந்து கொள்வதும், அப்படியே அமுங்கிப் போவதும் இனிமேல் அவனுடைய கரங்களில் இல்லை. அந்தப் பெண் சாமர்த்தியமானவளாய் இருந்தால் அவனைக் காப்பாற்றிக் கொள்ளலாம். அப்படி ஆக முடியும், ஆக வேண்டும் என்றும் ஆசைப்படுகிறேன்.

சிறுவன்: அம்மாவுக்கும் புதுசு புதுசா நிறைய கதை சொல்லுவீங்களாமே அப்பா... எனக்குச் சொல்லக்கூடாதா?

அப்பா: அம்மாவுக்குக் கதை சொன்னேனா... எப்பவாம்?

சிறுவன்: 'ஏன் லேட்டான் வீட்டுக்கு வர்றீங்க'ன்னு தினமும் ராத்திரியில் அம்மா கேட்கறப்ப!

- கிரிஜா மணாளன்



''இந்த இரவில் அவர்களை வேறே எங்கேயும் அனுப்ப முடியாது. அது மனிதத் தன்மையுமல்ல'' என்று அவளை அமைதிப்படுத்திக் கண்ணயர வைக்கிறேன்.

காலை நேரம். எனக்கு முன்னுலேயே விழித்து விட்டிருந்தது. அயர்ந்து உறங்கியிருக்கிறேன். அருகே நீலா இல்லை. பரபரப்புடன் வெளியே வருகிறேன். கண்களுக்குப் பெரு வியப்பு...

நீலாவும் அவனுடைய மனைவியும் நெடுநாள் பழகியவர்கள் மாதிரி புழக்கடையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். தூரத்தே வேம்பின் கீழே சின்னக் குச்சியால் பல் துலக்கிக் கொண்டு அவன் நிற்கிறான். மிகவும் சகஜமான ஒரு சூழல் எப்படி ஏற்பட்டது?

''ஒனக்கு என்ன வேலை தெரியும்? இத்தனை காலமும் எங்கே இருந்தே?''

என் கேள்விக்கு அவன் பதில் தருகிறான். அவன் தோட்ட வேலை பழகியவன். சில நேரங்களில் சித்தாள் வேலைக்கும் போனதுண்டு. அவனுடைய 'தொழிலு'க்கு உதவத்தான் இவை பயன்பட்டிருக்கும் என்று புரிந்து கொள்கிறேன். இனிமேல்?

கிழவியின் மூட்டம் பிரித்து அவளைக் கரைத்துக் 'கரையேற்றி'விடப் போகும் இறுதி மரியாதையில் அவனும் பங்கு கொள்கிறான்.

மற்ற நண்பர்கள் என்னை ஒரு மாதிரியாய்ப் பார்ப்பது புரிகிறது. ஆனால் எல்லாமே அவர்களுக்குப் புரியுமா என்ன?

மூட்டப் பிரிப்பில் சிதைந்த எலும்புக் கூடாய்க் கிடந்த கிழவியின் உருவத்தில், நான் பூரணமான ஒரு பெண்ணையே, ஒரு தாயையே காண்கிறேன்.

அவளுக்காக, அவள் எனக்கும் நீலாவுக்கும் உழைத்துள்ள தன்மைக்காக, நன்றியறிவுடன் எதையாவது செய்தாகத்தான் வேண்டும். அவளுடைய பேரனையும் அவன் மனைவியையும் நம்ப வேண்டும். பழைய உண்மைகளை மறந்து துணிவு பெற வேண்டும்.

''சின்னப்பன்! உன்னெ முழுசா நம்பறேன். பழசை யெல்லாம் மறந்துட்டு நீ ரொம்பவும் ஒழுங்கா இருப்பேன்னும் நிச்சயமா எனக்குத் தெரியும்... ஏ... பொண்ணு! நீயும்தான்... கண்ணாலம் கட்டிக்கிட்டயா, இல்லே சும்மா சேர்த்துக்கிட்டானா? எப்படியானாலும் சரி, இன்னைக்கே ரிஜிஸ்தர் ஆபீசு போய்ப் பதிவு பண்ணிக்குவோம். இப்போதைக்கு என் கூடவே, வீட்டுப் பின் கட்டிலே இருந்துக்கோ. தோட்டத்தையும் கொத்திப் பச்சை போட்டுக்கிட்டு இரு. கிழவியோட பணம் கூட என்கிட்டக் கொஞ்சம் இருக்கு.

''சீக்கிரமா உன்னையும் வேலைக்கு வைக்கக்கிற இடமாப் பார்க்கிறேன். கிழவி எங்களுக்குப் பண்ணி விருக்கிற உதவிக்கு இதுவெல்லாம் ஒண்ணும் பெரிசில்லே...''

அவன் விம்முகிறான். அவளுடைய 'நிழல்' விரலால் தரையைக் கீறிக் கோலம் போடுகிறாள். நீலா என்னை அங்கீகரிக்கலாமா வேண்டாமாஎன்கிற குழப்பத்தில் இருப்பது தெரிகிறது. ஆனால் நான்தான் சில விஷயங்களில் சர்வாதிகாரியாயிற்றே!

" காம்ப்ளான்® ஒண்ணுதான் சரி
என் குடும்பத்துக்கு
...திட்டமிட்ட பரிபூரண உணவு."



"பல வேளைகள்
சாப்பிடத் தவறி விடும்
... என் கணவருக்கு"



"சாப்பிடும்போது
சண்டித்தனம் செய்யும்
என் மகனுக்கு"



"நோயுடல் தேறிவரும்
என் தாயாருக்கு"

காம்ப்ளான்® ஒன்றுதான்
எவருக்கும் தேவைப்படும்
23 மூலாதார ஊட்டச் சத்துக்களால்
முழுமை பெற்றது.



"அசதியினால்
சரிவர
சாப்பிட
முடியாத
எனக்கு"

காம்ப்ளான் ஒன்றுதான் திட்டமிட்ட விஞ்ஞானக் கலவையாக உடலுக்கு அன்றாடம் தேவைப்படும் 23 மூலாதார ஊட்டச் சத்துக்களை அளிக்கிறது: புரதங்கள், கார்போஹைட்ரேட், கொழுப்புச் சத்து, வைட்டமின்கள், உலோக தாதுக்கள். எனவேதான், டாக்டர்கள் பெரும்பாலும் சிபாரிசு செய்யும் ஆரோக்கிய பானமாக விளங்குகிறது காம்ப்ளான்.

கிடைப்பவை நால்வகை: இன்சுவை ரகங்களாக — சாக்கலேட் காம்ப்ளான், ஏலக்காய்-குங்குமப்பூ காம்ப்ளான், ஸ்ட்ராபெர்ரி காம்ப்ளான், தவிர சாதா காம்ப்ளான்.

திட்டமிட்ட பரிபூரண உணவு
காம்ப்ளான்®

லின்டாஸ்-GLC. 10-2015 TH



உடைந்த கரைகள்

கிருஷ்ணா திரு

ராஜாராமன் சந்து திரும்புவதைப் பார்த்தவுடன்தான் மாடிச் சாளரத்தை விட்டு நகர மனசு வந்தது புவனாவுக்கு. தன் வாளிப்பும் சௌந்தர்யமும் மற்றவர்களை மயக்குவது போல இவனை ஏன் மயக்குவதில்லை? எப்போதும் வியக்கிற மாதிரி இன்றைக்கும் வியந்து கொண்டாள். இந்த இரண்டு வருடத்தில் ஒரு தடவை கூடத் தன்னைப் பார்க்க வேண்டும் என்று அவன் மனத்தில் ஆவல் எழுந்ததாக அவளுக்குத் தெரியவில்லை. இது மாதிரி வீட்டை விட்டுப் போகிறபோது ஒரு தடவை கூடத் தவறியும் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று அவன் திரும்பிப் பார்த்தது கிடையாது என்பதை நினைத்தபோது அவளுக்கு ஆச்சரியம் மேலிட்டது. சாதாரண மனித உணர்வுகளின் சபலம் இவனிடம் எப்படி இல்லாமல் போனது என்று வியந்து கொண்டாள்.

இது திமிர். அல்லது இப்படி அலட்சியப் படுத்தத் தன்னுடைய அழகும், அந்தஸ்தும் அவனுக்குக் கீழே என்று நிரூபித்துக்கொள்ளச் செய்கிற ஒரு முயற்சி என்று நிர்மானித்துத் தனக்குள்ளே ஏற்பட்ட ஒரு ஆங்காரத்துடன் கறுவிக் கொண்டாள்.

கீழே ஹாலுக்கு வந்தபோது விவேகானந்தன் எப்போதும் போல ஒரு சோபாவில் காலை நீட்டி உட்கார்ந்து புருவங்களை விரலால் அழுத்திக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்தான். இது அவன் வழக்கம். அப்பா கூட அவனைப் பார்த்துக் கேலி செய்வதுண்டு. ''இவன் இப்படி உட்கார்ந்து யோசித்தே ஒரு டாக்டர் பட்டம் வாங்கிட்டான். அப்புறம் எதுக்கு இப்படி யோசிக்கிறான்....'' என்று பெருமையுடன் பேசுவார். விவேக் இரண்டாவது டாக்டர் பட்டம் வாங்கியதைப் பார்த்த பின் அந்தத் திருப்தியோடுதான் போனார். பையனைப் பற்றிப் பேசினாலே ஏகப் பெருமை. ''இருபத்தாறு வயதில் இரண்டு டாக்டர் பட்டம் வாங்கிட்டானே....''

குழந்தைகள் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்று அடிக்கடி சாரதி சொல்வார். அதே மாதிரிதான் தன்னையும் விவேக்கையும் ஆளாக்கியது பற்றி எப்போதுமே பெருமை கொண்டிருந்த புவனாவுக்குத் தன் திருமண விஷயத்தில் மட்டும் அவர் நடந்துகொண்ட விதம் பிடிக்கவில்லை. பிடிபடவுமில்லை. ஆனால் கடைசிவரை அவர் ஒன்று மாத்திரம் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே இருந்தார். ''ராஜா ராமன் உனக்குச் சரியான துணை... நான் அவனை உனக்குத் தேர்ந்தெடுத்ததில் எந்தத் தப்பும் இல்லை... நீ நினைக்கிற மாதிரியோ உன் அண்ணன் நினைக்கிற மாதிரியோ நான் வெறும் நட்புக்கு ஆட்பட்டு சுந்தரேசனுக்கு வாக்குக் கொடுத்து விட்டு உனக்கும் ராஜாராமனுக்கும் முடிச்சுப் போடச் சம்மதிக்கலை. இதை ஒருநாள் புரிஞ்சுக்குவே... நான் ரொம்ப யோசித்து சுந்தரேசன் கேட்பாரான்னு காத்திருந்து அவர் கேட்டதும் சரியென்றேன்... அவ்வளவு தான்.''

அப்பா போய் ஒன்றரை வருடமாகிவிட்டது. அப்பாவுக்காக ராஜாராமனுக்குக் கழுத்தை நீட்டி இரண்டு வருடமாகிவிட்டது.

இன்றும் பிறந்த வீடுதான். அதை விட்டுப் போகவில்லை; பந்தம் கழுத்தோடு நின்றது. மனத்தோடு ஐக்கியமாகவில்லை; சாரதி புவனாவுக்காகக் கட்டி வைத்த வீடு பூட்டியே கிடந்தது. அவள் மனசைப் போல. மாதத்துக்கு ஒரு தடவை ஆள் விட்டுத் திறந்து வீட்டைச் சுத்தம் செய்தாள். வாடகைக்கு விட விவேக் ஒத்துக்கொள்ளவில்லை. நீ இருந்து அனுபவிக்கத் திட்டம் போட்டு ''அப்பா! கட்டிய வீடு. நீதான் அதிலே இருக்கணும். வாடகைக்கு விட நான் தயாரில்லை...''

ராஜாராமன் வருவான். விவேக்கிடம் பேசிவிட்டு வந்த சுவடு தெரியாமல் திரும்பி விடுவான். இன்றும் அப்படித்தான், வந்தது மாதிரி போயும் விட்டான்.

புவனா சோபாவில் உட்கார்ந்தாள். விவேக் சிந்தனை கலைந்து நிமிர்ந்து பார்த்து விட்டு இலேசாகச் சிரித்தான். என்னவோ அவன் சிரிப்பு வித்தியாசமாகப் பட்டது.

''என்ன அண்ணா....''

'' ....''

மீண்டும் படிக்க முயன்றான். படிப்பில் கவனம் போகவில்லை. என்றைக்குமில்லாமல் இன்றைக்கு ஏனோ விவேக்குடன் பேசத் தோன்றியது ராஜாராமனைப் பற்றி.

''என்ன சொன்னார் அண்ணா?''

''அவன் என்ன பேசுவான்... வழக்கம் போல வந்தான், உட்கார்ந்தான். எல்லாம் சௌக்கியமான்னான். சமையல்காரி கொடுத்த காப்பி சாப்பிட்டான். ரெண்டு தடவை 'உம்' கொட்டினான். வரேன்னு சொல்லிட்டுப் போயிட்டான்.''

''ம்'' மனத்தில் எழுந்த கோரமான எரிச்சலுடன் சோபாவில் நிமிர்ந்துஉட்கார்ந்தாள் புவனா. ''இதுக்கு என்ன அர்த்தம்...இப்படி வர்றது... போறது.... பேசறதில்லை... மனசிலே இருக்கிறதைச் சொல்றதில்லை. இதுக்கு முடிவுதான் என்ன... வாயைத் திறந்து பேசினால்–கொட்டியா போயிடும் அவங்களுக்கு...''

விவேக் பக்க வாட்டில் திரும்பித் தோட்டத்தைப் பார்த்தான். அவன் செய்கை



''நீங்கள் கேட்ட வரதட்சிணை ரூபாய் ஐயாயிரம் தரத் தயார்! ஆனால்...

''என்ன ஆனால்...

''டெல்லி பத்துமாக வீதம் தந்து விடுகிறேன்.''

புவனாவுக்கு இன்னும் எரிச்சலை மூட்டியது.

''ஆமாம்... நீ என்னதான் நெனைச்சுக் கிட்டிருக்கே... நீயும் அவங்க மாதிரி பேசா -ந்தைஆயிட்டியா? அவங்ககிட்டே சம்பந்தி னதும் நீயும் அவங்க மாதிரியே ஆயிட்டே.....''

விவேக் திரும்பினான். உதட்டோரத்தில் கேலிச் சிரிப்பு வழிந்தது.

''என்ன பேசச் சொல்றே...''

''அவங்களைக் கேக்கறது...''

''என்னன்னு... என் தங்கையைக் கூட்டிப் போய் ஒண்ணா இருன்னு கேக்கறதா....'' சிரிக்கிறான். ''நீ தயாரா.... இல்லே விவாகரத்துப் பண்ணுன்னு கேட்கலாமா... என்ன கேட்கட்டும்....''

அடிபட்ட மாதிரி நிமிர்ந்தாள் புவனா...

''சொல்லு புவன்... இப்போ நீ பேசு... இதுக்கு என்ன முடிவு.... நீ அவனோட சேர்ந்து வாழாம இருக்கக் காரணம்தான் என்ன... நீ எம்.ஏ. படிச்சு லெக்சரரா இருக்கே.... அவன் சாதாரண கேஷியர்... வெறும் மெட்ரிகுலேட்... அதாலே விலகிக்கிறியா.... இல்லே அவனோட அப்பா சாதாரணக் கடைக் குமாஸ்தாங்கறதாலே அவுங்க வீட்டுக்குப் போகக் கூடாதுன்னு இருக்கறயா.... அப்பா தப்புச் செஞ்சுட்டார்னு வச்சிக்குவோம்.... இதைச் சரி செய்யப் போறோமா இல்லே இரண்டு வருஷம் கழிச்ச மாதிரி இன்னும் இருபது வருஷத்தையும் இப்படியே கழிக்கப் போறியா.... நாலு வருஷம் முன்னே நான் எழுதின தீஸிஸ் ஒன்று தப்புன்னுதெரியறது ஒத்துக்கிட்டேன்· மாத்திக்கிட்டேன்.... ஆனா ரெண்டு வருஷம் முன்னே அப்பா செய்த முடிவு தப்புன்னும் தெரியலே சரின்னும் தெரியலே... தெரிஞ்சாலும் மாத்திக்க முடியாது....''

''அப்பா செஞ்சது தப்பா சரியான்னுகூட உன்னாலே புரிஞ்சுக்க முடியல்லியா... இவ்வளவு நாள் அப்பா தப்பு செஞ்சிட்டாரேன்னு சொன்னே...''

''இப்போ அப்படி உறுதியா நெனைக்க முடியல்லே...''

''உன் தீஸிஸ் மாத்தின மாதிரி அப்பா செஞ்சது சரின்னு சொல்லுவியோ...''

''ஆமாம் புவன்... ஒவ்வொரு அறிஞன் செஞ்ச முடிவிலேயும் விவாதங்கள் — மாறுபாடான எண்ணங்கள் உண்டு... ஒரு சந்தர்ப்பத்திலே நாம ஒரு முடிவு எடுக்கறோம்... பின்னாடி நம்ம முடிவு நமக்கே தப்பாத் தெரியறது.... அதே மாதிரி அன்னிக்கு அப்பா செஞ்சது தப்புன்னு நாம நெனைச்சோம்... இன்னிக்கு அது சரின்னு நான் நெனைக்கிறேன். நீயும் சீக்கிரமா அந்த முடிவுக்கு வருவேன்னு நம்பறேன்...''

''என்னா... திடீர்னு இப்படிக் கட்சி மாறிட்டியே ஏதாவது நியாயமான காரணம் உண்டா....''

''சாதாரண ஒருமெட்ரிகுலேட் உன்னை விட அனுபவஸ்தனா இருக்கான். அதை நீ தெரிஞ்சுக்கணும். குறைவாப் படிச்ச பெண்ணை ஆண்கள் அங்கீகரிக்கும்போது



வித்தியாசமான பல்லவன்!

● பல்லவன் பஸ் கண்டக்டர்களில் திரு. நெடுஞ்செழியன் சற்று வித்தியாசமானவர். அவரை நான் பேட்டி கண்ட சூழ்நிலையும் சற்று வித்தியாசமானதுதான். ஆம்! நான் அவரை ஓடும் பஸ்ஸிலேயே பேட்டி கண்டேன்.

எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்துவிட்டு விவசாயத்தில் டிப்ளமோ பட்டம் வாங்கி, பிறகு ஆசிரியர் பயிற்சியும் பெற்றவர் இவர். சொந்த ஊர் வேலூருக்கு அருகில் உள்ள வாலாஜா அம்மூர்.

மற்ற கண்டக்டர்கள் போல் வாயில் விஸில் வைத்து ஊதாமல், வலது கையில் ஆள்காட்டி விரலுக்கும், நடு விரலுக்கும் இடையில் விஸிலை வைத்து, கையை உட்புறமாய்க் குவித்து வயிற்றிலோ, தொடையிலோ தட்டுகிறார். விநோதமான ஒலி எழுகிறது. இவரது இந்த விஸில் எழுப்பும்முறை குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரையுமே ஆச்சரியப்பட வைக்கிறது. அனைவரையும் கவர்கிறது.

ஒரு நாள் காலையில் பெண்கள் கூட்டம் அதிகமாயிருந்தபோது ஒரு கல்லூரி மாணவர் நெடுஞ்செழியனிடம் ''கண்டக்டர் சார்! இந்த மானரிஸம் எல்லாம் நாங்கள் பஸ்ஸில் இருக்கும்பொழுது வேண்டாம். வண்டியில் ஒரு பெண்கூட எங்களைத் திரும்பிப் பார்க்க மாட்டேங்கறாங்க. அத்தனை பேரும் உங்களைத்தான் பார்க்கறாங்க. எங்களுக்குப் பொறாமையா இருக்கு'' என்று தமாஷாய்ச் சொன்னாராம்.

இவரிடம் காணப்படும் மற்றொரு கவர்ச்சியான அம்சம் பிராமணர்களைப் போலப் பேசுவது. இதுபற்றிக் கேட்டபோது சொன்னார்: நான் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவன் அல்ல; முதலில் 27-டி ரூட்டில் இருந்தேன். பின் 47-ஏ ரூட்டுக்கு மாற்றப்பட்டேன். இது பிராமண சமூகத்தினர் அதிகம் வாழும் பகுதிகள் வழியே போகிற ரூட். எனவே ''நாமும் அவர்களைப் போலவே பேசினால் என்ன?'' என்று தோன்றியது. ஒருசில பிராமண நண்பர்களுடன் பேசியும் அவர்களது

குறைவாப் படிச்ச ஆணைப் பெண்கள் ஏன் அங்கீகரிக்கிறதில்லே, புவன்?''

''நான் அந்த வர்க்கத்திலே சேராதவ!''

''அப்போ நீ படிச்சவங்கறதாலே ராஜா ராமனை ஒதுக்கலே....''.

''இல்லே....''

''அப்போ அவனோட நீ வாழ நெனைக்காததுக்கு என்ன காரணம்... அவன் அழகா இல்லேன்னு நீ சொல்லிட முடியாது. ஏன்னு உன் அழகோட அகங்காரம் அவன் கிட்டச் செல்லாத மாதிரி அவன் பார்க்க லட்சணமா இருக்கான். புத்திசாலி இல்லேன்னும் சொல்லிவிட முடியாது. அவனோட ஆபீஸ்ல போய்ப் பார் தெரியும். இவன் பேசறபோது குறுக்கே கூட மத்தவங்க பேசறதில்லே.... ஏதாவது கெட்ட சகவாசம், பழக்கம் உண்டுன்னு சொல்லிவிட முடியுமா உன்னாலே? ஒரு பொண்ணோட சுத்தறான்... குடிச்சிட்டுத் திரிஞ்சான்... இப்படி ஏதாவது சொல்ல முடியுமா அவனைப் பத்தி...''

கண்ணில் மளுக்கென்று சுரந்தது புவனுவுக்கு. ''அப்படிப்பட்டவர் இல்லேன்னுதான் எல்லோரும் சொல்றாங்க....''

''பின்னே என்ன கஷ்டம் உனக்கு?... சுந்தரேசன் எப்பேர்ப்பட்டவர்னு தெரியுமா உனக்கு? தெய்வம். அப்பா சுந்தரேசன் பேசிய எதுக்கும் மறுப்புச் சொன்னதில்லே. அவர் கிட்டே பேசவே பயப்படுவார். இத்தனைக்கும் அப்பா பெரிய வக்கீல். சுந்தரேசன் எண்ணித்தான் பேசுவார். பேச்சிலே நேர்மை இருக்கும். ரெண்டு வருஷமா நீ இந்த வீட்டிலே உட்கார்ந்து அவங்களுக்கு எவ்வளவு அவமானத்தைக் கொடுத்திருக்கே தெரியுமா உனக்கு... அவங்க நெறைய நொந்து போயிருக்காங்க. ஆறு தவறி ஒரு பேச்சுப் பேசினதில்லே. பல சந்தர்ப்பங்களிலே அவங்களைப் பார்க்க நேர்ந்தது. புவனு சௌக்கியமா இருக்காளா, அவ மனசு நோகாமப் பார்த்துக்கோங்கங்கறதைத் தவிர வேறு பேச்சுப் பேசியதில்லே!

''அதை விடக் கொடுமை... மாசம் ஒரு தடவை வர்றான் போறான். எத்தனை தடவை நீ வீட்டிலேயே இருந்திருப்பே. ஒரு தடவை அவன் கண்ணிலே பட்டிருப்பாயா? ஒரு காப்பி உன் கையால தந்திருப்பியா? அவன் என்ன கிழவனா? அவன் மனசிலும் ஆசைகள் இருக்காதா? இதெல்லாம் உனக்கு ஏன் புரியலே? அந்தக் குடும்பம் சாதாரண குடும்பமே இல்லே. யாராவது உன்னை ஒரு பேச்சுப் பேசியதுண்டா — ராஜாராமன் தவிர வேறு எந்தக் குடும்பத்திலேயாவது சம்பந்தம் செய்து இப்படி நடந்திருந்தா... அட்வகேட் சாரதியோட குடும்பம் கோர்ட்டுக்கு வந்திருக்கும். மானம் கப்பலேறியிருக்கும்.... பொறுமையா அது! பூமி தாங்காத பொறுமை....''

தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் மெள்ள அழ ஆரம்பித்த அவளை அதிகமாகக் கடிந்துவிட்ட உறுத்தலுடன் அவளுக்கு அருகில் வந்து உட்கார்ந்தான் விவேக்.

''இதோ பார் புவன்... வாழ்க்கையில் எதிர்பார்ப்புகள் சகஜம். கல்யாண விஷயத்திலே உன் எதிர்பார்ப்புகள் அதிகமாக இருந்தது. கிடைத்தது குறைவாக இருந்தது. அதை உன்னால் தாள முடியவில்லை. ஒதுங்கி நிக்கறே. நாம கிடைக்க முடியாத சந்தோஷங்களுக்காக சூனியத்தைப் பார்க்க, கற்பனைகளின் ஏமாற்றங்களுக்காக நிஜ வாழ்க்கையைப் பாழாக்கிக்கறோம்....''

அப்படியே உட்கார்ந்து இருக்கிற புவனுவுக்கு விவேக் போன உணர்வுகள் கூட ஏற்படவில்லை. ஒரு புதுமையான ரீதியில் சிந்திக்கிற ஆற்றலை மனத்தில் விவேக் ஏற்படுத்தியிருக்கிறான்.

பேச்சுக்களை எழுதி மனப்பாடம் செய்தும் இப்படி பேசக் கற்றுக்கொண்டேன்.

''சில வயதான மூதாட்டிகளிடம் பிராமண மொழி பேசினால் அவர்களைக் கிண்டல் செய்வதாய்த் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டார்களா?''

''நானும்அவர்களைப் போல்பேசுவதால்என்னை அவர்கள் வீட்டுப் பிள்ளை என்ற எண்ணத்தில் எடுத்துக்கொள்வார்களே தவிர, தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

தினமும் என் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பெரியவர் ஒருவர் (அவரும் பிராமணர் தான்) சென்ற தீபாவளிக்குச் சிலநாட்களுக்கு முன்பு ''நீ எங்கள் வீட்டுப் பிள்ளை போல! தீபாவளி அன்று நீ கட்டாயம் எங்க வீட்டுக்கு வரணும்; எங்களோட சாப்பிடணும்'' என்று கேட்டார். நானும் தீபாவளி அன்று அவர்கள் வீட்டில் விருந்து சாப்பிட்டேன்'' என்றார் நெடுஞ் செழியன். 47-ஏ பஸ் ரூட்டில் எந்த அளவுக்குப் பயணிகளின் அன்புக்குப் பாத்திரமாகியுள்ளார் இவர் என்பதற்கு இது ஓர் உதாரணம்.

தமிழ், ஆங்கிலம் தவிர ஓரளவு இந்தி தெரிந்த இவர், 'ராமாயி வயசுக்கு வந்துட்டா' திரைப் படத்தில் பஸ் கண்டக்டராக ஒரு காட்சியில் வருகிறார். 27-டி. ரூட்டில் பணியாற்றுகையில் 'சிறந்த கண்டக்டர்' பரிசையும் பெற்றிருக்கிறார்.



''பயணிகள் பின்புற படிக்கட்டுகள் வழியே ஏறி, முன்புறப் படிக்கட்டுகள் வழியே இறங்குவதையும், தாமாகவே டிக்கட்டுகளைக் கேட்டு வாங்குவதையும், முன்னால் நகர்ந்து, வரும் பயணிகளுக்கு இடமளிப்பதையும் வழக்கமாய்க் கொண்டால் பல்லவன் ஊழியர்கள் இன்னும் சிறப்பாக மக்களுக்குச் சேவை செய்ய முடியும்'' என்கிறார் சுமார் எழுபது பஸ் ஸ்டாப்புக்களைக் கொண்ட பெஸண்ட் நகர் ஐ.வி.எப். ரூட்டில் பயணத்தை போரடிக்காது இன்பகரமானதாக்கும் நெடுஞ்செழியன்.

பேட்டி : கமல நயனன்

'ராஜாராமனிடம் என்ன குறை?' இரண்டு நாளாக மனசு குடைகிறது. குறைகளைக் காணோம். நிறைகளை யோசிக்கிறாள். நிறைய வருகிறது. அதனால் புவனேஸ்வரி எம். ஏ. அஸிஸ்டெண்ட் புரபஸர் விவகாரம் தெரு வுக்கு வரவில்லை. சுந்தரேசன், ராஜாராமன் பொறுமையால் கோர்ட்டுக்கும் போக வில்லை. அவர்கள் சூழ்நிலையில் தான் 'வாழ முடியாது என்று நினைப்பது உண்மை யாகவே பரிணாமத்தின் வளர்ச்சியைத் தடைப் படுத்துகிற கோழைத்தனம்தான்... இதே சிந்தனையில் இரண்டு நாட்கள் கழிகின்றது.

''புவன் காப்பி கொண்டா...''

செருப்புச் சத்தத்தால் அன்னியர் யாரோ வந்திருப்பது புரிந்து, காப்பி கலந்துகொண்டு ஹாலுக்கு வருகிறபோது அங்கே விவேக்குடன் உட்கார்ந்திருக்கிற ராஜாராமனைப் பார்த்து உடல் குப்பென்று வியர்க்கிறது. நடை தள்ளாட காப்பி ட்ரேயை வைத்துவிட்டு ஹாலை ஒட்டினாற் போல இருக்கிற நிலைப் படியில் மறைந்து நிற்கிறாள்.

''சௌக்கியம்தானே புவன்...''

ராஜாராமனின் குரல் எந்தவிதத் தடு மாற்றமுமில்லாமல் கணீரென்று ஹாலில் ஒலிக்கிறது. என்ன மனிதர் இவர்! எப்படி இவ்வளவு சௌஜன்யமாக இவரால் பேச முடிகிறது....?

''சௌக்கியந்தான்...'' இரண்டு வரு ஷத்தில் முதல் முதலாக ராஜாராமனிடம் பேசிய இந்த வார்த்தைகள் வெளிவருவ தற்குப் படாத பாடு படுகிறது. மேற் கொண்டு என்னவாவது பேசவேண்டும் என்று மரியாதை சொல்லிக் கொடுக்கிறது.

''மாமா சௌக்கியமா இருக்காரா...''

''ம்....''

''அத்தை....''

''சௌக்கியமா இருக்காங்க....''

''நீங்க....'' என்று கேட்க வேண்டும் என்று மனத்தில் பட்ட வார்த்தை நாக்குக்கு வரு கிறது. நாக்கில் வார்த்தையின் கனம் ஏறி நிற்க நாக்கு புரள மறுக்கிறது.

அன்னியோன்னியமும், சௌஜன்யமும் ஆசையும் பிரிந்திருப்பதால் விட்டுப் போவ தில்லை என்று புரிந்து கொள்கிற விவேக், இப்போது அவர்கள் மத்தியில் தான் ஒரு மூன்றாம் மனிதனே என்று உணர்ந்து எழு கிறான்.

''நீங்க பேசிட்டு இருங்க... எனக்கு அவ சரமா வேலை இருக்கு...''

விவேக் போவதைப் பார்த்தவாறு இருந்து விட்டுத் திரும்பும் புவனா, ராஜாராமின் பக் கம் திரும்புகிறபோது அவன்' பார்வை தன்மேல் நிலைத்துப் போயிருப்பதைப் பார்க் கிறாள். உடலில் உணர்ச்சிகளின் வெள்ளம் தாறுமாறாக ஓடுகிறது. அவன் பார்வையைத் தாளமுடியாது தலை குனிகிறது. குற்ற உணர்வு உந்த அதனாலோ அல்லது வேறு எதனாலோ சரசரவென்று கரக்கிற கண்ணீர் தரையில் துடித்து விழுகிறது.

ராஜாராமன் எழுந்து அவளை நோக்கி அடியெடுத்து வைக்கிறபோது அவன் ஸ்பரி சத்தின் வேட்கையால் புவனாவின் உடல் தள்ளாடுகிறது. நான்கு எட்டுக்களில் ஒரு புயல் உருவாக இருக்கிறது....

இப்போது அங்கே அவர்களுக்கு மத்தியில் என்னவும் நடக்கலாம். இனிமையான தாம் பத்தியத்தை அனுபவிக்காது அவளாக ஏற்படுத்திக்கொண்டிருந்த ஒரு பெரிய அணை உடைகிறபோது நடக்கப் போகிற சம்பவங் களின் விவரங்களைவிடக் கற்பனை இதமான சுகம்.....



சீறுகருப்பாய் இருந்தது. தேன் கூடு போல.

சர்க்கஸ் கூடாரத்தினுள் நுழைந்தவுடனேயே வலப்பக்கம் ஏழெட்டு யானைகள்—மலைகளும், குன்றுகளுமாய்.

இடப் பக்கம் ஏழெட்டு ஒட்டக பிரமிடுகள். குறுக்கிலும் நெடுக்கிலுமாய் ஏகப்பட்ட ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்.

பின்புறத்துக் கூண்டுகளிலிருந்து கேட்கும் கர்ஜனைகள், உறுமல்கள்.

நம் கண்ணில் தட்டுப்படுகிற முதல் நபர் அப்பா ராவ். ''நமஸ்காராலு'' என்கிறார் சுந்தரத் தெலுங்கில்.

''என்ன செய்கிறீர்கள்?''


''மீன் சாப்பிடுகிறேன்!''

''சர்க்கஸில் என்ன வித்தை செய்கிறீர்கள் என்று கேட்டேன்.''

''அதான். மீன் சாப்பிடுகிறேன். உயிரோடு இருபது மீனை விழுங்கி, மறுபடி அவைகளை உயிரோடு வெளியே எடுக்கிறேன்.''

செய்து காட்டச் சொல்கிறோம்.

பக்கெட் தண்ணீரை மடமடவென்று குடித்து, மீன்களை 'காப்ஸ்யூல்' மாதிரி விழுங்க,




சற்றுக் கழித்து வாய் மூலம் பீச்சியடிக்கும் தண்ணீர்பிரவாகத்துடன் அந்த மீன்கள் மறுபடி ஜனிக்கின்றன.

''வயிற்றின் மேல்ஏதாவது பையை வைத்துக் கொண்டு அதில் மீன்களைப்போட்டுத் தண்ணீர் ஊற்றிப் பாவலா செய்கிறீர்களோ?''

அப்பாராவ்காரு கலகலவென்று நகைக்கிறார்.

''மீ மாரிகானே ஒக டாக்டருகு வெல்லூர்லே சந்தேகம் வந்தது. நான் மீன் சாப்பிட்டதும் பேரியம் மீல் குடுத்து

இந்திய சர்க்கஸுக்கு ஜீரணம்



எக்ஸ்ரே டெஸ்ட் செஞ்சாரு. அவர் தந்த சந்நாது இருக்கு. சூஸ்தாரா?''

சூஸினோம். சந்நாது சான்று சொன்னது.

''எப்படி இது சாத்தியம்?''

''ப்ராணயாமம்.''

''அண்ட்டே?''

''தண்ணி சாப்பிடும் போது மூச்சை அடக்கி, காத்து உள்ளே போகாம பாத்துக்கணும். எல்லா மீனும் உள்ளே போன

தும் வயிற்றுத் தசை எல்லாம் சுருக்கி பம்ப் பண்ணி வெளியில் துப்பணும். அர்த்தம் அவ்வளவுதானா? எல்லாம் கண்ட்ரோல் சார். செய்யுற வேலையிலே கட்டுப்பாடு வேணும்.''

சின்னச் சின்னக் கூடாரங்களிலிருந்து சமையல் மணம் கமழ்கிறது.

ஒன்றிலிருந்து மாக்ஸியில் வெளிப்படுகிறாள் ஒரு யுவதி. முகத்தில் மங்கோலிய லக்ஷணம். பெயர்?

''மிஸ் ப்யூட்டி.'' (காரணப் பெயர்தான்)

''அம்மா அஸ்ஸாம்காரி, அப்பா சீனத் தவர்.''

உடம்பை வளைத்து, காலால் தலையை, கையால் இடையை, விரலால் முதுகை — பார்த்துக் கொண்டிருக்கும் நமக்கு முதுகு சுளுக்கிக் கொள்கிறது.

''பயிற்சிதானே?''

''பத்து வயதிலிருந்து பயிற்சி. விடாமல் பயிற்சி. பத்து நாள் விட்டுப்போனால் அப்புறம் செய்ய முடியாது. தினம் தினம் காலையில் அப்யாஸம். மூன்று தரம் ஷோ.' மலரப் புன்னகைக்கிறார்.

''நீங்கள்?''

''ப்ரேமா.''

''கேரளாவா?''

''தூத்துக்குடி. இதோ கௌஸல்யா. இவள் கேரளா. — தலைச்சேரி.''

''என்ன வித்தைகள் அப்யாஸம்?''

''இரண்டு பேருமே சைக்கிள் வித்தைகள் செய்வோம்.''

செய்கிறார்கள்.

''முன்னே ஆகாச ஊஞ்சல் ஆடுவோம். இப்போது இல்லே.'

''இவர்?''

''மிஸ்டர் பாலன். ஜீப்பை வேகமாக ஓட்டி ஹைஜம்ப் செய்வார்.''

''பழக்கம் ரொம்ப முக்கியமா?''

''பழக்கம்தான். வேகத்தில் ஒரு நிர்ணயம். செயலில் கவனம் முக்கியம்.''

''ரிங் மாஸ்டரா இருக்கிறீர்களே மிஸ்டர் கிருஷ்ணன். ரொம்ப ஆபத்தான வேலை ஆயிற்றே. மிருகங்கள் அறைந்தால்?''

''எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும். எந்தப் பக்கத்திலிருந்து தாக்குதல் வந்தாலும் சமாளிக்க வேண்டும்..''

கை கூப்பிவிட்டு வெளியே வருகிறோம்.

எப்போதும் விழிப்பாக இருக்க வேண்டும்.

எந்தப் பக்கத்திலிருந்து தாக்குதல் வந்தாலும் சமாளிக்க வேண்டும்!

செயலில் கவனம் முக்கியம்.

செய்யுற வேலையில் நமக்குள் கட்டுப்பாடு இருக்கணும்!

—எல்லாரும் சொன்னது நினைவில் அலை பாய்கிறது.

இவை நூற்றாண்டு காணும் இந்திய சர்க்கஸுக்கு மட்டுமா முக்கியம்?

வாழ்க்கைக்கும்தான்!

-ரமணீயன்

மௌன கீதங்கள்





● தமிழில் கமலுக்கு அடுத்தபடி நகைச்சுவையுணர்வு கொண்ட ஆல் ரவுண்டர் பாக்யராஜ். சீரியஸ் கதையை லேசாய்ச் சொல்லி வெற்றி பெறுகிறார். கணவன் மேல் கொண்ட அபார அன்பால் அற்ப விஷயத்தை யெல்லாம் பெரிதாக்கிவிடும் கேரக்டரை சரிதா மிக நேர்த்தியாகப் பின்னியிருக்கிறார்.


கணவனை டைவர்ஸ் செய்துவிட்டுக் குழந்தையுடன் வாழும் மனைவி மீண்டும் கணவனைத் தன் ஆபீஸில் மானேஜராகச் சந்திக்கிறாள். சக ஊழியன் ஒருவனால் வீண்பழி சுமத்தப்படுகிறாள். முடிவைச் சொல்வதில் பாக்யராஜ் பாணி தெரிகிறது.

முடிவு? — திரையில். (பாக்யராஜ், சரியா?) டைரக்டர் பாக்யராஜ் திரும்பவும் ஒருபடி மேலேறி விட்டார். கதை-வசன பாக்யராஜிடம் பேனா குறும்புடன் விளையாடுகிறது. நடிகர் பாக்யராஜ் மிக இயல்பு. சொந்தக் குரல்தான் கொஞ்சம் பாதிக்கிறது.

படத்தில் எல்லோரையும் தூக்கிச் சாப்பிடுவது குட்டிப் பையன். அப்பா போலவே அபிநயித்து, பேசி, அம்மாவைப் பேச்சால் மடக்கி — டக்கர்.
கஷ்டப்படுத்தாத கேமிரா — கவனமான கங்கை அமரன் — எஃபக்டிவான எடிட்டிங்.

—நளினி சாஸ்திரி

நன்றி மறந்தவர் குன்றி அழிவர்



திருமுருக கிருபானந்தவாரியார்

நமது தமிழ் நாட்டை அரும் பெரும் புலவர்கள் அவ்வப்பொழுது அலங்கரித்து வந்தார்கள். புலவர்களாலே நாடும், ஊரும் புகழ் பெறும்.

கம்பன் பிறந்த தமிழ் நாடு என்றார் பாரதியார். அவர் பிறந்ததினாலே தேரழுந்தூர் புகழ் பெற்றது. சேக்கிழார் பெருமான் அவதரித்ததினால் குன்றத்தூர் புகழ் பெற்றது. ராமானுஜ அய்யங்கார் பிறந்ததால் அரியக்குடியும், நயினா பிள்ளையால் காஞ்சீபுரமும், அருணாசலத்தால் காரைகுறிச்சியும் புகழ் பெற்றன.

பதினாலாம் நூற்றாண்டில் சோழ வளநாட்டில் செங்காட்டங்கோட்டத்து உறையூர் என்ற ஊரிலே பொய்யாமொழி என்ற புலவர் பெருமான் தோன்றினார். அவர் அம்பிகையின் அருளால் கவி பாடும் ஆற்றல் பெற்றார். புவிராஜரும் போற்றும் கவிராஜராக விளங்கினார்.

நேரிசை வெண்பா

பொதியில் அகத்தியனும் பொய்யா மொழியாய்
நிதைவில் புலவர் சிகையாய் — துதிபெருகு
செங்காட்டங் கோட்டத் துறையூர் எனுந் தலத்தில்
தங்காட்டங் கொண்டிருப்பாய் தான்.

என்று இவரைப் பற்றி இவருடைய ஆசிரியர் புகழ்ந்து பாடினார்.

இவருடைய நல்வாக்கு செல்வாக்கு பெற்றிருந்தது. இவருடைய செந்தமிழ்ப் பாடல்கள் நடையழகும், தொடையழகும், சொல்லழகும் பொருளழகும் பெற்று விளங்கின.

"மூர்த்தி தலந் தீர்த்தம் முறையாய்
தொடங்கினர்க்கோர்
வார்த்தைசொல சற்குருவும்
வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமானார் கூறியபடி ஆன்றோர்கள் திருத்தலங்கள் தோறும் சென்று இறைவனை வழிபடுவார்கள்.

பசுவின் உடல் முழுதும் பால் பரவி இருப்பினும் அதன் மடி மூலமாகவே பாலைப் பெற முடியும். அது போல் இறைவன் யாண்டும் நீக்கமற நிறைந்திருப்பினும் திருக்கோவிலிலுள்ள திருவுருவங்களின் மூலமாகத் திருவருளைப் பெற முடியும். அதனால் பொய்யாமொழிப் புலவர் சிவத் தலங்கள் தோறும் சென்று சிவபெருமானை வழிபடுவாராயினர்.

ஒரு சமயம் காளையார் கோயில் என்று வழங்குகின்ற கானப்பேர் என்ற திருத்தலத்தை அணுகிச் சிவமூர்த்தியைத் தரிசித்து உள்ளம் உருகிக் கண்ணீர் வெள்ளம் பெருகி, மெய் சிலிர்த்து, கர மலரை சிரமலர் மீது கூப்பி வழிபட்டார்.

அப்பொழுது அங்கு பிரம்மோற்சவம் நிகழ்ந்து கொண்டிருந்தது. சுவாமி மகா மண்டபத்தில் எழுந்தருளியிருந்தார். அடியார்களின் கூட்டம் நிறைந்திருந்தது.

இயல் இசை நாடகம் என்ற முத்தமிழுக்கும் அறுபத்து நாலு கலைகளுக்கும் ஆலயம் விளைநிலமாக இருந்தது. ஆலயத்தில் கலைஞர்கள் தங்கள் கலைகளை வளர்த்து வளஞ் செய்தார்கள். அறுபத்து நாலு கலைகளில் நடனக் கலை உயர்ந்தது. ப-பாவம், ர-ராகம், த-தாளம், என்ற பாவ, ராக தாளம் இந்த மூன்றும் திகழ்வதனால் அந்தக் கலை பரதக் கலை என்று பெயர் பெற்றது. இந்தக் கலைக்கு உருவாகத் திகழ்பவர் சிவபெருமான். ஆடவல்லான் என்றும், பரத குரு என்றும் சிவபெருமானைப் பரவுவார்கள்.

"திமிதமென முழவொலி முழங்கச்
செங்கைத்
தமருகம் ததிர்சதியொ டன்பர்க் கின்பத்
திறமுதவு பரதகுரு வந்திக் குஞ்சற்
குருநாதா"

என்று அருணகிரி நாதர் பாடுவதிஞல் இது விளங்கும்.

சுவாமிக்கு முன் கூத்தாள் என்ற இளம் கணிகைப் பெண் தக்க பக்க மேளத்துடன் நடனம் ஆடிக் கொண்டிருந்தாள். நடனத்தில் கைவழியே கண்ணும், கண் வழியே கருத்தும் சென்று, தொழில்பட வேண்டும்.

கூத்தாள் என்ற இளம் பெண்ணின் குரல் குயில் போல இனிமையாகக் கேட்பவர் பரவசமடையுமாறு தேனென தித்தித்திருந்தது. மெருகிட்ட தங்கச் சிலை போல் அவள் விளங்கிஞள். கூத்தாளுக்கு எல்லா அங்கங்களிருந்தும் சிறந்த அங்கமாகிய கண் மட்டும் இல்லை. கண்ணில்லாத கலை உப்பில்லாத சமையல் போல் பொலிவு குன்றி யிருந்தது.

எண்ணற்ற நலங்களையுடைய கூத்தாள் கண்ணற்று நடனம் ஆடுவதை ஒருபுறமிருந்து பொய்யா மொழிப் புலவர் கண்டு களித்தார். அவர் உள்ளத்தில் அவள் மீது கருணை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

''அந்தோ, இத்தனை அழகும், இனிய குரலும், கலைத் திறனும் ஒருங்கே படைத்த இப்பெண்மணிக்குக் கடவுள் கண்ணைக் கொடுக்கவில்லையே? இவளுக்குக் கண் இருந்தால் இவளுடைய நடனக் கலை இமயம் போல் ஓங்கியிருக்குமே! இறைவா! இவளுக்குக் கண் மலர் கொடுத்தருள்வாயாக!''
என்று இறைவனை வேண்டி
''கூத்தாள் விழிகள் கூர்வேலாம்'
என்று கூறி வாழ்த்திஞர்.

அந்தக் கணமே அவள் கண் பெற்ருள். இப்பொழுது அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லை யில்லை.

கூத்தாளுக்குப் பின் பாட்டுப் பாடிக் கொண்டிருந்த அவளுடைய தமக்கையும் கண் இல்லாதவளாக இருந்தாள். அவள் தங்கை கண் பெற்றதை அறிந்து புலவரைத் தொழுது, ''ஐயனே! எனக்கும் அருள் புரியும்'' என்று வேண்டிஞள்.

புலவர் திருவுளம் இரங்கி,
''கூத்தாள் தன் மூத்தாள் விழிகள்
முழு நீலம்'.
என்ருர். உடனே அவளும் கண் பெற்றுக் களித்தாள். அந்த இருவருடைய தாயார் தம்புராவை மீட்டிக் கொண்டிருந்தாள். அவளும் கண்ணில்லாதவள். புலவரைத் தொழுது ''எனக்கும் அருள் செய்யுங்கள்'' என்று வேண்டிக் கொண்டாள்.

''மூத்தாள் தன்
ஆத்தாள் விழிகள் அரவிந்தம்''
என்று புலவர் வாழ்த்தி யருளிஞர். உடனே அவளும் விழி பெற்று மகிழ்ந்தாள். அந்தத் தாய்க்கும் தாய் தாளம் போட்டுக் கொண்டிருந்தாள். அவளும் கண்ணில்லாதவள். அந்த முதுபெரும் கிழவி பாவலரை வேண்டிப் பரவிஞள். பாவலர்,

''ஆத்தாள் தன்
ஆத்தாள் விழிகளிரண்டம்பு''
என்று பாடி அவளைக் கண் பெறச் செய்தார்.

இவ்வாறு நான்கு பெண்களும் கண் பெற்று நலம் பெற்ருர்கள். அந்தப் பாடலின் முழு வடிவம் இது:

கூத்தாள் விழிகள் கூர்வேலாம் கூத்தாள்தன்
மூத்தாள் விழிகள் முழுநீலம்-மூத்தாள்தன்
ஆத்தாள் விழிகள் அரவிந்தம் ஆத்தாள்தன்
ஆத்தாள் விழிக ளிரண்டம்பு.

இந்த அதிசயத்தைக் கண்டு மக்கள் மகிழ்ந்து, புலவரை வணங்கிப் புகழ்ந்தார்கள்.

பொய்யா மொழிப் புலவர் கைம்மாறு கருதாத கடப்பாடுடையவர். மக்களின் புகழையும், கூத்தாளின் நன்றியையும் எதிர் பார்க்கவில்லை. மதுரை முதலிய திருத் தலங்களைத் தரிசித்துக் கொண்டு காளையார் கோவிலுக்கு மீண்டும் வந்தார். அப்பொழுது பனிக் காலமானதிஞல் படுக்கும் இடத்தை நாடிக் கூத்தாளுடைய மாடி வீட்டை அடைந்து, கதவைத் தட்டி, படுக்க இடம் தருமாறு கேட்டார். அவள் செல்வச் செருக்கால் நன்றியுணர்வு இன்றி, ''போமய்யா போம்! புலவருக்கு இங்கென்ன வேலை? இரும்புப் பட்டறையில் ஈக்கென்ன வேலை?'' என்று கடிந்து கூறிஞள். புலவர் இடம் தருமாறு கெஞ்சிஞர். கணிகை இடம் தரமாட்டேன் என்று மிஞ்சிஞள்.

புலவருக்குக் கோபக் கனல் பொங்கி எழுந்தது.
''பழைய குருடி கதவைத் திறவடி!''
என்று கூறிஞர்.

உடனே உள்ளே இருந்த நால்வரும் கண் இழந்து விட்டார்கள். நால்வர்களும் நலம் குன்றி நலிந்தார்கள்.

வம்பன் வெங்கு



செய்தி: அரசியலிலிருந்து பி.டி. சரஸ்வதி ஓய்வு.

வெங்கு:
அரசியல் பி. டி., சரஸ்வதிக்கு ஓய்வு அளித்தது என திருத்திப் படிக்கவும்

செய்தி: வள்ளுவர் கோட்டம் 'ஏர் கண்டிஷன்' செய்யப்படலாம்?

வெங்கு:
சுழன்றும் 'ஏர்-கண்டிஷன்' பின்னது உலகம்.

செய்தி: மலிவு விலையில் பொருள்கள் கோரி அரசு ஊழியர்கள் போராட்டம்.

வெங்கு:
மலிவு விலையில் பொருள்கள் கிடைக்குமோ இல்லையோ கோரிக்கைகள் மலிந்து விட்டன என்பது நிச்சயம்.

பேதமைகள்!

ஐசக் அருமைராஜன்



அவனை நான் எதிர்பார்க்கவே யில்லை. திடுக்கிட்டுப் போனேன். செத்துப்போனான் என்று நம்பப்பட்ட இவன் இப்போது இதோ வந்து நிற்கிறான்.

புதுக்குடிக் கிராமத்தைப் பொறுத்தவரை இவன் செத்துப் போய் இரண்டுவருடங்கள் ஆகிவிட்டன. ஏதோ ஒரு ரயில் விபத்தில் இவன் போய்விட்டதாக வந்த செய்தி இன்று அறவே மறந்து போன விஷயம்.

நான் சமாளித்துக் கொண்டு அவனை வரவேற்றேன். வெளியே இலேசாக மின்னல் அடித்துக் கொண்டிருந்தது.

''வா...வா... சுந்தர்!''

அவன் உள்ளே நுழைந்தான். முன்னறை நாற்காலியில் உட்கார்ந்தான்.

அவனைக் கூர்ந்து நோக்கினேன். பெரிய மீசை வைத்திருந்தான். கண்கள் இலேசாக மண் நிறம் பெற்றிருந்தன. தலை முடி ஒழுங்காக வாரப் பட்டிருந்தது. சட்டை சுத்தம். கால் சட்டை 'பாக்கட்'டில் தடித்த 'பர்ஸ்' துறுமிக் கொண்டிருந்தது. என் இதயத் துடிப்பு அதிகரித்தது. இலேசாக வியர்வை உறுத்த ஆரம்பித்தது.

என் மனைவி... சுலோசனா உள்ளே கட்டிலில் உறங்கிக் கொண்டிருக்கிறாள்.

''உனக்குக் கல்யாணமாயிட்டுனு நினேய்க்கேன்'' என்றான் அவன்.

''ஆ...ம்....மாம்'' என்றேன் நான். என் நா வறண்டு உமிழ்நீர் வற்றிப் போய் விட்டது.

''உனக்கென்ன...?'' என்றான் அவன். ''அப்போதே நீ பெண் வேட்டையில் கெட்டிக் காரன். குறி வச்சத எடுக்காம விட்டதில்லே!''

''ச்சூ'' என்றேன் நான்.

''இப்பவும் பாங்லதான் வேலையா?''

''இல்லே'' — மனத்தில் படிப்படியாகத் துணிவு ஏற்பட்டது. ''பாங்க்ல ஒரு மோசடி கேஸ்ல மாட்டிக்கிட்டேன்.... இப்ப வியாபாரம்.''

''என்னது அது வியாபாரம்?''

''தோல் வியாபாரம்... பல இடங்களுக்கு அனுப்புறேன்... வெளி நாடுகளுக்குக் கூட.''

''நல்ல வியாபாரம். உனக்கு ரொம்பப் பொருத்தம்... அப்பவே உனக்குத் தோலு ரெஜிஸ்டர்தானே'' என்று கூறிவிட்டுப் பெரிதாகச் சிரித்தான் அவன்.

எனக்கு ஒரு மாதிரியாக இருந்தது. இவன் இந்த இராத்திரி வேளையில் அதுவும் பதினொரு மணிக்கப்பால் ஏன் என் கதவைத் தட்டி உள்ளே வந்தான் என்று என்னால் உணர முடியவில்லை. நேரே என் வீட்டுக்குத்தான் வருகிறானா... அல்லது ஏற்கனவே ஊருக்கு வந்து எல்லா விசயங்களையும் அறிந்து விட்டு இங்கே வருகிறானா....?

''பாஸ்கர்... நான் என் மனைவியைப் பார்க்கத்தான் புதுக்குடிக்கு வந்தேன்.... ஆ... நீ என்னைப் பற்றி ஒன்றுமே கேட்கவில்லையே... இந்த இரண்டாண்டுகளில் நான் எங்கிருந்தேன் என்று கேட்பாய் என்று எதிர்பார்த்தேன். ஆனால் நீ என்னைக் கண்டதும் பேய் அறைந்தவன் போல் ஆகி விட்டாய்!''

''இல்லே...இல்லே... கேட்கத்தான் நினைத்தேன்...இப்பச் சொல்!''

''நான் என் மனைவியை இங்கே விட்டுட்டுப் பணம் தேடத்தான் போனது;வட நாட்டுக்குப் போனேன். ஆனால் உத்தரப் பிரதேசத்தில் ஒரு கேசில் சிக்கி இரண்டு வருஷம் உள்ளே கிடந்தேன்....!''

''அப்ப, ரயில் விபத்தில நீ இறந்ததா ஒம் பேரு வந்ததெல்லாம்....?''

''அதுக்கும் எனக்கும் சம்பந்தமே இல்லே. அது எவனோ எனக்குத் தெரியாது. ரெண்டு வருஷம் நான் உத்தரப் பிரதேஷ் ஜெயில்ல கெடந்தேன்.''

''ச்சூ!''

''விடுதலை கெடச்சதும் இங்கே ஓடி வந்தேன்... ஜெயில்லே இருந்து இவளுக்கு லெட்டர் எழுத நெனச்சேன்.... ஆனா ஜெயில்லே இருந்து எழுதறது எப்படின்னு விட்டுட்டேன்.''

''ம்''... என் உடல் இலேசாக நடுங்கியது!

''இங்க வந்து கேட்ட துக்கப்புறம்தான் தெரிஞ்சது, என் மனைவியை நீ வைத்திருப்பதாக....''

நான் திக்பிரமை பிடித்து அவனைப் பார்த்தேன்.


நான்—பாஸ்கர், புதுக்குடி கிராமத்தில் மோசமான ஆள். கிராமத்தில் என்னை அசைக்க ஒருத்தனுமில்லே. இஷ்டம் போல வாழ்ந்தவன்.

பாங்கில் மோசடி செய்ததற்குப் பின், வழக்கில் மாட்டிக் கொள்ளாமல் தோல் வியாபாரத்தில் ஈடுபட்டு அதிகமாகவே சம்பாதிக்கிறேன். ஆட்டுத் தோல், மாட்டுத் தோல், இவற்றை விலைக்கு வாங்கி வெளி இடங்களுக்கு அனுப்புகிறேன். தோல் பதனிடும் கலை எனக்குத் தெரியும். சில நேரங்களில் பாம்புத் தோலும் என் வியாபாரப் பொருள்.

சுந்தரின் மனைவி சுலோசனா நல்ல அழகியாக இருந்தாள். வண்டிப் புரையில் ஒரு விவசாயியின் மகள். சுந்தர் இவளைக் கல்யாணம் செய்து இங்கே கொண்டு வந்தபோது பலருக்குப் பொறாமையாகவே இருந்தது. இளஞ் சிவப்பு; கூந்தல் அடர்த்தியான சுருள்; உதடுகள் காம்பெடுத்த ரோஜாவின் இளம் மொட்டாக இருக்கும். கழுத்தில் வழுவழுப்பு தொட்டுப் பார்த்தால்தான் தெரியும். வேறே உம். சொல்ல முடியாத வனப்பு!

என் திமிர் பிடித்த கண்கள் அப்போதே அடங்கவில்லை. சுந்தரோடு பழகிப் பார்க்க நினைத்தேன். அவள் இடந்தரவில்லை.

ஆனால் சுந்தர் ஊரை விட்டுக் கிளம்பிய பின்னர் திரும்பி வராதபோது: அவள் அநாதையாகி விட்டாள். அவளுடைய தகப்பனார்



ஏற்கனவே இறந்து போய் விட்டார். சுந்தருக்கும் பெற்றோர் கிடையாது. நான் ஒரு மாதம் முயன்றுதான் அவளை இங்கே கொண்டு வந்தேன். அதற்கு ஒட்டன் வடிவேலு அதிகம் துணை செய்தான். என் வசதியான வாழ்வும். பெரிய வீடும், வடிவேலுவின் தரகு வேலைகளும் ஒரு மாதத்தில் பலன் தந்தாலும் எல்லைப்புறத்துச் சொன்னமாடன் கோயிலில் வைத்துத் தாலி கட்டினால்தான் ''ஆச்சு'' என்று அவன் பிடிவாதம் பிடித்து அதன்படி நடந்தது. வண்டிப்புரையிலிருந்து இவள் அம்மாக்காரி அப்போது வந்திருந்தாள்.

இரண்டு வருடங்களாகி விட்டன. நிரந்தர மனைவி ஸ்தானத்தை அவள்பெற்றுவிட்டாள். அவள் வந்ததற்குப் பின் நானும்தான் எவ்வளவு மாறிவிட்டேன்! உடல் பசியெல்லாம் நீங்கி... ஒருவகையான பரிசுத்தத் தன்மையில்....ச்சூ....

ஆனால், இவன் இந்த வேளையில் வந்து... சாகவோ, சாகடிக்கவோ... ஏதோ ஒரு திட்டத்துடன் இங்கே என்னைக் கூர்மையாகப் பார்த்துக் கொண்டு, கால் பெருவிரலால் தரையை அழுத்திக் கொண்டு....

"பாஸ்கர்! எதையும் உன்னிடம் சொல்லிக் காட்டவும் நான் வரவில்லை. அல்லது, உன் அபிப்பிராயத்தைப் பெறவும் நான் வரவில்லை. நமக்குள் ஒருவித சமரசம் மட்டும் இப்போது தேவைப்படுகிறது. இதற்காகவே வந்திருக்கிறேன்!''

''சொல்!'' என்றேன் நான்.

''பாஸ்கர்... நான் கலோசனாவை அதிகம் நேசித்தேன். நான் அவளை விட்டுப் பிரியும் போது அவள் என்ன சொன்னாள் தெரியுமா? நீங்கள் திரும்பி வரும்வரை காத்திருப்பேன் என்று சொன்னாள்.... ஆனால்... சொல் மாறி விட்டாள்... எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது; என் கலோசனா நிச்சயம் இப்படி நடந்திருக்க மாட்டாள்!''

''நீ சொல்வது சரிதான்; நீ போனதும் தூது விட்டு அவள் மனத்தை நான்தான் கலைத்து விட்டேன்...!''

அவன் என்னை மீண்டும் கூர்ந்து நோக்கினான்.

''தூதுக்கு மசிந்து விட்டாளா? நான் நம்பப் போவதில்லை... ஆனாலும் பரவாயில்லை. பாஸ்கர்... நான் அவளை இன்னும் அதிகம் நேசிக்கிறேன். இந்த இரண்டாண்டுகளில் உன் உடல் பசி தணிந்திருக்கும். அவளை எனக்குத் திருப்பித் தந்துவிடு....''

இப்போது அவனை நான் கூர்ந்து நோக்கினேன். இவன் விளையாடுகிறானா? இவனைப் பழிவாங்கச் சூழ்ச்சி செய்கிறானா? ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை இவன் அன்பு ஆழமானதாயிருக்குமோ?... இவன் மனத்துக்குள் என்னதான் இருக்கிறது?

''பாஸ்கர்! கலோசனாவை நான் பிரிந்து வாழ முடியாது. அவள் கறை பட்டுப் போனால்கூடப் பாதகமில்லை. அவளை எனக்குத் தந்துவிடுவதுதான் உனக்கு நல்லது.''

''நீ அவளைப் பழி வாங்குவதற்காகக் கேட்கிறாய் என்று நினைக்கிறேன்...''

அவன் முகம் கடுமையானது. மிகக் கொடூரமான முகத்துடன் கூறினான்—

''அவள் என் மனைவி... நீ இடையில் வந்தவன். நான் அவளை அடைவதோ, அடைந்த பின் பழி வாங்குவதோ என்னைப் பொறுத்தது. நீ தலையிட உரிமையற்றவன். இடையில் வந்து அபகரித்துக் கொண்ட நீ, மிருக வாழ்க்கைக்குச் சாட்சியிடுகிறவன்...''

நான் பழைய பாஸ்கரன்தானா? பழைய பாஸ்கரன் இவ்வளவு பொறுமையுடன் இருந்ததுண்டா? அல்லது கலோசனா இங்கு வந்த பின்னர், என்னுள் நானே புரிந்து கொள்ள முடியாமல் ஏற்பட்ட மாற்றம் தானா இது....

திடீரென்று எழுந்தான் அவன்.

''பாஸ்கர்... நான் அவளை இப்போது பார்க்க வேண்டும்.''

நானும் எழுந்தேன். மனத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். மின்னல் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தது.

''காட்டுகிறேன்; அவள் தூங்கிக் கொண்டிருக்கிறாள். தூக்கமின்மையால் அவளுக்குத் தூக்க மாத்திரை கொடுத்துத் தூங்க வைத்திருக்கிறேன். நீ அவள் தூக்கத்துக்குப் பங்கம் செய்யக் கூடாது!''

''காட்டு....!'' என்று கர்ஜித்தான் அவன்.

நான் அவனை உள்ளே கூட்டிச் சென்றேன். எச்சரிக்கையோடுதான் சென்றேன். வெளியே இடி மீண்டும் இடித்தது.

கட்டிலில் கலோசனா ஆழ்ந்த தூக்கத்தில் கிடந்தாள். அவளை அணுகிப் பார்த்ததும், சுந்தர் அதிர்ச்சியுடன் பின்வாங்கினான். பின்னர் வெறி பிடித்தவன் போல் என்மேல் பாய்ந்தான். என் பழைய மிருக பலம் முற்றிலும் என்னிடமிருந்து நீங்கியிருக்கவில்லை. நான் பழைய பாஸ்கராகி அவனைப் பற்றி இழுத்துக் கொண்டு முன்னறைக்கு வந்து நாற்காலியில் தள்ளினேன்.

வெளியே பெருமழை பெய்யத் தொடங்கியது.

நாற்காலியில் விழுந்தவன் நிமிர்ந்து மடியிலிருந்த சூரிக் கத்தியை எடுப்பதற்குள் நான் அவன் கையைப் பற்றிச் சூரிக் கத்தியைப் பிடுங்கிக் கொண்டேன்.

''அடத் துரோகி! நீ என் மனைவியைக் கோரப்படுத்தி விட்டாய்!'' என்று கத்தினான் அவன்.

''நானாகச் செய்யவில்லை சுந்தர்... அவளாகச் செய்து என்னை ஏமாற்றி விட்டாள். நானும் அவளும் ஓராண்டு மட்டும்தான் சரியாக வாழ்ந்தோம். இங்கே ஒரு பெண் வேலைக்கு இருந்தாள். அவள் கலோசனாவிடம் உன்னைப் பற்றி ஏதோ உளறிவிட்டாள், நீ



அவன்: உன் மனைவி தனக்குக் கிடைச்ச வேலையை ஒரு வாரத்திலே ராஜினாமா செஞ்சுட்டாங்களாமே ஏன்?

இவன்: அது டெலிபோன் ஆப்பரேட்டர் வேலை. அவளுக்கும் பேசித்தான் பழக்கமே ஒழிய மத்தவங்க பேசறதைப் பொறுமையாக் கேட்கற பழக்கமில்லே. அதனாலேதான். -கே.ஆர்.எம்.

எங்கேயோ உயிரோடிருப்பதாகச் சொல்லி யிருக்க வேண்டும். அன்று இரவு அதாவது போன ஜனவரி பதினோராம் தேதி இரவு— இவள் தன் மேல் மண்ணெண்ணெயை விட்டுத் தீக்கொளுத்திக் கொண்டாள். நான், என்ன ஏது என்று அறிவதற்குள் அது நடந்துவிட் டது. அன்றும் இதுபோல் பெரிய மழை பெய்து கொண்டிருந்தது. இவளை அப்படியே மழையில் தள்ளினேன். ஓடையிலிருந்து பாய்ந்த தண்ணீர் இவள் சேலையை நனைத்து இவளைக் காப்பாற்றியது. ஆனால் அதே தவறாகி விட்டது. சித்தப் ஆறவில்லை. இது நடந்து எட்டு ஒன்பது மாதங்களாகிவிட்டன. இவள் உடல் கோரமாகி இன்னும் இப் படியே கிடக்கிறாள்....!''

கூறிவிட்டு நான் அவனைப் பார்த்தேன். அவன் தலை குனிந்திருந்தது.

''சுந்தர்... இருந்தாலும் இவளை நான் வெறுக்கவில்லை. என் மனைவியாகவே நடத்து கிறேன். இப்போது நீ வந்து விட்டாய்; விரும்பினால் நீ இவளைக் கொண்டு போக லாம்....!''

அவன் நிமிர்ந்தான்; அசதியோடு எழுந் தான்.

''நான் போய் வருகிறேன்!'' என்று கூறி விட்டு வெளியே மழையில் இறங்கி நடந் தான்.

அவன் இனித் திரும்பி வரமாட்டான் என்றே தோன்றுகிறது. அதோ, தூரத்தில் விலகிப் போய்க் கொண்டிருக்கும் அவ னுடைய முதுகுப்புறத்தை மின்னல் அடை யாளம் காட்டுகிறது. இப்போது மின்னலும் அடங்கி விட்டது. அவன் இருட்டோடு இருட்டாகி விட்டான்.

பத்து வருஷப் பயித்தியம்

ஒருமுறை திருட்டுப் பட்டம் பெற்றுச் சிறைக்குச் சென்று வந்தவன் என்றும் திருடன் தான். அவன் திருந்தினாலும் சமூகம் திருந் தாது! அவனைச் சந்தேகக் கண் கொண்டு பாராமல் இராது! அது போலவே பைத்தியம் என்று முத்திரையிடப்பட்டு ஒரு முறை பைத் தியக்கார ஆஸ்பத்திரி சென்று திரும்பிய வனைக் குடும்பமும், சமுதாயமும் என்றுமே பைத்தியக்காரனாகத்தான் கருதும்! இது நாடகக் கதையில் நிரூபணமாகிறது.

இது எதற்கு? பைத்தியத்தைப்பற்றிய கதை யாருக்கு வேணும்? என்று கேட்பவர்களுக்குப் பதில்: ஆரோக்கியமான கதா பாத்திரங்கள் என்று கூறிக்கொண்டு மேடையில் பித்துக் குளித்தனமாக நடந்து கொள்வதை விட மனநோயாளியாகவே மேடையில் தோன்றி நடிப்பாற்றலைக் காட்டுவது எவ்வளவோ மேல்.

இறந்துபோன மனைவி, மன நோய் மருத் துவ மனையில் புத்தி பேதலித்து இருக்கும் கணவனைக் கனவிலே அணுகி அவனைக் குணப்படுத்துகிறாள். டாக்டர்களுக்கே வியப் பாவது வியப்பு! இது நடக்குமா என்று சந் தேகிக்கும் பகுத்தறிவுவாதிகள் சமீபத்திய க்ரிலியன் ஃபோட்டோகிராஃபி ஆவி வடி வங்கள் உள்ளதை விஞ்ஞான பூர்வமாக நிரூ பித்துள்ளது என்பதை உணராதவர்கள்!

சில ஆண்டுகளுக்கு முன் கல்கியில் அன்னம் எழுதிய சிறு கதை நாடகமாகியுள்ளது. இரண்டு மணி நேர நாடகமாக நீட்டியும் நிற்கிறது, நிலைக்கிறது என்றால், முக்கிய கார ணம், வி. எஸ். ராகவன்தான். பரணி கோபுவின் வசனத்தை ஏற்று, போஷித்து, நாடகத்தை இயக்கி, நடித்தும் உள்ளார். அதிர்ச்சி தந்த ஒரு சம்பவம் காரணமாய் புத்தி பேதலித்து பல ஆண்டுகள் மன நோய் மருத்துவ மனையில் இருந்து குணமாகி வீடு திரும்பி வரும் குடும்பத் தலைவர் தமது மக்கள் தம்மிடம் நடந்து கொள்ளும் விதத்தால் வருத்தமும் வெறுப்புமுற்று, பைத்தியமாக நடித்து மறுபடியும் மனநோய் மருத்துவ மனைக்கே வந்து சேருகிறார். கடினமான இந்த ராமலிங்கம் பாத்திரத்தை ஏற்று நம்பக மாகச் செய்ய வி. எஸ். ஆரைத் தவிர வெகு சிலரால்தான் முடியும்.

ராமலிங்கத்தைக் குணப்படுத்துவதாகச் சவால் விட்ட இளம் டாக்டராகத்தோன்றிய நடிகர் ஸ்ரீதர் கதையில் வெற்றி பெறுவதுடன் நடிப்பி லும் வெற்றி காண்கிறார்.

நகைச்சுவைக்கு நிறை யவே இடம் தந்திருக் கிறார்கள். வி. கே. சரஸ் வதி, மாலி, கே. ஸ்ரீனி வாசன், கோபாலகிருஷ் ணன், முத்து சுப்பிர மணியம் ஆகிய அனைவ ரும் ஒரு சோகமான கதையோட்டத்தின் இடையிலும் நம்மைச் சிரிக்க வைத்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு அரங்கில் ஆர்ப் பாட்டம் பண்ணு கிறார்கள். நாமும் நம்மை அறியாமல் சிரித்து ஒத் துழைத்து விடுகிறோம்!

விம்பிதமுறச் செய்யா விடினும் வித்தியாசமான நாடகம் என்ற அளவில் விசேஷ கவனத்தைப் பெறுகிறது. வி. எஸ். ஆரின் ''பத்து வருஷப் பைத்தியம்.'' பைத்தியக் காரனைப் பற்றிய நாடகம் தான். ஆனால் பைத்தியக் காரத் தனமான நாடகமல்ல!

என்ன தான் சொல்லுங்கள், தலைப்பை மாற்றி யிருக்கலாம்!

- குட்டிகிருஷ்ணன்



ஒரு அரசியல் நாடகம்!



1. ஐயய்யோ! எம். ஜி. ஆர். ஆட்சி யில் எரிசாராய ஊழல்!



2. ஆட்சியில் இருப்போருக்கு அதில் பங்குண்டு சுவாமி!

3. இதைச் சும்மா விடப் போற தில்லே!





4. அம்பலத்துக்குக் கொண்டு வந்தே தீருவோம்!



5. அப்படியா நினைக்கிறீங்க?

6. அதுக்கென்ன, நீதி விசாரணை நடத்திட்டா போச்சு.





7. கைலாசம் இருக்கிறார்



8. நீதி விசாரணையா?




…ான தீர்ப்பு வழங்கிடுவார்.



9. ஒரு வேளை எம். ஜி. ஆர். அமைச்சில் ஊழல் இல்லேன்னு நிருபணமாயிட்டா?

10. ஆ! ஐடியா!





11. கைலாசம் உங்க கையாள்!



12. அவர் நியாயமான தீர்ப்பே வழங்கமாட்டார்!



13. எதிர்ப்பைத் தெரிவிக்க ஊர் வலமாய்க் கிளம்புவோம்!

14. கைலாசம் விட்டெதிரே ஆர்ப் பாட்டம்!



வசனம் : குட்டிகிருஷ்ணன்

நடிப்பு : ரால்ஃப் குவெந்தர்

படங்கள் நன்றி : ஸ்காலா



15. ஐயோ! தொண்டர்களை யெல் லாம் கைது பண்ணுறாங்களே!

7 கழுத்தில் விழுந்த மாலை



நாட்கள் வேகமாக நகர்ந்தன. சாதாரணமாக, தனது அலுவலகக் காரில், அம்மாளையும் ஏற்றிக் கொண்டு ஹர்ஷன் கிளம்புவான். வழியில் கஸ்தூரியை அவளது வேலை செய்யும் அலுவலகத்தில் இறக்கிவிட்டு விட்டுப் போவது வழக்கம். மாலையில் வீடு திரும்பும் சமயம், அம்மாவுக்காகக் காத்திருந்து அழைத்து வருவான்.

இப்போது.....? அவர்கள் தனித்தனியாக வேலைக்குப் புறப்பட்டனர். கஸ்தூரி, தங்கள் வீட்டின் காரைத் தனியே ஓட்டிக் கொண்டு சென்றாள். அலுவலகத்துக் காரில் அவன் மட்டும் கிளம்பிச் சென்றான்.

இரை தேடிய பின்னர் மாலை கூட்டிற்குள் வந்து அடைந்து கொள்ளும் பறவைகளைப் போல, இருவரும் ஒரே வீட்டிற்குள்தான் அடைய வேண்டியிருந்தது.

முதலில் சில நாட்கள் – அவன் தாயாருடன் கூட பேசாது முகத்தைக் கடுமையாக்கிக் கொண்டு அவதிப்பட்டுக் கொண்டிருந்தான். பின்னர் அந்த நிலைமை மாறி, சிறிது சிறிதாகத் தளர்ந்து கொண்டு வந்தது. அம்மாவிடம் மட்டும் பேசத் துவங்கினான்.

''பத்து மாசம் சுமந்தவள் என் தாய் – அவளை ஒரேயடியாக ஒதுக்கிவிட என்னால் முடியாது. பத்து நாளைக்கு முன், வெறும் திமர் பந்தத்தால் நீ இந்த வீட்டில் நுழைந்து விட்டாய்! உன்னை ஒதுக்க முடியும்.'' சொல்லாமல் சொல்லின அவனது செயல்கள்.. மாதங்கி, அதைப் புரிந்து கொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை.

தான் சமைத்த உணவை மாமியாருக்கும், அவனுக்கும், ஒரே, சமயத்தில், ஒரே பரிவுடன்தான் பரிமாறினாள் அவள்.

மனத்தளவில் கோபம் பொங்கினாலும், வயிறு பசிக்கும் போது, என்ன செய்வது? அவனும் மறுப்புத் தெரிவிக்காமல் ருசித்துச் சாப்பிட்டான். ஏன், வியப்புடனேயே சாப்பிட்டான்!

அவனுக்கு மெத்தப் பிடித்த உணவு வகைகள். மாமியாரைக் கேட்டுக் கொண்டு, ருசியுடன், அவன் விரும்பிச் சாப்பிடும்படி, பக்குவம் செய்து படைக்கிறாள்! கெட்டிக்காரி தான்! ஒரு மனிதனின் மனத்தை அடைய அவனது வயிற்றுப் பாட்டை முதலில் கவனிக்க வேண்டும் என்று யாரோ சொல்லியிருந்த பழமொழியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டாளோ? சமையலில் குற்றம் காண முடியவில்லை. சரி! உடைகளைக் கவனிக்கும் விஷயத்தில் ....? ஊஹூம்! பேச முடியாது.

காலையில் அலுவலகம் புறப்படும் கணவன் மாடியினின்றும் இறங்கி வருமுன் வெந்நீர், மாற்று உடை யாவும், தயாராகக் குளியலறையில் காத்திருக்கும்.

முன்போல் அவன், ''அந்தக் கோடுபோட்ட 'ஷர்ட்' எங்கே? இந்த வெள்ளை ஸ்லாக் பட்டன் உடைஞ்சு போச்சே?'' என்று அம்மாவிடம் கூச்சலிடத் தேவையே இருக்கவில்லை.

அவன் கேட்ட உடைகளை, நிமிஷங்களில் அவள் எடுத்து வந்து மேஜையின் மேல்

வைத்து விடுவான். வேலையில் அப்படி ஒரு சுறுசுறுப்பு, கவனம்.....!

ஆரம்பத்தில் அப்படி அவன் கொண்டு வந்துவைக்கும் உடைகளைக் கையில் வாங்கிக் கக்கூட அவனுக்கு வெறுப்பு....ஒரு தயக்கம். அவள் கீழ் அறையில் இருந்தால் மாடிப் பக்கம் ஓடுவான். அவள் மாடி பக்கம் வந்தால் .... திறந்த வெளியில் காற்று வாங்குபவன் போல், நழுவி விடுவான்.

தீண்டத் தகாதவள் போல், அவளைக் கண்டாலே காத தூரம் விலகி ஓடியவனிடம் ஒரு சிறு அபிவிருத்தி தோன்றத்தான் செய்தது.

கையில் கொடுத்த பொருளைக் கை நீட்டி வாங்கிக் கொண்டான்.

'காப்பியில் சர்க்கரை குறைச்சலா இருக்கு' என்று கவரைப்பார்த்துச் சொல்லிக்கொண்டு மேலும் ஒரு ஸ்பூன் சர்க்கரையை வாங்கிப் போட்டுக் கொண்டான்.

அன்று காலை அவன் உடுத்திச் செல்ல எடுத்து வந்த உடைகளை அவள் மேஜை மீது வைக்கவில்லை. அவன் வருகைக்காக அறையின் வெளியே வராந்தாவில் காத்திருந்தாள்.

''இன்னைக்கு வெய்யில் ரொம்ப அதிகமாகவே இருக்கும் போல இருக்குது. அதனாலே ஆபீசிற்குப் போட்டுக்கிட்டுப் போக இந்த 'காட்டன் ஷர்ட்' எடுத்து வச்சிருக்கேன். 'பாலிஸ்டர்' புழுங்கித் தொலைக்கும். 'காலர்' கழுத்தை உறுத்தும்.'' சட்டையை அவள் அவனிடம் நீட்டினாள்.

அவனையும்றியாமல் சட்டென்று அதை வாங்கக் கையை நீட்டிய போது அவளது விரல்களைத் தீண்டியவன் ஏதோ, மின்விசைக் காளானவன் போல அதிர்ச்சியுடன் உறுத்துப் பார்த்தான்.



முகமும், மூக்கும் சிவக்க, இலேசாகப் புன்னகைத்தபடி அவள் அவனைப் பார்த்ததும், எரிச்சலாக வந்தது அவனுக்கு.

''நாளுக்கு நாள் இவள் முகத்திலே ஏன் இப்படி ஒரு மெருகு ஏறி வருகிறது! எப்படி, இவளால், அமைதியாக, அழகாகப் புன்னகை பூக்க முடிகிறது?'' காதோரத்தில் அரும்பிய வியர்வை, கழுத்தை நனைத்தது. குற்ற உணர்வால் மார்பு படபடத்தது.. ''பாவம்!'' என ஒரே ஒரு கணம் மனம் உறுத்தியது. மீண்டும் பழைய எரிச்சல் அவனைச் சாடியதும் நிமிர்ந்தான்.

''இப்ப என்ன நடந்து விட்டது? மனம் ஏன் சஞ்சலமடைய வேணும்?'' பழைய வைராக்கியமும், பிடிவாதமும் தலைதூக்க வேகமாக மாடிப்பக்கம் விரைந்தான்.

அவனது கைப்பட்ட விரல்களை, வியப்பும் வேடிக்கையுமாகப் பார்த்தபடி நின்றிருந்த மாதங்கி சட்டென்று விரித்துக் கொண்டாள். மாமியார் கூப்பிடுவது கேட்டது. அவரது தேவைகளைக் கவனிக்க ஓட்டோடியும் சென்று விட்டாள்.

அன்று மாலை, வழக்கம் போல் வீட்டு வேலைகளை முடித்து விட்டிருந்தாள் மாதங்கி. மாமியாரின் உத்தரவின்படி தன்னை அலங்கரித்துக் கொண்டாள். மிதமான ஒப்பனை முகத்திற்கு. தலையை வாரிக்கொண்டையிட்டு, பூச்சூடினாள். கஞ்சியில் நிமிர்ந்துநின்ற மல்மல் சேலையும், ரவிக்கையுமாக, கச்சிதமாகக் காட்சியளித்தாள். ஒரு சில நிமிட வித்தியாசத்தில் மாமியாரும், மகனும் ஒருவர் பின் ஒருவராக வீடு திரும்பி விடுவார்கள்.

முதலிலேயே, கேட்டைத் திறந்து தயாராக வைத்து விட்டாள். ரோவரின் உற்சாகமான குரைப்புச் சத்தம் கேட்டது. வாயிற்பக்கம் தோட்டத்தினுள் விரையும் காரின் ஒலியைக் கேட்டு எட்டிப் பார்த்தாள் மாதங்கி.

போர்ட்டிகோவில் நின்ற டாக்ஸியிலிருந்து இறங்கிய அந்த அழகான, உயரமான, கறுப்புக் கண்ணாடியணிந்த பெண் யார்? கழுத்தில் புரண்ட கூந்தலை அசைத்தபடி, தோள் பட்டையினின்றும் நழுவிய பிரஞ்சு ஷிபானைச் சரி செய்தபடி, உள்ளே வந்தாள் அவள்.

கறுப்புக் கண்ணாடியை இடது கையால் அலட்சியமாக எடுத்தவள், அவளை ஊன்றிப் பார்த்தாள்.

''ஹர்ஷா ஆபீசிலிருந்து வரலே?'' வண்ணப்பூச்சு அதரங்கள் புன்னகைக்க, மிக்க உரிமையுடன் வினவினாள்.

அவர்: ''உன் தாத்தாவுக்குனு நீ இரவல் வாங்கிட்டுப் போற நியூஸ் பேப்பரை ரெண்டே நிமிஷத்தில் திரும்பக் கொண்டாந்துடறியே... எப்படி...?''

வையன்: ''மேட்ரிமோனியல் பார்க்க அவருக்கு ரெண்டு நிமிஷம் போதாதா?'' -உ. ராஜாஜி



'ஹர்ஷா வரலே?' என அதட்டலும் உரிமையுமாகக் கேட்கும் இவள் யார்? இவளை இதுவரை பார்த்ததே இல்லையே!' சுள்ளென்று ஒரு எரிச்சல். அதை அடக்கியபடி ''வாங்க உட்காருங்க. அவர் வர நேரம் தான்'' என்று உபசரித்தாள்.

முன்னறை சோபாவில் உட்கார்ந்தவள், சுற்றுமுற்றும் பார்வையை ஓட விட்டாள்.

''ரொம்ப சிரமப்பட்டு இருக்கீங்கன்னு தெரியுது. முன்னால நான் பார்த்த போது வீடு ஒரே களேபரமாக இருக்கும். தோட்டத்தைக் கூட சீராக்கி வச்சிருக்கீங்க. நீங்க தான் புது மருமகள்னு நினைக்கிறேன்!'' மெல்லச் சிரித்தாள் அவள்.

''நீங்க யாருன்னு தெரிஞ்சுக்கலாமா?'' மாதங்கி கேட்க நினைத்தாள். 'மாமியாருக்குத் தெரிஞ்சவளாக இருந்து, கல்யாணம் விசாரிக்க வந்திருக்கலாமே. இல்லாவிட்டால் இத்தனை உரிமையாகப்பேசுவாளா?' தானே முடிவிற்கு வந்தவளாக, ''இருங்க. கொஞ்சம் சாப்பிட ஏதாச்சும் கொண்டு வரேன்'' என உள்ளே விரைந்தாள்.

ஒரு சில விநாடிகளில், ஓமப்பொடி, பர்பி சகிதம், டீயும் சாப்பிட்டபடி, ''நீங்க செய்ததா, சமையலிலும் கெட்டிக்காரியா இருக்கீங்களே!'' என்று புகழ்ந்தாள் வந்தவள்.

காரை கராஜில் நிறுத்திய ஹர்ஷன், முன்னறையில் பேச்சுக் குரலைக் கேட்டுவிட்டுச் சற்றுத் தயங்கியபடி உள்ளே நுழைந்தான்.

''ஹாய்! நீ....நீ... இங்கே ... எப்படி?'' தாள முடியாத வியப்பும், குதூகலமுமாக அந்தப் பெண்ணின் அருகே இருந்த சோபாவில் அமர்ந்து கொண்டான். கணவனைக் கண்டதும், மாதங்கி சமையலறைக்குள் ஓடினாள்.

''வந்தவள் யார்? இத்தனை நெருக்கமாகப் பேசும் அளவிற்கு ... என்ன உறவு?'' அவளது தொண்டைக்குள் என்னவோ அடைத்துக் கொண்டது.

மாமியார் கஸ்தூரி; முகமெல்லாம் சிவக்கக் கோபமாக அருகில் வந்து நிற்பதை அப்போதுதான் உணர்ந்தாள் மாதங்கி.

''அவ வந்து ரொம்ப நேரமாகிவிட்டதா?''

''அவர் வரதுக்கு சித்த முன்ன வந்தாங்க. பேரைக்கூட நான் கேக்கலே. உங்களுக்குத் தெரிஞ்சவங்கன்னு டீ குடுத்து....''

''அது ஒண்ணுதான் பாக்கி. வெக்கம் கெட்டவ! என்ன தைரியம் இருந்தா.... எந்த முகத்தை வச்சிக்கிட்டு இந்த வீட்ல நுழைஞ்சிருக்கா?'' என்று சீறினாள் மாமியார் அடிக்குரலில்.

''எனக்கு யாருன்னு தெரியலே அத்தே!'' தடுமாறினாள் மாதங்கி.

''தவறு என்னுடையது. ஆரம்பத்திலேயே எல்லாத்தையும் உங்கிட்ட சொல்லி இருக்கணும். ஆறு ஏற்கனவே ஒரே குழப்பமா நடந்த கல்யாணம். இதை வேற சொல்லிக் குழப்ப வேணாம்னு நினைச்சேன். கேட்டுக் கொள்ளு. இவ பேரு ஊர்மிளா. ஹர்ஷன் ஆசைப்பட்டுக் கட்டிக் கொள்ள முடிவு செஞ்ச போது, திமிர்னு இவனை உதறிட்டு வேற ஒருத்தனைக் கட்டிக்கிட்டா. இவள் ஜாதகமே அப்படி. என்ன காரணமோ, கடைசி நிமிஷத்திலே, இரண்டு பெண்களுமே, உத



அருள்வாக்கு

ஸயாமில் ஓர் உற்சவம்!

● ஸயாம் தேசத்துச் சரித்திர ஆராய்ச்சி நூல்களைத் தமிழ் நாட்டுப் புலவர்கள் ஆராய்ந்து, தமிழ் நாட்டுக்கு அழியாப் புகழ் தரக் கூடிய சில அதிசயமான தகவல் களைத் தெரிவிக்கிறார்கள்.

ஸயாம் தேசத்து உத்ஸவ விரதங்களைப் பற்றி விவாதிக்கும் நூல்களில் வெகு காலம் தொட்டு அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டு வரும் ஓர் உற்சவத்துக்கு 'த்ரியம்பாவை திரிபாவை' என்று பெயர் கொடுக்கப்பட் டிருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து சுமார் 1500 மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு தேசத்தில் திருவெம்பாவை திருப்பாவை என்னும் பெயர் ஓர் உற்சவத்துக்குக் கொடுக் கப்பட்டிருப்பது ஆச்சரியமானது.

அந்த நாட்டு மக்களுக்கு இப்பொழுது இப்பெயருக்கு அர்த்தமும் தெரியாது: அது தமிழ் மொழி என்பது கூடத் தெரியாமல் இருக்கலாம்.

அத்தகைய தேசத்தில் இப்பெயர் ஓங்கி வருவதில் மூன்று முக்கிய விஷயங்கள் வெளி யாகின்றன. திருவெம்பாவை திருப்பாவை எனும் பெயரால் ஓர் உற்சவம் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் ஒரே உற்சவமாக நடத்தப் படுகிறது. இது நமது நாட்டின் ஆர்த்ரா தரிசன உத்சவ சமயத்திலேயே அங்கு நடக் கிறது. அவ்வுற்சவத்தில் இங்கு நடக்கும் ஊஞ்சல் உற்சவம் அங்கேயும் நடக்கிறது. திருவெம்பாவை பாராயணமாக நடக்கும் நம் நாட்டில் இந்த ஆர்த்ரா தரிசன உத்சவத்துக்குத் திருவெம்பாவை திருப் பாவை என்ற பெயர் இல்லை. தமிழின் பெயரே தெரியாதநாட்டில்தொன்றுதொட்டு நடந்து வரும் உற்சவத்துக்கு இப்பெயர் இருக்கிறது. இதுவும் கவனிக்கத் தக்கது. இந்து மத தெய்வ நூல்கள் ஸயாம்—இந்தோ சீனா முழுவதும் பரவியிருந்தன என்பதற்கு அங்கு நம் தேசத்தில் காணப் படுவதை விட தூய ஸம்ஸ்கிருத பாஷையிலுள்ள ஏராள மான கல்வெட்டுக்கள் அத்தாட்சியாக இருக் கின்றன. ஸயாமிலும் இந்தோ-சீனாவிலும் தெய்விகத் தமிழ் நூல்களும் வழக்கத்தில் இருந்தன என்பதற்கு ஓர் உற்சவத்துக்கு இட்டிருக்கும் திருவெம் பாவை திருப் பாவை என்னும் பெயரே அத்தாட்சியாக நிற்கிறது.

-ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேக ரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

றிட்டுப் போயிட்டாங்க. அது போகட்டும். விரும்பி வாழ வந்தவளை வைச்சுக்கிட்டு வாழத் தெரியாம இருக்கான். இந்தச் சமயம் எதுக்காக இவ வந்திருக்காளாம்?'' என்று வெடித்தான்.

அது சமயம், ஹர்ஷன் உள்ளே எட்டிப் பார்த்தான். ''தாகம் உயிர் போவுது. இன்னுமா காப்பி தயாராகலே!'' மொட்டை யாகக் கேட்டு விட்டு, அம்மாவைப் பார்த் தான்.

கோபத்தில் கனன்று கொண்டிருந்த கஸ்தூரி, ''அவ எதுக்காக வந்திருக்கா?'' என்றாள் கடுமையாக.

''அவள் கணவன், அவளை ரொம்பக் கொடுமைப்படுத்தறானாம். இம்சை பொறுக் காம, கொஞ்ச நாள் பிறந்த வீட்ல இருக்க லாம்னு வந்தாளாம்.''

''அப்படி, உங்கிட்ட சொல்லிக்க, அவ ளுக்கே வெக்கமா இல்லே? மனைவியை இம்சைப்படுத்தற உனக்கும் அதைக் கேட்க, அதைவிட வெட்கம் இல்லே?'' படபடவெனப் பொரிந்தாள் தாயார்.

மாதங்கி அடுப்பையே பார்த்தாள். ஹர்ஷ னுக்கு ரோஷம் பிய்த்துக் கொண்டது. வெடுக்கெனஅந்தஇடத்தை விட்டு அகன்றான்.

மாதங்கி நடுங்கிப் போனாள். ''நீ பயப் படாதே! சிலசமயம் சூடாகச் சொன்னாத் தான் உரைக்கும். இவளை உதறிட்டுப் போனவ கிட்டே என்ன பேச்சு வேண்டிக் கிடக்குது? தன் கணவனைப் பத்தி இவன் கிட்ட பேசறது தவறுன்னு அவளுக்காவது புரியணும். படிச்சிட்டா போதுமா? பெரிய வேலைக்குப் போனா போதுமா? விவேகம் வேணும்.'' பல்லைக் கடித்தாள் கஸ்தூரி.

சமையலறை பக்கம் நிழலாடியது. ஊர்மிளா! ''நான் போயிட்டு வரேம்மா. ஹர்ஷன் கொண்டு விட்ல விடறதா சொன்ன தாலே புறப்படறேன். உங்க கிட்ட பேச முடியலே. ஒருசமயம், அடிக்கடி வந்து கிட்டே இருப்பேன். அப்ப பேசலாம்.'' அலட்சிய மாகச் சிரித்தபடி நின்றாள்.

வாயிலில் 'ஹாரன்' பொறுமையின்றி ஒலித்தது. ''அப்பப்பா! கொஞ்சம்கூடப் பொறுமையே கிடையாது ஹர்ஷனுக்கு. வரேன்!'' சிணுங்கியபடி, ஒரே துள்ளலில் வெளியேறினாள் ஊர்மிளா.

மாதங்கி ஜன்னல் வழியே பார்த்தாள். காரின் முன் ஆசனத்தில் கதவைத் திறந்து, ஒய்யாரமாக அவன் மீது உரசியபடி உட் கார்ந்தவளைக் கவனித்ததும் கண்களில் நீர் முட்டியது. மனம் பதைபதைத்தது.

''கவலைப்படாதே மாதங்கி! ஒரு குழந்தை எழுந்து நடக்குமுன்னே, பல தடவை விழுந்து எழுந்து தத்தித் தத்தித்தான் நடக்கக் கத் துக்கறானும். திருமண வாழ்க்கையும் அப்படித் தான். இதுபோல் சின்னச் சின்ன விபத்துக் களைப் பார்த்துக் கண் கலங்கிறியா? அசட்டுப் பெண்ணே! தைரியமா இரு. ம்! நானும் தயாரா வரேன். வீட்டைப் பூட்டிக்கிட்டு ரெண்டு பேரும் கொஞ்சம் கடற்கரை வரை போய் வரலாம். கிளம்பு!'' மருமகளை ஆதுரவாக, நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள் கஸ்தூரி. (தொடரும்)

16. நீர் நிறைந்த நதி

ஜனாதிபதி திரு ராதாகிருஷ்ணன் ஒரு சிறந்த எழுத்தாளர், தத்துவ ஞானி என்றுதான் உலகம் அறியும். ஆனால் அவர் ஒரு சிறந்த கலா ரசிகரும் கூட.

தமது மாளிகைக்கு வந்த கலைஞர்களை அவர் ராஜ மரியாதையோடு வரவேற்றார். "யாராவது பாடுங்களேன்" என்றார்.

பாடகர்கள் எல்லோரும் பாடத் தயார். ஆனால் ஆர்மோனியத்தை அவர்கள் எடுத்துப் போகவில்லை. தம்பி விஸ்வநாதனின் தயக்கத்தைப் பார்த்தார், டாக்டர். "இவ்வளவு பெரிய மாளிகையில் ஒரு ஹார்மோனியம் இல்லையா?" என்று கேட்டார்.



அவ்வளவுதான். எங்கிருந்து வந்ததோ தெரியாது. பத்துநிமிடங்களுக்குள் ஒரு புது ஆர்மோனியம் வந்து விட்டது.

தம்பி விசுவநாதன் வாசிக்க, சந்திர பாபு பாட ஆரம்பித்தார்.

"பிறக்கும்போதும் அழுகின்றாய்
இறக்கும்போதும் அழுகின்றாய்
ஒரு நாளேனும் கவலை இல்லாமல்
சிரிக்க மறந்தாய் மானிடனே

—என்று அவர் பாடியதும் "அடடா! என்ன அர்த்தம்! என்ன அர்த்தம்!" என்றார் ஜனாதிபதி. உடனே சந்திர பாபு அவர் மடியிலேயே உட்கார்ந்து, தோளில் கை போட்டுத் தாடையைப் பிடித்து, "நீ ரசிகன்டா கண்ணு!" என்றார்.

ஜனாதிபதிக்குக் கோபம் வரவில்லை. அவரும் சேர்ந்து சிரித்து விட்டார். ஆனால், ஏ. எல். எஸ்.ஸும் விசுவநாதன் முதலியோரும் பயந்து விட்டார்கள்.

"மேலே பாடுங்கோ! இல்லாட்டி நான் பாடட்டுமா?" என்றார், ஜனாதிபதி. உடனே பாடவும் தொடங்கினார்.



"வாங்க வாங்க லவண்டிங்களா — இந்த
வாத்தியார் சட்டாம்பிள்ளையைக்
கண்டீங்களா"


என்ற பழைய தூக்குத் தூக்கிப் பாடல்.

ஜனாதிபதியின் குழந்தை மனோபாவத்தோடு நமது கலைஞர்கள் சேர்ந்து கொண்டார்கள்.

எப்பொழுதுமே பேரறிஞர்கள் குழந்தையாகத்தான் இருப்பார்கள். இல்லையென்றால் குழந்தைகளிடம் பிரியம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

உலகம் வியந்து பாராட்டும் தத்துவ ஞானி, இந்தியாவின் குடியரசுத் தலைவர் — சுமார் மூன்று மணி நேரம் நம்முடைய கலைஞர்களுக்கு விருந்தளித்து அளவளாவினார்.

இத்தனைக்கும் அந்த விருந்துக்கு அவன் போகவில்லை. இவ்வளவும் தம்பி விசுவநாதன் சொன்னது. வழக்கம் போல் அவன் அசோகா அறை ஹோட்டல் அறையிலேயே தூங்கிவிட்டான்! சின்ன அண்ணாமலை வந்து கதவைத் தட்டியபோதுதான் எழுந்தான்.



துணுக்கு வேட்டை

இந்த இதழில் இடம்பெறும் துணுக்குகளைத் தேர்ந்தெடுத்துத் தந்துள்ள திருமதி மீனா சுப்பிரமணியம் கல்கிப் பத்திரிகையின் ஆரம்ப நாட்களிலிருந்தே அதன் சந்தாதாரராய் இருக்கும் பெருமை பெற்றவர்.

''என் கணவர் பாங்க் ஆபீஸராக இருந்தவர். தமிழ் நாட்டுக்காரராக இருந்தும் அவரது தாத்தா காலத்திலேயே பெங்களூரில் குடியேறிவிட்டதால் தமிழே அவருக்குத் தெரியாது. ஆரம்ப காலக் கல்கி பத்திரிகையைப் பார்த்துவிட்டுத்தான் தமிழ் படிக்கக் கற்றுக் கொண்டார். கடைசி நாள் வரை அவர் கல்கியின் நிரந்தரமான வாசகர். கல்கத்தா, கான்பூர் டெல்லி என்று மாற்றல் வந்தபோதெல்லாம் கூடவே கல்கியும் தொடர்ந்து வரும்.''

அண்மைக் காலமாகக் கல்கி இதழில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை இவர் வரவேற்கிறார். சரித்திர நவீனங்களையும் குடும்பப் பாங்கான நாவல்களையும் விரும்பிப் படிக்கும் இவருக்கு லக்ஷ்மி'யின் எழுத்துக்கள் மிகவும் பிடித்தமானவை.

இந்தத் துணுக்கு வேட்டையில் அம்மாவுக்கு உதவி செய்பவர் குமாரி ராஜலட்சுமி, பி. எஸ். உயர்நிலைப் பள்ளியில் நூலகர்.

அமைப்பு: 'யெஸ்பால்'
போட்டோ: வி.என்.ஆர். பாபு

அவர் வெகு நேரம் கதவைத் தட்டினராம். ஏதாவது ஆகி விட்டதோ என்று பயந்துகூடப் போய்விட்டாராம்.

அவன் குளித்து விட்டு வந்ததும் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தினார்.

1962ம் வருடம் ஏப்ரல் மாதம் ஒரு நிகழ்ச்சி நடந்தது. திடீரென்று ஒரு நாள் மாலை ஆறு மணிக்கு 'கண்ணதாசன் இறந்து விட்டார்' என்று எல்லா ஸ்டுடியோக்களுக்கும் ஒரு செய்தி வந்தது. நெப்டியூன் ஸ்டுடியோவில் ஷூட்டிங் நிறுத்தப்பட்டது. சாரதா ஸ்டுடியோவில் விசுவநாதனின் ரெகார்டிங் நிறுத்தப்பட்டது. அந்த ஸ்டுடியோவில்தான் அழுகையும், கண்ணீரும் அதிகமாக இருந்தன.

அப்போது கோடம்பாக்கத்துக்கு மேம்பாலம் இல்லை. ரயில்வே கேட் அடைபட்டுக் கெட்டுப் போய்விட்டது. கலைஞர்கள் எல்லாம் பூந்தமல்லி ஹைரோடைச் சுற்றி அவன் வீட்டுக்கு வந்தார்கள்.

அங்கே அவரது சகோதரர் கண்ணப்பன் மட்டும் நின்று கொண்டிருந்தார். அவருக்கும் இந்தச் செய்தி அதிசயமாகவே இருந்திருக்கிறது.

பிறகு அவன் அமைதியாக அங்கு வந்து சேர்ந்தான். தம்பி விசுவநாதன் அவனைக் கட்டிப் பிடித்து ஓவென்று அழ ஆரம்பித்தான்.

தோழர் சம்பத் வருகின்ற வழியில் கார் கெட்டுவிட்டதாம்; ஓட்டமும் நடையுமாய் வந்தார். அழுதழுது அவர் கண்கள் சிவந்திருந்தன.

நடிகர்கள் எம். ஆர். ராதா, எம். வி. ராஜம்மா, டைரக்டர்கள் கிருஷ்ணன் பஞ்சு, பீம் சிங் ஆகியோர் 'அவனுக்கு நூறு வயது' என்று வாழ்த்திப் பாடினார்கள்.

டைரக்டர் ஸ்ரீதர் ஓடி வந்து அவனுக்குத் திருஷ்டி கழிப்பதற்காகத் தன் அலுவலகத்துக்கு அழைத்தார்.

அங்கே ஒரே தேங்காயும் சூடமுமாக இருந்தன. அப்போது அவனுக்கும், திரு எம். ஜி. ஆருக்கும் இடையே தகராறு இருந்தது. இருவரும் பேசுவதில்லை. இருப்பினும் திரு எம்.ஜி. ஆர். அவர்கள் டெலிபோன் செய்து 'உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படி' கேட்டுக் கொண்டார்.

கடைசியில், ''இப்படி எந்தச் சண்டாளன் டெலிபோன் செய்தான்'' என்ற கேள்வி எழுந்தது. வேறு யாருமல்ல; அவனேதான்!

ராஜா அண்ணாமலைபுரத்தில் முருகப்பன் என்பவர் வீட்டிலிருந்து அவன் எல்லோருக்கும் டெலிபோன் செய்திருந்தான். ஆனால் அந்த நேரத்தில் அவன் அதை வெளியிடவில்லை. காரணம் உருக்கமான சூழ்நிலையைக் கெடுக்க விரும்பவில்லை.

இந்த நிகழ்ச்சியைச் சின்ன அண்ணாமலை நினைவுபடுத்தியபோது, அவன் மரணத்தைப் பற்றிய தத்துவம் பேசினான். இருபது வயதிலிருந்தே அவனுக்கு அதுதானே வேலை!

சுற்றுச் சூழ்நிலைகள் எல்லாம் கள்ளிக்காடாகவே இருக்குமானால், கற்றவனுக்கும் கல்லாதவனுக்கும் முடிவான புகலிடமே அதுதானே?

''இருந்தாலும் நீங்கள் இப்படித் தூங்கக் கூடாது'' என்றார், அண்ணாமலை.

தூக்கம், பசி இந்த இரண்டும் அற்புதமான வரங்கள். ஆனால் அவனது தூக்கம் நியாயமற்றதுதான். அவற்றின் மூலம் எவ்வளவோ வாழ்க்கையை இழந்திருக்கிறான்.

கீதையில் மூன்று மனிதர்களைக் காட்டினார், பகவான்; சத்துவ குணம், ரஜோ குணம், தமோ குணம் என்று அவற்றை வரிசைப் படுத்தினார். தமோ குணத்தினுடைய மொத்த வடிவமே தூக்கம்தானே!

அவனது தூக்கத்தைத்தானே பலர் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆனாலும் என்ன,

வாழ்க்கையின் சிறு மகிழ்ச்சிகளுக்காக சேமிப்பது எப்படி ?



உங்கள் குழந்தைகளின் முகத்தில் காணும் மகிழ்ச்சி, குடும்பத்தினருடன் உல்லாசப் பிரயாணம்—இவை போன்ற சில மகிழ்ச்சித் துளிகள் வாழ்க்கையின் சிறப்பு அம்சங்களாகும். இன்று சேமிக்கும் வசதியில் உள்ள நீங்கள் கனரா பாங்கில் **நிரந்தரா டெபாசிட்** கணக்கை உடனே தொடங்குங்கள்.

மாதந்தோறும் சேமிக்கும் சிறு தொகையானாலும், ஒரே தவணையில் செலுத்தப் படும் கணிசமான தொகையானாலும் இத் திட்டத்தில் சேமித்த தொகை நிரந்தரமான மாத வருமானத்தைப் பெற வழி செய்கிறது.

உங்கள் பாதுகாப்பான எதிர்காலத்திற்கு உறுதியளிப்பது **நிரந்தரா டெபாசிட்** திட்டம்.


விபரங்களுக்கு அருகில் உள்ள எமது கிளைக்கு விஜயம் செய்யுங்கள். எமது இதர சேமிப்புத் திட்டங்கள்: **காமதேனு, வித்யாநிதி, பாலக்ஷேமா** முதலியன

நிரந்தரா டெபாசிட்

கனரா பாங்க்

(தேசியமாக்கப்பட்ட பாங்க்)
நாடெங்கிலும் 1200க்கும்
மேற்பட்ட கிளைகளை உடையது

maa CB 2 E/Tam/80



பாதுகாப்பு, சிக்கனம், இரண்டிற்கும்—
ஸ்டேன்ஸ் டயர் ரீடிரெட்
சாலைப்பிடிப்பு, நீடித்த உழைப்பு, தோற்றம், கணிசமான சிக்கனம் எல்லாம் சேர்ந்து அமைய—ஸ்டேன்ஸ் டயர் ரீடிரெட்.
ஸ்டேன்ஸ் டயர்
அண்டு ரப்பர் பிராடக்ட்ஸ் லிமிடெட்
திருச்சி ரோடு, கோயம்புத்தூர் 641018.
தொழிற்சாலைகள் :
கோயமுத்தூர் ● கோட்டயம் ● விஜயவாடா ● திருச்சி ● கள்ளிக்கோட்டை ● மங்களூர் ● வேலூர் ● ஹைதராபாத் ● சேலம் ● எர்ணாகுளம் ● தூத்துக்குடி ● திருச்சூர் ● மதுரை ● பெங்களூர் ● பெல்லாரி மற்றும் காகிநாடா.
MAC/ST/002/TAM

அவன் தூங்கித்தான் அவர்களையும் மறக்க முயன்றான்.

சின்ன அண்ணாமலை வாழ்க்கையில் கெட்டிக்காரர். ஆகவே, அவனது முட்டாள்தனத்தைச் சுட்டிக் காட்டியதில் தவறென்ன!

மறுநாள் அதிகாலையில் கலைஞர்களெல்லாம் டெல்லியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டார்கள்.

சென்னைக்கு வந்ததும் 'அனைவருமே தலைவர் காமராஜரின் வீட்டுக்குப் போக வேண்டும்' என்று கட்டளையிட்டான் அவன்.

பத்துக் கார்களும் அங்கே படையெடுத்தன. எல்லோரும் தலைவர் காமராஜரின் கால்களைத் தொட்டு வணங்கும்படி கேட்டுக் கொண்டான். பலர் அப்படியே செய்தார்கள்.

காங்கிரஸில் அவன் மளமளவென்று பெரிய இடத்தைப் பெற்று வருவதைப் பல காங்கிரஸ் காரர்களே விரும்பவில்லை. அந்தக் கட்டத்தில் இது அவனுக்குத் தெரியாது.

காங்கிரஸ் எப்பொழுதுமே எதிரிகளால் அழிந்ததில்லை, காங்கிரஸ்காரனாலேயே அழிந்திருக்கிறது. கட்சியே அழிந்தாலும் அடுத்தவன் உயர்ந்துவிடக் கூடாது என்பதில் காங்கிரஸ்காரன் மாதிரி லட்சியவாதியை யாரும் பார்க்க முடியாது!

ஆனாலும் அதிலும் கூடக் கட்சிக்குப் புதிது புதிதாக ஆட்கள் வருவதைப் பார்த்து அவனிடம் உயிரையே வைத்திருந்தவர்கள் பலர் இருந்தார்கள்.

கக்கன்ஜி, திருச்சி அருணாசலம், சேலம் சிவஞானம் பிள்ளை, காமராஜரின் உடன் பிறவாத் தம்பி எம். பி. தாமோதரன், 'நவசக்தி' தனுஷ்கோடி நாடார், மற்றும் பலர். அவனது சேவையைக் காங்கிரஸ் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பலர் விரும்பினார்கள்.

அவன் நண்பர்களைக் கவனித்தான்; எதிரிகளைக் கவனிக்கவில்லை. அப்படியும் அவன் காங்கிரசில் முன்னேறுவதைப் பொறுமையோடு பார்த்தவர்கள் யோக்கியமான காங்கிரஸ்காரர்களாக இல்லை.

அவன் எதையும் லட்சியம் செய்யாமல் காங்கிரஸுக்கு வசூல்கூடச் செய்து கொடுத்தான்.

ஆரம்பத்தில் அவன் காங்கிரஸில் சேரும் போது தி. மு. க. எதிர்ப்பு வெறி மட்டுமே இருந்தது. நாளாக நாளாக தேசிய வெறியே அதிகமாயிற்று.

சின்ன வயசில் அவன் காங்கிரஸ்காரனாகவே வளர்ந்தவன்தானே! அவனுக்கு எட்டு வயதாக இருக்கும்போது அவன் பிறந்த ஊரான சிறுகூடல்பட்டியில் காங்கிரஸ் கூட்டம் நடைபெறும். காந்தி குப்பன் செட்டியார் நடத்துவார். திருப்பத்தூர் கிட்டு ஐயர் போன்ற தியாகிகள் வந்து பேசுவார்கள். தலையில் அரையணா மஞ்சள் குல்லாவைப் போட்டுக் கொண்டு, தன்னோடொத்த சிறுவர்களைக் கூட்டிக் கொண்டு, கதர்க் கொடியையும், உண்டியலையும் தூக்கிக் கொண்டு, 'மகாத்மா காந்திக்கு ஜே' என்று கோஷம் போட்டவன், அவன்தானே!

1939ல் பன்னிரண்டு வயது சிறுவனான அவன், காங்கிரஸ் அபேட்சகர் வ. சொ. ராம. வள்ளியப்பாவை ஆதரித்து, கீழச்சிவல்பட்டிக்குப் போன ஊர்வலத்தில் கலந்து கொண்டு ஒரே ஒரு அடியும் வாங்கியிருந்தானே!

1949ல் அவனைக் காரைக்குடிக்கு கவிகாரம் கூட்டிப் போன கம்பரடிப் பொடி சா. கணேசன், அவனுக்குப் பன்னிரண்டு கதர் சட்டைகளும் வேட்டிகளும் அல்லவா வாங்கிக் கொடுத்தார்! சா. கணேசனின் சொந்த அத்தையல்லவா அவனைச் சுவீகாரம் எடுத்தார்!

தேசியத்திலும், தெய்வ பக்தியிலும் மூழ்கித் திளைத்த ஒரு குடும்பத்தில் பிறந்து, தவறான சுடுபாடுகளினால் தடம் மாறிய அவனது ரயில் சரியான பாதைக்கு வந்து விட்டதென்றே அவன் கருதினான்.

பிறர் ஒரு மாதத்தில் எழுதக் கூடிய பாடல்களை அவன் பத்து நாட்களில் எழுதிவிட்டு, பாக்கி இருபது நாட்களில் காங்கிரஸ் சுற்றுப் பயணம் செய்தான்.

அந்தக் காலங்களில் அவனோடு சுற்றுப் பயணம் செய்தவர்கள் திரு. சின்ன அண்ணாமலையும், ஜெயகாந்தனும்.

மாநகராட்சித் தேர்தலில் இருந்தே திரு ஜெயகாந்தனுக்குக் காங்கிரஸ் வடிவம் வந்துவிட்டது.

திரு ஜெயகாந்தனோ, சின்ன அண்ணாமலையோ பக்கத்தில் இருந்து விட்டால், ஆயிரம் மைல் பயணம் செய்தாலும் அலுப்புத் தெரியாது.

அவன் தன் காதலிகளை விட அதிகமாக அவர்களை நேசித்தான்.

அப்போது 'நகரத் தந்தை' என்றொரு நாடகத்தில் அவன் நடித்துக் கொண்டிருந்தான். அந்த நாடகக் கம்பெனி வாழ்க்கைதான், அவனுக்கு நிம்மதியான வாழ்க்கையாக இருந்தது.

அந்த நாடகத்தை அவன் எங்கே நடத்தினாலும் கூட்டம் வந்தது. குறிப்பாக நாடார் மகாஜனங்கள் அவனுக்குத் தந்த ஆதரவை மறக்க முடியாது.

சிவகாசி ராஜசபை, சேர்மன் கணேச நாடார், 'மச்சான்' வாசகம், தர்மர் — இவர்களை அறிமுகப்படுத்திய 'தென் காசி' ஆறுமுகசாமி, தியாகராய நகர் சோமசுந்தர நாடார், இவர்கள் எல்லாம் அவன் என்ன அறிக்கை விடுக்கிறானோ அதற்கேற்ப நடந்து கொள்வார்கள். (வளரும்)





✖ ந. சேதுராமன், கொடுமுடி

கே: சில வீடுகளில் சாமி படங்களுடன் ஆசாமி படங்களையும் சேர்த்தே மாட்டி புள்ளார்களே, அது சரியா?

ப: அதில் தப்பு என்ன என்று எனக்குப் புரியவில்லை. எல்லாக் கடவுள்களும் நமக்கு வழி காட்டிகள். நமது மனப் பளுவையும் சஞ்சலங்களையும் குறைக்க உதவுபவர்கள். இதே பணியை அல்லது உதவியை நமக்குச் செய்யும் ஆசாமிகளையும் நாம் தொழுதால் தவறில்லை. ஆசாமிகள் ரூபத்திலும் கடவுள் இருக்கலாம்.

✖ டி. எல். ரெட்டி, வேலிடுபட்டி

கே: 'கடவுள் ஒரு கணக்கன்' என்பதற்கு ஒரு உதாரணம்?

ப: சொல்கிறேன். நண்பர் ஒருவரின் தந்தை உயிலில் தன் வீட்டைத் தன் பிள்ளைக்கு எழுதி வைத்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தும் கடைசிப் பிள்ளையான என் நண்பர் பெயரில் எழுதியிருந்தார். மற்ற சகோதரர்கள், தந்தை உயிருடன் உள்ளவரை அவரை உதாசீனப்படுத்தி வந்ததே காரணம். சொத்தில் பங்கு இல்லை என்றதும் கோர்ட்டுக்குப் போனார்கள். எதற்கு வழக்கு வம்பு என்று சொல்லிவிட்டு 'ஆளுக்கு 25 ஆயிரம் ரூபாய் நானாகவே கொடுக்கிறேன்' என்றார் (சொத்து மதிப்பு ஒன்றரை லட்சம்). அதெல்லாம் முடியாது என்று கேஸைத் தொடர்ந்தார்கள். ஆளுக்கு ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுக்குமாறு கோர்ட் யோசனை தெரிவித்து வழக்கைக் கோர்ட்டுக்கு வெளியே பைசல் செய்துகொள்ளும் படி கூறியது. கோர்ட் சொல்லிவிட்டதால் சகோதரர்கள் ஒத்துக் கொண்டார்கள். நண்பர் கடன் வாங்கி 15 ஆயிரம் ரூபாயைக் கொடுத்தார். மூன்று மாதங்கள் ஆகியிருக்கும். அவருக்கு டில்லி லாட்டரியில் 15 ஆயிரம் ரூபாய் பரிசு விழுந்தது. அவருடைய நல்ல மனதிற்குக் கடவுள் என்னும் கணக்கன் கணக்காகக் கொடுத்த பரிசு அது.

✖ ச. விக்டர் ஆல்பர்ட், திருச்சி 12

கே: இப்போது சி. சுப்ரமணியம், தமிழில் 'F போன்ற எழுத்துக்கள் வேண்டும் என்கிறாரே?

ப: இதனால் தமிழுக்கு ஆபத்தில்லை. நிச்சயமாக எடுத்துக் கொள்ளலாம். பல ஆங்கில வார்த்தைகள், பெயர்களைத் தமிழில் எழுத வேண்டிய அவசியம் உள்ள இந்த நாளில் 'F' மட்டுமல்ல 'Z'ஐக் கூட எடுத்துக் கொள்ளலாம். இன்றைய தமிழ் எழுத்தாளர்கள் பலர் ஆங்கிலத் தமிழ்(!) கதைகள் எழுதுகிறார்கள். அவர்களுக்கு இந்தப் புதிய எழுத்துக்கள் மிகவும் உபயோகமாக இருக்கும்.

✖ கோ. பிரமநாயகம், திருக்கந்துறை

கே: திறமைசாலிகள் திரைமறைவில் இருந்து வெளி வரமுடியாமல் தவிக்கிறார்களே?

ப: நான் வந்து விட்டேனே. அது மாதிரி அவர்களும் வரவேண்டியதுதானே ஐயா?



கடுகு பதில்கள்!

✖ பாரதி, பங்களூர் 21

கே: அறிவுபூர்வமான கேள்விகளை வாசகர்கள் அனுப்ப வேண்டிய முகவரி என்ன?

ப: தெரிந்து வைத்துக் கொண்டே இப்படி நீங்கள் கேட்பது ஏனோ?

✖ ஆர். கே. லிங்கோன், மேல இருஞ்ஙன் புதூர்

கே: கன்னியா குமரியில் தேவி கன்னியா குமரியைத் தரிசித்து இருக்கிறீர்களா?

ப: இருக்கிறேன். "மாலை நேரம், அலைகடல் ஓரம், அன்னை அலங்காரம், அதி கம்பீரம்" என்ற முருக தாஸின் பாடல் வரிகளை மனதிற்குள் பாடியபடியே அம்மனைத் தரிசிப்பது ஒரு பெரிய சுகானுபவம்.

✖ காசிதாசன், அம்மையப்பட்டு

கே: பணம் என்பதே இல்லாமலிருந்தால்?

ப: நாம் எல்லாம் பயங்கரக் காண்டுமிராண்டிகளாக ஆகியிருப்போம். பணம் என்பது இருக்கவே நாம் வெறும் காட்டுமிராண்டிகளாக இருக்கிறோம்!

✖ திருத்திவாசன், மாயூரம்

கே: டாக்டர் கடுகு சார். ஞாபக மறதி மிகுதியாகக் கைவசம் உள்ளது. நீங்கி நலமாக வாழ நான் என்ன செய்யவேண்டும்?

ப: ஏதோ எனக்குத் தெரிந்த கைவைத்தியம் சொல்கிறேன். நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விஷயத்தை மறக்க முயற்சி செய்யுங்கள். இதனால் அது நினைவில் பதிந்துவிடக் கூடும்! அல்லது அந்த விஷயத்தின் மீது உண்மையான அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். மறக்காது. மறதி என்பது அலட்சியத்தின் விளைவு. ஆகவே அலட்சிய மனப்பான்மையைத் தவிர்க்கவும்.


✖ ப. கல்மணி பத்மா, குளித்தலை

கே: ஊழலின் நிறம் என்ன?

ப: தண்ணீரையும் காற்றையும் போல எங்கும் பரவி நிற்பதால், இதற்கும் நிறம் இல்லை!

பரிசு பெறுபவர்:

டி. எல். ரெட்டி, வேலிடுபட்டி,
பிள்ளையார் நத்தம் 627910



யானைக்கு மாதம் 5,000 ரூபாய்!

● நடிகர் சங்கத் தேர்தலுக்கு எஸ். எஸ். ஆர். நிற்க, ''போட்டி இருக்குமானால் விலகிக் கொள்கிறோம்'' என்று சிவாஜி அண்டு கம்பெனி கூற, கடைசியில் தலைமை மாறி விட்டது என்றாலும் அதன் அறக் கட்டளைக்குப் பொறுப்பு வகிக்கும் மேஜர் சுந்தரராஜன், வழக்கமான தமது இடத்திலேயே இருந்தார். '' 'கல் தூண்'ல் விஜயாவின் நடிப்பு ஏ. ஒன். சிவாஜியும் விஜயாவும் போட்டி போட்டுக் கொண்டு செய்திருக்கிறார்கள். இப்பொழுதுதான் படத்தைப் பார்த்துவிட்டு வருகிறேன்'' என வாய் ஓயாமல் புகழ்ந்து கொண்டிருந்தார். இவ்வளவு புகழ்கிறாரே, இந்தப் படத்துக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம் என நினைக்க வேண்டாம். அதன் இயக்குனரே இவர்தான்.

● ''நடிகர் சங்கம் எப்படி நடக்கிறது?'' என்று மேஜரைக் கேட்டேன். ''அவர்கள் பொறுப்பு ஏற்றுப் பதினைந்து நாட்கள்தானே ஆகிறது. ஒன்றை மட்டும் நான் சொல்லுவேன். தேர்தல் காலத்தில் தேர்தல் ஜுரம் எப்பொழுதும் இருக்கும். இப்பொழுதெல்லாம் சரியாகி விட்டது. இதைப் பரபரப்பாக ஆக்கியதே நீங்கள்தானே!'' என்று பத்திரிகைகளை இடித்தார்.

ஒன்று நிச்சயம். எல்லோருக்குமே தங்கள் மனக் குமுறல்களை வெளியிடவும் எதிராளியைத் தாக்கிப் பேசவும் பத்திரிகை நிருபர்தான் அகப்படுகிறார். ஆனால் அவை பிரசுரமானால் மட்டும் அவர்களுக்குப் பிடிப்பதில்லை!


● ராம் — லக்ஷ்மணன் — தேவர் பிலிம்ஸ் படம். ''மாதத்திற்கு 5000 ரூபாய்'' என்று ஆரம்பித்தார் இயக்குனர் தியாகராஜன். ''யானையின் ஒரு மாதச் செலவு'' என்று கூறிவிட்டுத் தொடர்ந்தார்: ''யானை என்றவுடன் எல்லோருமே பயப்படுவார்கள். ஆனால் யானை எவ்வளவு பயந்த சுபாவம் உள்ளது என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். யானையின் முன் குழந்தை அழுதால் போதும்; பயந்து விடுகிறது* கிட்டவே வருவதில்லை. குழந்தையை மிதிப்பது போல் ஒரு காட்சி. காலைத் தூக்க மாட்டேன் என அடம் பிடித்தது. குழந்தை போன்ற ஓர் உருவத்தை பேப்பரில் செய்து போட்டாலும் சரி, யானை மிதிக்க மறுத்து விட்டது. நம்புவீர்களா?'' என்றார் தியாகராஜன்.

நம்புகிறோம். நமக்கென்ன நஷ்டம்?

● வியட்நாம் வீடு சுந்தரம் சமீபத்தில் எழுதியுள்ள நாடகம் ஒய். ஜி. மகேந்திரன் நடிக்கும் 'அர்த்தமுள்ள மௌனங்கள்'. அதுவே சிவாஜி கணேசன் நடித்துத் திரைப்படமாக வெளிவரப் போகிறது. ரொம்ப நாளாக தொலைக் காட்சி நிலையத்தின் மீது என்ன கோபமோ, நாடகத்தில் டி. வி.யை இறக்கு இறக்கு என்று இறக்கியுள்ளார் ஒய். ஜி. மகேந்திரன்.

● பாலசந்தர் பாரதியார் வாழ்க்கையைத் திரைப்படமெடுக்கிறார் என்று அறிவிப்பு வந்தாலும் வந்தது இதோ மற்றொரு பாரதியார் படம் பற்றிய செய்தி. ஜெயகாந்தனின் தலைமையில் ஒரு குழு அதனைத் தயாரிக்குமாம்!

-சலன்



சின்னஞ்சிறு வாஷர் முதல் பிரம்மாண்ட்மான
சாதனங்கள் வரை தரமான ரப்பர் தயாரிப்புகள்
எங்களது சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் தொழிலகத்தில் இயற்கை மற்றும் செயற்கை ரப்பர் கலவைகளிலிருந்து மிகவும் நுட்பமான இயந்திரங்களைக் கொண்டு வார்த்து தேவைக்குத் தக்க அளவுகளிலும் வடிவங்களிலும் தயாரித்து வழங்குகின்றோம்.
உலகத் தர நிர்ணய ஈடுபாட்டிற்கு இணையாக எங்களது ரிஸர்ச் & டெவலப்மெண்டு ஆய்வு கூடத்தில் தொழில் நுணுக்க வல்லுனர்கள் உற்பத்தியின் ஒவ்வொரு கட்டத்திலும் ஆராய்ச்சிகள் செய்து B.S, A.S.T.M, S.A.E, I.S, தரத்தினுடன் கூடிய உறுப்புகளை அளிக்கிறார்கள்.
எங்களுடைய தயாரிப்புகள் :—
இன்ஜின் மவுண்ட்டிங்குகள்
புஷ்கள்
சஸ்பென்ஷன் புஷ்கள்
'O' ரிங்குகள்
டஸ்ட் கவர்கள்
ஸீலிங் வாஷர்கள்
ஸ்லீவ்கள்
டிரெயின் பிளாப்கள்/பிளக்குகள்
கெவிடீஸ்
ஹெட்லாம்ப் காஸ்கெட்கள்
ஆயில் ஸீல்கள்
பில்டர் ரிங்குகள்
ஸீலிங் ரிங்குகள்
மெட்டல்-டு-ரப்பர் பாண்டட் உறுப்புகள்
பிரேக் சேம்பர் டயாஃப்ரம்கள்
SIRUBBER
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
உசிலம்பட்டி ரோடு, கோச்சடை, மதுரை–625016
தரத்திலும் சேவைச் சிறப்பிலும் TVS நிறுவனத்தின் பாரம்பரியம்
V.S.K-SI-6T

"யாரப்பா, பெரியப்பா, ஆப்கன் நாட்டை விட்டு அகலப்பா!"



✖ நாசர்



✖ சுகர்னோ

மான்கூட வெகு தூரம் விரட்டப்பட்டுக்களைப்படைந்து விட்டால் தன் கொம்பை உபயோகித்துத் தற்காப்பு செய்து கொள்ள முயலும். நாம் எதிர்ப்பு இல்லாமல் சாவதை விடத் தற்காப்பு முயற்சியில் மடிவதே மேல் என்று அது எண்ணுகிறது போலும். கிட்டத்தட்ட இந்த மானின் கதைதான் கோஷ்டி சேராத நாடுகளின் அந்நிய விவகார மந்திரிகளின் மாநாடும். டில்லியில் நடந்து முடிந்த இந்த மாநாட்டுக்கு வெகு பல நல்ல அம்சங்கள் உண்டு. ஒன்று உருவத்தையோ பரிமாணத்தையோ கண்டு அஞ்சக் கூடாது என்பது. இந்த நோக்கைப் பரப்பிய மலாசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் உலக நாடுகள் கடமைப்பட்டுள்ளன.

கோஷ்டி சேராத நாடுகள் இயக்கத்தின் சிற்பிகள் பண்டித நேரு, யுகோஸ்லாவியாவின் அதிபர் டிட்டோ, எகிப்தின் நாஸர், இந்தோனேசியாவின் அதிபர் சுகர்னோ. பாண்டுங் (இந்தோனேஷியா) மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் சாராம்சம்: ஒரு வல்லரசு மற்ற பலம் இல்லாத நாட்டை மிரட்டிப் பணிய வைப்பது என்பது கூடாது. ஒவ்வொரு நாட்டுக்கும் தன் அரசு முறையை நிர்ணயிப்பதற்கும் உரிமை உண்டு. எல்லா நாடுகளுக்கும் சுதந்திரம் விலைமதிப்பற்ற உடைமை என்பது. ஆனால் இந்தப் பிரகடனத்தை ரஷ்யா குப்பைக் காகிதமாகத்தான் மதித்து வந்துள்ளது. அன்று அமெரிக்க அந்நிய காரியதரிசியாக இருந்த ஜான் பாஸ்டர் டல்லஸ், கோஷ்டி சேரா நாடுகளை ஒரு பள்ளிக்கூட விவாத சங்கமாக மதித்தார். அன்று உள்ள தலைவர்களுக்குப் பின்னால் கோடானு கோடி மக்களின் ஆன்மிக பலம் இருந்தது என்பதை மறக்கக் கூடாது.

அப்படி இருந்தும் ஹங்கேரி நாட்டில் எழுச்சி உண்டானபோது என்ன நடந்தது? ரஷ்யாவின் பல ஆயிரம் டாங்கிகள் நாட்டைச்சுற்றி உலவின. செக்கோஸ்லோவகியாவிலும் கதை அதுதான். இந்த நாடுகள் எல்லாம் ''சோஷலிஸ நாடுகள்'' என்பது ரஷ்யாவின் கட்சி. முதலாளித்துவ நாடுகள் கூட இப்படி கட்சி கட்டியிருக்கலாம். ஆனால் கட்டவில்லை.

✖ ஜான் ஃபாஸ்டர் டல்லஸுடன் நேருஜி



ஆப்கனிஸ்தான் சோஷலிஸ நாடல்ல. சோஷலிஸ்ட் போர்வையில் கம்யூனிஸ தலைமைப் பொம்மைகள் சில செயல் பட்டன. அவை ரஷ்யாவைத் தலையிடும் படி அழைத்தன. ரஷ்யாவும் "சொற்ப சேனையுடன்" (தொகை 85,000) அங்கு முகாம்செய்தது. அதுமுதல் ஆப்கன் அகதிகள் நாட்டை விட்டு வெளியேறி பாகிஸ்தானுக்குள் வருகின்றனர். அவர்கள் தொகை 15 லட்சம்.



✖ டிட்டோ

ஐ. நா. சபையில் ஆப்கன் பிரச்னையைக் காரசாரமாக விவாதித்தார்கள். ஆனால் தீர்வு ஏற்படவில்லை. அங்கு அமெரிக்காவுக்கும் ஒரு வோட்டு பசிபிக்கில் குண்டூசி முனை போல் உள்ள டோங்கா தீவுக்கும் ஒரு வோட்டு. அது போகட்டும். அன்று முதல் இன்றுவரைரஷ்யா அசைந்துகொடுக்கவில்லை.

ரஷ்ய மனப்பான்மை உலகமெங்கும் கம்யூனிஸ முறையைப் பரப்புவது. இதற்கு அது சாம, தான, பேத தண்ட முறைகளை அனுஷ்டிக்கும். ஆப்கனிஸ்தானில் அது தண்டத்தைக் கடைப்பிடித்தது. இப்படியே போனால்? லெனின் கனவு நனவாகலாம் அல்லவா?

அதுதான் இல்லை. பெரிய நாடு, பெரிய சேனை என்ற மிதப்பில் தன் காலின் கீழ் நாடுகளைப் போட்டு மிதிக்கும் போக்குக்குக் கோஷ்டி சேரா நாடுகளின் . அந்நிய மந்திரிகள் மகாநாடு முற்றுப்புள்ளி வைத்து விட்டன. ''யாரப்பா, பெரியப்பா, ஆப்கன் நாட்டை விட்டு அகலப்பா'' என்று சொல்லியுள்ளன. இந்தத் திசை மாற்றம் ஏற்படக் காரணமாக இருந்த மலாசியாவுக்கும் சிங்கப்பூருக்கும் சுதந்திர நாடுகள் கடமைப்பட்டுள்

ளை. பாகிஸ்தானின் அந்நிய காரியதரிசி ஸ்ரீ ஆகா ஷாஹிியும் வெகு தீரமாகப் போராடினார்.

எல்லையைக் கடந்தால் ரஷ்ய முஸ்தீப்பு என்று உள்ள சூழ்நிலையில் உண்மையை விண்டு சொல்லத் தைரியம் வேண்டும் அல்லவா? அந்தத் தைரியம் ஸ்ரீ ஷாஹிக்கு இருந்தது. ஆப்கன் பிரச்னை பற்றி முடிவு காண ஐ. நா காரியதரிசியும் பாகிஸ்தான், ஆப்கன் அதிகாரிகளும் கூடிப் பேசுவார்கள். என்று ரஷ்யப் படைகள் வாபஸாகும் என்பது முக்கியமல்ல. அவை வாபஸ் ஆக வேண்டும் என்று 100க்கு மேற்பட்ட உலக நாடுகள் ஒன்று பட்டுக் குரல் எழுப்பியது முக்கியம். உலக அபிப்பிராயம் என்று ஒன்று இன்று எழும்பியுள்ளது. ஆகவே டாங்குகளும் உணர்ச்சியே இல்லாத கருங்கல் முகங் கொண்ட ரஷ்யப் படைகளும் உலகத்தை ஜெயிக்க முடியாது என்பது தெளிவு படுத்தப்பட்டுள்ளது.

ஆப்கனிஸ்தானத்துக்கு அடுத்தபடி கம்பூச்சியா. அல்லது கம்போடியா. இங்கு மாஸ்கோவின் கைக்கூலியான வியட்நாம் அடித்துக் கட்டி ஆட்சி புரிகிறது. வியட்நாம் படை பலத்தில் ஹெங்ஸமரின் அதிகாரம் வகிக்கிறார். இங்கும் அந்நியப் படைகள் வெளியேற வேண்டும் என்ற ஏகோபித்த அபிப்பிராயத்தை அந்நிய விவகார மந்திரிகள் தெரிவித்துள்ளார்கள். கம்பூச்சியா நிலவரம் மலாசியா, தாய்லந்து, சிங்கப்பூர் எல்லாவற்றுக்கும் தலைவலி. ஆகவே இங்கும் கம்யூனிஸ்ட் படைகளுக்கு உலகத்தின் நோட்டீஸ்.

இந்தியாவுக்கு இந்த மகாநாடு ஒரு படிப்பினை. அவசரப்பட்டு கம்பூச்சியாவுக்கு அங்கீகாரத்தைக் கொடுத்தது இந்தியா. இன்று இளிச்சவாயனாகத் திகழ்கிறது. இனி ரஷ்யாவின் ஆக்கிரமிப்புகளுக்கு வக்காலத்து வாங்குவது என்பது தவறு என்பதை நாம் உணர வேண்டும்.

ஈரான் – ஈராக் யுத்தத்தை இன்று நாளைக்குள் நிறுத்தமுடியாது. ரஷ்யாவின் கப்பல்கள் இந்து மகா சமுத்திரத்தில் நடமாட ஆரம்பித்த பிறகுதான் டீகோ கார்ஷியா தளம் கட்டப்பட்டது. ஆகவே அது வல்லரசுகள் விவகாரம். டில்லி மகாநாட்டில் சிறிய நாடுகள் சம்பந்தப்பட்டவரை ஆயுதந் தாங்கி அடித்துக் கட்டுவதுதான் முக்கிய பிரச்னை. ஆன்ம சக்தியுடன் இது தவறு என்று ருஷ்யாவுக்குத் தெரியப்படுத்தப்பட்டது என்பது சாதனையே.

— கே. ஸ்ரீனிவாசன்

● தெலுங்கு தாயாரம்மா—பங்காரய்யா சத்திய சுந்தரமாகப் பவனி வருகிறார்கள்.

பொருத்தமான சிவாஜி (சுந்தரம்) பொருத்தமான கே. ஆர். விஜயா, (சத்யா). இந்த அதிசய தம்பதிகள் விரிசல் கண்ட குடும்பங்களில் நுழைந்து இலவசமாக 'ஒட்டல்' டூட்டியைச் செய்கிறார்கள். கதை என்னவோ மகா பழசுதான். ஆனால் அதைச் சொல்லியிருக்கிற விதம் கொஞ்சம் புதுசு. (கவனிக்க கொஞ்சம்)


கணவன் 'சத்யா' என்றதும் மனைவி 'என்னங்க' என்பதும், இவர் குறளைச் சொன்னதும் அவர் பொருளைச் சொல்வதும், இருவரும் 'பாலே' ஆடுவதும்—படம் — முழுவதும் நகைச்சுவை நெளிகிறது.

இயல்பான இதமான தம்பதிகள். சிவாஜி இதுபோன்ற பொருத்தமான வேடங்களை ஏற்றால் அவர் 'சகாப்தத்திற்கு' முடிவேயில்லை.

முழித்துப் பார்க்கும் வி.எஸ். ராகவன் வழக்கம் போல விஜயகுமார். வசனம் பேசும் ஜெய கணேஷ். குடிகார நடிப்பில் ஸ்ரீப்ரியா, விரல் சொடுக்கும் ஸ்டைல் மாதவி, விமர்சிக்க முடியாத சுருளி, பாவமாய் நளினிகாந்த் என்று நிறைய பேர்.

டைரக்டர் ராவ் — ராவவில்லை. தயாரிப்பாளர் டாக்டர் பாலகிருஷ்ணன் —அறுவை (சிகிச்சை) செய்யவில்லை. எம்.எஸ். வி. மோசம் செய்யவில்லை.

— நளினி சாஸ்திரி



சத்திய சுந்தரம்




நொறுக்குத் தீனி!

நகரை வலம் வந்து கண்டதும் கேட்டதும்:

- பள்ளிக் கல்வி இயக்குனர் அலுவலகத்தில் ''தனி ஒருவனுக்குக் கல்வி இல்லையேல் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்று போர்டு காணப்படுகிறது. பாரதி பாடிய பாடலில் 'உணவு' என்ற சொல்லை 'கல்வி' என மாற்றியிருப்பது படிப்பதற்கு நன்றாக இருந்தாலும் பாரதியை நாம் திருத்த முற்படலாமா?



- 'That man in Istanbul' என்ற ஆங்கிலப் படத்துக்கு நம் வீடியோகஸ்தர்கள் தந்த மொழிபெயர்ப்பு – ''இஸ்தான்புல்லின் இளகன்.''



- அரைத்த மாவையே அரைப்பதில் அகில இந்திய வானொலிக்கு நிகர் எதுவுமில்லை. வர்த்தக ஒலிபரப்பில் 'மனம் ஒரு ஊஞ்சல்' என்ற நாடகம் மறு ஒலிபரப்பாகிறது. நல்ல மேடை – நாடகங்கள் கிடைக்கா விட்டால் புதிதாகத் தொடர் நாடகங்களைப் பெற்று ஒலிபரப்பினால் என்ன? எழுத்தாளர்களுக்கா இந்நாட்டில் பஞ்சம்?

- 'பாப்பிலான்' படத்துக்கான டிக்கட்டுகள் பதினைந்து ரூபாய் வரை 'பிளாக்கில்' விற்றன!

- 1–4–80 முதல் 31–12–80 வரை கன்னிமாரா நூலகத்துக்கு வருகை தந்த வாசகர்களின் எண்ணிக்கை 2,11,707.

- தன் விளம்பரங்களில் எப்போதுமே சிரிக்கவும் .சிந்திக்கவும் வைக்கும் 'ஏர் இந்தியா' மகாராஜா அண்மையில் சிலரைச் சிறை வைத்துள்ளார். "U.S.A. Starring Ronald Reagan என அண்மை விளம்பரத்தில் அமெரிக்காவைத் திரைப் படமாக்கி, 'ரேகன்' அதில் நடிப்பதாகக் கூறியுள்ளார் மகாராஜா. ரேகனல் ஜனாதிபதியாகத் திகழ முடியாது; நடிக்க மட்டுமே முடியும் என்ற பொருள் தொண்டையில் தூண்டிலாகச் சிக்குகிறதே? மகாராஜா கவனிக்கவில்லையா?

- காணும் பொங்கல் அன்று – 29 எண் பேருந்து. பத்து பைசாவைக் கண்டக்டரிடம் நீட்டி பெரம்பூருக்கு டிக்கட் கேட்டார் ஒருவர். 'என்னய்யா... எல்லோருக்கும் பொங்கல்.... உனக்கு மட்டும் 'பொங்கள்ளா' என எரிச்சலுடன் கேட்டார் கண்டக்டர். நான் திரும்பிப் பார்த்தேன். பத்து பைசாவை நீட்டி விட்டு 'மிஸ்லி'னர் போல் அமர்ந்திருந்தார் ஒருவர்.

தொகுப்பு: – யெம்ஜி



18

பாத்ரூம் சென்று நன்றாகக் குளிக்க ஆரம்பித்தாள் சுமங்களா.

ஷவரிலிருந்து பூக்குடை போலத் தண்ணீர் கொட்டியது. இப்படிக் குளிக்க முடியவில்லையே என்ற ஏக்கம் அவளுக்கு. மருத்துவமனை வாசம் பெரிய வனவாசம் போல வெறுமையை உண்டாக்கி யிருந்தது.

இன்னும் சில நாட்கள் அவள் பச்சைத் தண்ணீரில் குளிக்கக் கூடாது என்று டாக்டர்கள் சொல்லி யிருந்தார்கள். அதை அவள் பொருட்படுத்தவில்லை. அவளுக்குத் தினம் அரை மணி நேரமாவது ஷவரைத் திறந்து விட்டு விட்டு அதனடியில் ஆனந்தமாக ஸ்நானம் செய்தாக வேண்டும். வெளியே தோழிகள் நின்று சப்தம் போட வேண்டும்; கதவைத் தட்டி உடைக்க வேண்டும். சில சமயம் கோமதி பொறுமையை இழந்து, குறுக்கு வழியில் கம்பி போட்டுத்தாழ்ப்பாளை அகற்றி, கதவைத் திறந்து உள்ளே புகுந்து விடுவாள்.

சோப்பு நுரையாக வெள்ளை வெளேரென்று உடம்பு மணக்க நின்று கொண்டிருக்கும் சுமங்களாவை அபூர்வப் பிறவியாகப் பாவித்துக் கொள்வாள், கோமதி.

உள்ளே ஜலக்ரீடை நடக்கும் இடத்தில் சில நிமிஷ இழுபறி நடக்கும். ஷவரிலிருந்து அவளை இழுத்து நகர்த்திவிட்டு அந்த இடத்தைக் கோமதி ஆக்கிரமித்துக்கொள்வாள். அதன் பின் சுமங்களா சிணுங்கிக் கொண்டே வெளியேறுவாள்.

அப்படிப்பட்ட ஆர்ப்பாட்டங்கள் ஏதுமின்றி ஒரு வாரம் வெறிச்சோடிப்போன நிலையில் இப்போது ஷவரில் ஆனந்தமாகக் குளிக்கலானாள், சுமங்களா.

தலையெல்லாம் பிசுக்கேறி ஜடை போல ஒட்டிக் கொண்டிருந்தது. ஷாம்பு போட்டுக் குளித்துத் தலையைத் துவட்டிக் கொண்டாள். பாதி உஷ்ணம் அகன்ற மாதிரி இருந்தது.

உடை உடுத்திக் கொண்டு கண்ணாடி முன் வந்து நின்றாள். என்றுமில்லாமல் இன்று சற்று அளவுக்கு அதிகமாக அலங்கரித்துக் கொள்ள ஆரம்பித்தபோது அதன் உள்ளர்த்தங்களை உள் மனம் கிரகித்துக்கொண்டு புன்னகையாய்ப் பூத்து வெளியே உதிர்த்தது.

தலைக் கேசம் சீக்கிரமாக உலர, அறையிலிருந்த சீலிங் ஃபானை வேகமாகச் சுழல விட்டாள். ஷாம்பு கேசம் காற்றில் பறந்தது. வீச நாழியில் ஈரம் காய்ந்து விட்டது.

வெளிர் நீல ரிப்பனை எடுத்து நுனி முடியில் முடிந்து கொண்டு கேசம் முழுவதையும் தளர்த்தி விட்டுக் கொண்டாள்.

கொடியில் கோமதியின் புதிய புடவை ஒன்று தொங்கியது. அந்த வர்ணத்துக்கு ஏற்ற ஜாக்கெட் அவளிடமிருந்தது. அந்தப் புடவையை எடுத்து உடுத்திக் கொண்டாள்.

மிக நிதானமாக, திட்டமிட்டு அவள், தன்னை அலங்கரித்துக் கொண்டு வெளியே புறப்பட்டாள்.

எவ்வித அசம்பாவிதங்களும் நடக்காதவள் போலச் சாதாரணமான நிலையில் டிரைகிளீனிங்கில் நுழைந்தாள், சுமங்களா.

அங்கு வேலை செய்கிற மற்றவர்கள் அவளை வியப்புடன் பார்த்தார்கள்.

மாடி அறைக்குச் சென்றிருந்த குமாரன் படி இறங்கிக் கீழே வரும்போது அவளைப் பார்த்துவிட்டுப் படிகளில் நின்றான்.

பகல் போது பூராவும் அவள் யாரிடமும் ஏதும் பேசவில்லை. குமாரன் உட்பட மற்றவர்களும் அவளிடம் உடல் நலம் பற்றி மட்டும் விசாரித்து விட்டுப் போனார்கள்.

மாலை ஆறு மணி.

எல்லோரும் வெளியேறிக் கொண்டிருந்தார்கள்.

அந்த மாதச் சம்பளத்தை அவளிடம் ஒரு கவரில் போட்டு நகர்த்திவிட்டு, கையெழுத்திட வேண்டிய லெட்ஜர் புக்கில் ஒரு ஸ்டாம்பை ஒட்டி, அவளிடம் அதை நீட்டிக் கொண்டே அவளைப் பார்த்தான்.

''காலையிலிருந்து உங்களிடம் பேசவே முடியவில்லை. அதுவுமில்லாமல் வருவோரும் போவோரும்... கூட்டம் வேறு.'' என்று தயங்கினான்.

''நானும் உங்களிடம் சில விஷயங்கள் பேச வேண்டும்'' என்று ரொம்பவும் பயப்படுகிறவன் போலத் தூரமாகவே நின்று சொன்னான்.

விட்டில் அணைத்த விளக்கு

— மகரிஷி —

லெட்ஜர் புக்கில் ஸ்டாம்ப் மீது கையெழுத்திட்டாள். பணமுள்ள கவரை அப்படியே மடித்துத் தன் டம்பப் பைக்குள் போட்டுக் கொண்டாள்.

''அன்று நடந்தவைகளை மனத்தில் வைத்துக் கொள்ளாதீர்கள். அதை நினைக்க நினைக்க என் மனம் மிகவும் வேதனைப்படுகிறது. இவ்வளவு அருகிலிருந்தும் அவனிடமிருந்து உங்களைக் காப்பாற்ற முடியவில்லையே என்கிற வருத்தம் எனக்கு. என்னுடைய தலையீடு உங்களுக்குப் பாதகமாக அமைந்து விடக் கூடாதே என்கிற தயக்கம் வேறு...''

அவள் ஒன்றுமே பேசவில்லே. பெரிய நோட் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு கால்குலேட்டர் மிஷின் முன் உட்கார்ந்து அன்றைய வரவுத் தொகைகளேப் பதிவு செய்து மொத்த வருமானத்தைப் பார்க்கத் தொடங்கியிருந்தாள்.

''உங்களுடைய பிரண்ட் புரபஸர் கோமதியிடம் உங்களேப் பற்றிச் சதா கேட்டுக் கொண்டே யிருப்பேன். நீங்க எங்கே போனீங்கன்னு அவங்க கிட்டக் கூடச் சொல்லலே யாமே!''

''ஊருக்குப் போனு இருக்கிறவங்க கிட்ட சொல்லிட்டுப் போகலாம். கல்யாணங்களுக்குப் போனு சந்தோஷமா எல்லாரையும் கூட்டிக்கிட்டுப் போகலாம். அடிபட்டு ஆஸ்பத்திரிக்குப் போனு... எப்படி எல்லார்கிட்டேயும் சொல்லிட்டுப் போக முடியும்? ஒரேயொரு வித்தியாசம். நடு ரோட்ல நடக்க வேண்டிய விபத்து... இந்த மாடி அறையிலே நடந்து விட்டது. அடியின் தன்மைகள் என்னவோ ஒன்றுதான்....''

இப்படி அவள் விவரித்தபோது கண்ணீர் இரண்டு சொட்டு தாளுக உதிர்ந்து தரையில் உருண்டது.

கால்குலேட்டரின் பட்டன்களில் விரல் அழுத்திக் கொண்டே இருக்க அவனேப் பார்க்காமலேயே பேசிஞள்.

எதிரே, தூரத்தில் நின்று கொண்டிருந்தவன் அவளே நெருங்கி வந்து, நின்றுகொண்டான்.


லாண்டரி ஆறு மணியுடன் முடிந்துவிட்டதால் பிரதான வாயில் மூடப்பட்டு ஒரேயொரு கதவு மட்டும் திறந்திருந்தது. வெளியில் இருக்கும் விளக்கு அணேக்கப்பட்டு விட்டது. எனவே வாடிக்கையாளரின் குறுக்கீடு இப்பொழுது இல்லே.

இந்தத் தனிமையை அவள் தாளுகவே உண்டாக்கிக் கொண்டது மாதிரி தோன்றியது.

இவள் நம்மை ஆழம் பார்க்கிருளா?

''ஒரு வாரமாகவே எனக்கு உங்களேக் காண வேண்டுமென்கிற துடிப்பு. இத்தனேக்கும் உங்களே முன் பின் கூட எனக்குத் தெரியாது. ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறேன்.''

'இவன் என்ன சொல்ல வருகிருன்?'



மேஜை டிராயரைத் திறந்து அந்த வக்கீல் நோட்டீசை வெளியே எடுத்தான்.

''இதைப் படித்துப் பாருங்கள்.''

அதை அவளிடம் நீட்டினான்.

அவள் அதை நிமிர்ந்து கூடப்பார்க்காமல், ''தெரியும், சொல்லுங்கள்'' என்றாள்.

''உங்களையும் என்னையும் இணைத்து உங்கள் கணவர் வக்கீல் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்.''

''அப்படியா?'' — வியப்புடன் கேட்கிறவள் போலக் கேட்டாள்.

''உங்களுக்குத் தெரியாதா?''

''தெரியும்.''

''இது வீண் அபவாதம்தானே! நீங்கள் இங்கே வேலைக்குச் சேர்ந்த நாளாக உங்களிடம் ஒரு நாளாவது நான் முறை தவறி நடந்து கொண்டதுண்டா?''

அவன் அதிகம் மனம் உடைந்து பேசுகிறவன் போல் பேசினான்.

அவனுடைய நடிப்பை அவள் தனக்குள் ரசித்துக் கொண்டிருந்தாள்.

''அன்றுகூட அவர் உங்கள் கணவர் என்பதால்தான் மேலே செல்ல அனுமதி அளித்தேன். வேறு நோக்கத்துடன் வருவதாக எனக்குத் தெரிந்திருந்தால், 'போடா, வெளியே... என்னிடம் வேலை செய்பவரை என் அலுவலகத்தில் வந்து மிரட்ட உனக்கு அதிகாரமில்லை! உன் பெண்டாட்டி என்றால் அலுவலக நேரம் விட்டு வெளியே வந்த பின் பேசிக்கொள்' என்று எச்சரிக்கை செய்து கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியிருப்பேன்.''

அவள் தலை நிமிராமல் சிரித்துக் கொண்டாள்.

''கன்னா பின்னான்னு லாயர் நோட்டீஸ் குடுத்திருக்கான். இவனை நான் சும்மா விடப் போவதில்லை.''

''என்ன செய்யப் போகிறீர்கள்?''

''கோர்ட்டிலே சந்திப்பேன். 'இது அபாண்டம். எனக்கும் இந்தப் பெண்ணுக்கும் சம்பந்தம் இல்லை'ன்னு விவாதிப்பேன்.''

''உங்களுடைய நல்லெண்ணத்துக்கு நன்றி சுகுமாரன். நீங்கள் இவ்வளவு தூரம் மனம் திறந்து பேசுவதைக் கேட்கும்போது எனக்குக் கூட உங்களிடம் மனம் விட்டுப் பேச வேண்டும் போலத் தோன்றுகிறது.''

''தாராளமாகப் பேசுவோம்.''

அவன் வேகமாகக் கடையை மூடினான்.

அவள் வெளியே வந்தாள். அவன், அவளைப் பின்தொடர்ந்தான்.

ஜனக் கூட்டம் அதிகமற்ற பூங்கா. அங்கே புல்வெளியில் இருவரும் வந்து உட்கார்ந்தனர். வழியில் பேசிக் கொண்டே வந்திருந்தார்கள்.

அவள், அவனிடம் அந்தரங்கமாகப் பேசுவது போல் பேசினாள். அவன் மேல் அளவற்ற அன்பும் மரியாதையும் வைத்திருப்பவள் போலப் பேசினாள். அவனுடைய உதவி மட்டும் இருந்தால் பரமேசுவரனைத் தான் வென்றுவிட முடியும் என்றும், அவனுடைய குறுக்கீடுகளை முதலில் தவிர்த்துக் கொண்டால்தான் மேற்கொண்டு தன்னால் வேறு விஷயம் பற்றிச் சிந்திக்க முடியும் என்றும் அவள் பேசிய பேச்சில் அந்தச் சபல புத்தியுள்ள வாலிபன் அப்படியே மயங்கிப் போனான்.

அநேக நாட்களாகவே சுமங்களாவின் மேல் சுகுமாரனுக்குச் சபலம் உண்டு. அவளை எப்படியேனும் தன் வசப்படுத்திக் கொள்ளத் துடித்தான். ஆரம்ப காலத்திலிருந்தே அவளை அவனுக்குத் தெரியும்.

சுமங்களாவுக்கும் பரமேஸ்வரனுக்கும் நடுவே உள்ள பிளவுக்குத் திட்டம் தீட்டித் தந்தவனே அவன்தான். பரமேஸ்வரனுக்குக் கட்டம் கட்டமாக அந்தத் திட்டத்தை வகுத்துத் தந்தவனும் அவனே.

கோமதியின் சகோதரன் — போலீஸ் அதிகாரி — திருமேனியை வைத்துக் கொண்டு சுமங்களா — திருமணத்துக்கு நிர்ப்பந்தம் கொடுத்தபோது பரமேஸ்வரன் அதைச் சுகுமாரனிடம் வந்து சொன்னான்.

அவளைப் பதிவுத் திருமணம் செய்து கொள்வதன் மூலம் போலீஸ் அதிகாரி திருமேனியின் நடவடிக்கைகளைத் தவிர்க்கலாம். பதிவுத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பே அவனிடமிருக்கும் சொத்துக்களை விற்றுவிடுவது நல்லது என்று சுகுமாரன் வழி சொன்னான். பிற்பட்டு விவாகரத்து வழக்கு வர நேரும்போது அவனுக்கு நிரந்தர வருமானம் ஏதும் இல்லை என்று கையை விரித்து விடலாம் என்றும், ஒரு சிறு தொகையைக் காட்டி, சட்டத்தின் முன் பேரம் பேசுவதன்




அநேகமாக எல்லோரும் உண்மையே தங்களின் விலையுயர்ந்த சொத்து என்று நினைப்பதால்தான் அதைச் சிக்கனமாக உபயோகிக்கிறார்கள்.

— மார்க்ட்வெய்ன்

— எஸ். ராஜகணேஷ்





கல்கி கே. வெங்கடராமன் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி **கௌரிசங்கருக்கும்** (ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா) திரு ஏ. வி. ராமநாதன் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி **சாந்தினிக்கும்** சென்னையில் சமீபத்தில் திருமணம் விமரிசையாக நடந்தது. திருமணத்துக்கு நண்பர்களும் உறவினர்களும் வருகை தந்து தம்பதிகளை ஆசீர்வதித்தனர்.

வாழ்க மணமக்கள்

மூலம் அவனுக்குப் பெரிய தொகையாக ஜீவனாம்சம் தருவதிலிருந்து தப்பிக்கலாம் என்றும் குறுக்கு வழி சொல்லிக் கொடுத்தவனும் சுகுமாரனே.

அதன் பிறகு அவன் யோசனைப்படிதான் எல்லாமும் நடந்தன. சுமங்களாவைக் கண்காணித்து வந்தான் சுகுமாரன்.

சுமங்களாவின் தோழி கோமதி என்பது அவனுக்கு முன்பே தெரியும்.

அன்று வேண்டுமென்றே ஒரு விளம்பரம் கொடுப்பவன் போல் உரத்த குரலில் டிக்டேட் செய்து ஒரு பட்டதாரி அந்த லாண்டரிக்கு வேண்டுமென்று கோமதியின் காது படக் கூறினான். சுமங்களா வேலைக்காக அலைந்து கொண்டிருக்கிறாள் என்பதும், அவள் தற்போது கோமதியின் அறையில்தான் தங்கியிருக்கிறாள் என்பதும் அவனுக்குத் தெரியும். அவன் விரித்த சூழ்ச்சி வலையில் விழுந்து சுமங்களா அங்கே வேலைக்குச் சேர்ந்து கொண்டாள்.

மாடர்ன் டிரை கிளீனிங்கின் உரிமையாளரான ஜான்ஸனிடம் மிகவும் கஷ்டப்பட்டுப் பெற்ற ஆர்டரின் கீழ் சுமங்களாவை வேலைக்குச் சேர்த்துக் கொண்டான். அதற்கான சிரமம் கொஞ்சமல்ல.

அதே வேளையில் பரமேஸ்வரன், அம்பிகா என்கிற பெரிய மீனுக்கு வலை விரித்திருந்தான். அவன் விரித்த வலையில் அந்தப் பெரிய மீன் வந்து விழுந்து கிடந்தது.

அந்த முயற்சியில் அவன் ஒரு வெற்றியை எட்டும் தருவாயில்தான் சுமங்களாவின் குறுக்கீடு அவனைப் பாதித்தது.

அந்த நேரத்திலும் சுமங்களாவை ஒரேயடியாகத் தீர்த்துக் கட்ட சுகுமாரன் தான் திட்டம் போட்டுக் கொடுத்தான்.

அன்று பரமேஸ்வரன் சுமங்களாவைக் குறி வைத்துத் தாக்கியதுகூட அவளை ஒழித்துக் கட்ட வேண்டும் என்கிற அர்த்தத் திட்டத்தின் முதல் முயற்சியே!

எல்லாமே சரியாக இருந்தது!

ஆனால்,

அவர்கள் மனத்தில் திடீரென்று ஒரு சந்தேகம் தானாக எழவே அந்தக் கொலை பாதகத் திட்டத்தைக் கைவிடும்படி ஆகி விட்டது.

அவளை அடித்துக் கொன்று எங்காவது கொண்டு போய்ப் போட்டுவிடுவது...

திடீரென்று அதில் மாறுதலைச் சொன்னவன் சுகுமாரன் தான்.

அவளை அடித்துக் கொல்வதன் மூலம் அம்பிகாவை மணந்து கொள்வதென்பது இயலாமல் போனாலும் போகலாம். அம்பிகாவுக்கும் விஷயம் எட்டி விட்டதால் அவள் பதிவுத் திருமண ஆபீஸ் வரை போய்ப் பிறகு முற்றிலும் மனம் மாறினாலும் மாறிவிடக் கூடும். அவனிடம் வாக்குக் கொடுத்தது போல் சுமங்களாவை விவாகரத்து செய்வது தான் நாசுக்கான வழி என்பதை நினைவு படுத்தினான், சுகுமாரன்.

அதுவுமின்றி, சதி வெளிப்பட்டு வீண் தொல்லையில் அகப்பட்டுக் கொள்வதைவிட வேறுமாதிரியாக அவளை ஒதுக்குவதே நல்லது என்று கூறி விவாகரத்துக்கான விஷயதானம் செய்தவனும் அவனே. அதுதான் பிரச்னை அற்றது என்பதை உறுதிப்படுத்தினான்.

அவன் கொடுத்த இரிபுத் தன்மைகள் ஏற்கப்பட்ட பிறகுதான் சுமங்களாவையும் சுகுமாரனையும் இணைத்து அப்படியொரு வக்கீல் நோட்டீஸை அவன் தயார் செய்தான்.

இவ்வளவுக்கும் அவனுள் ஓர் அந்தரங்கமான குரூரம் இருந்தது. இதைப் பரமேஸ்வரன் உணரவில்லை. அப்படி உணர, சிந்திக்க அந்த ராமலிங்க பரமேஸ்வரனுக்கு நேரம் ஏது? சுகுமாரன் இதை ஒரு நொடியில் கணித்துக் கொண்டு விட்டான்.

'இந்த அழகை மலரை நான் கொய்து சென்றுவிட வேண்டும்.'

அவளை எல்லா முனைகளிலும் தனிமைப் படுத்த வேண்டும். எல்லாரிடத்திலிருந்தும் பிரிக்க வேண்டும். அருணாசலம்-பார்வதம் தம்பதியரைப் பொறுத்தவரையில் அவர்கள் அவனுடைய சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்களே. அதன் பின் அவளை மெதுவாகத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வர வேண்டும். அவள் மேல் அனுதாபம் கொண்டவனைக் காண்பித்துக் கொள்ள வேண்டும். அதன் பின் நிரந்தரமாக அந்த அழகு மலரை நுகர்ந்து அனுபவிக்க வழி செய்து கொள்ள வேண்டும்.

இதுதான் சுகுமாரனின் திட்டம். அம்பிகாவும் பரமேஸ்வரனும் இணைந்து விட்டால் சுமங்களா தனிமைப்படுவாள். அவள் மீது அக்கறை கொண்டவர்கள் அருகிப் போய் விடுவார்கள்.

சுகுமாரன் இப்படிப்பட்ட கோலங்களைத் தனக்குள் குறுக்கும் நெடுக்குமாகப் போட்டுக் கொண்டான்.

அந்தத் திட்டத்தின் முடிவான எல்லை வரை வந்து கொண்டிருப்பதை அவன் உணர்ந்து சந்தோஷித்தான். (தொடரும்)



வெந்து தணிந்த காடுகள்

இந்திரா பார்த்தசாரதி

18

படுக்கையில் தாமோதரனின் தலை ஒருபுறமாகச் சாய்ந்திருந்தது. வாந்தி எடுத்திருந்ததன் காரணமாக, அறை முழுவதும் துர்நாற்றம்.

விம்மி வயிற்றைக் குமட்டியது.

''தாமோ...''

அவன் எழுந்திருக்கவில்லை.

குரலெழுப்பி மறுபடியும் கூப்பிட்டாள்.

சிறிதுகூட சலனமில்லை.

ஒருவேளை... இதை நினைக்கும்போது அவள் இதயத் துடிப்பு அவளுக்கே கேட்டது.

அவளுக்கு வியர்த்தது.

அருகில் சென்று அவனைத் தொட்டுப் பார்க்கப் பயமாக இருந்தது.

அவள் அவ்வறையை விட்டு வெளியே வந்தாள். இப்பொழுது என்ன செய்வது?

அவள் சுவரருகே நின்று வீதியை நோக்கினாள். இன்னொரு நாள் தொடங்கிவிட்டது என்பதற்கு அறிகுறியாகக் கார்களும் பஸ்களும் விரைந்து கொண்டிருந்தன. நகரம் சுறுசுறுப்பாகி விட்டது.

நேற்றிரவு நிசப்தத்தில் ஆழ்ந்திருந்த வீதி இப்பொழுது உயிர் பெற்று எழுந்துவிட்டது.

தாமோதரன் மயக்கத்தில்தான் இருக்கின்றானா? அப்படித்தான் இருக்க வேண்டும். அப்படித்தானிருக்க வேண்டும்.... அப்படியில்லாமல், வேறு விதமாக இருந்தால், அவளால்தான் என்ன செய்ய முடியும்?

அவனுக்கு ஏதாவது ஆகி யிருந்தால், இதற்கு அவளா காரணம்? 'நீ என் கூட இருக்கிறதினாலே என் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் ஏற்பட்டிருக்குன்னு நினைச்சண்டு, வேற ஒண்ணும் வேணாம், நீ கூட இருக்கிறதே போதும்னு நான் சந்தோஷமா இருக்கிறதா பாவனை பண்ணிண்டிருக்கேனே. இதுக்கும் அர்த்தம் இல்லியா?....' நேற்றிரவு அந்த 'பாவனை'யும் அர்த்தமில்லாமல் போனதற்கு அவள்தானே காரணம்! அவன் அதற்குப் பிறகுதான் உள்ளே சென்று குடிக்க ஆரம்பித்தான். ஆதார உணர்வுகளைப் பொறுத்த வரையில் அவனும் ஒரு சாதாரண மனிதன்தான் என்று அவள் கட்டிக் காட்டியதுதான் அவனுடைய எல்லையற்ற சினத்தைத் தூண்டி விட்டது. ஒரு 'பாட்டில்' விஸ்கி முழுவதையும் குடித்துத் தீர்த்திருக்கிறான்....

இது அவள் மீதே அவனுக்கு ஏற்பட்ட கோபம். இதுவரை அடக்கி வைத்திருந்த சீற்ற மெல்லாம் நெருப்பாகப் புறப்பட்டு... வெந்து தணிந்திருக்கிறது.

'வெந்து தணிந்தது காடு—தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ..

'மிஸஸ் அருண்.. இந்தப் படத்தைப் போட்டு முடிச்சப்புறம் தான் நீங்க வெளியிலே கிளம்பி யிருக்கணும் இன்னிக்கி... 'இம்மோஷன்ஸ் ரெகலக்டட் இன் ட்ரான்குவிலிட்டி'ங்கிறதெல்லாம் ரெண்டாந்தர கவிஞர்களுக்குத் தான்.... மறுபடியும் இதே 'இன்டென்ஸிட்டி'யோட உங்களாலே இந்தப் படத்தைப் போட்டு முடிக்க முடியுமாங்கறது சந்தேகம்தான்...'

'ஒரே ஒரு ஆட்சேபனை.'

'என்ன?'


'மிஸஸ் அருண்னு சொல்ல வேணாம். விம்மின்னு சொன்னாப் போறும்.'

அப்பொழுது அவன் வாய்விட்டுச் சிரித்தது இப்பொழுது அவளுக்குக் கேட்டது.

அவள் உடம்பு சிலிர்த்தது. திரும்பிப் பார்த்தாள். ஒருவருமில்லை.

நேற்றிரவு அவன் அங்கு நின்று கொண்டிருந்தான்.

'எதுக்காக இங்கு வந்து நின்னுண்டிருக்கீங்க?'




'சும்மாத்தான்... ஒரு ராத்திரியிலே ஊரெல்லாம் தூங்கிண்டிருக்கிறபோது, இப்படி நின்னுண்டு ஆகாயத்தைப் பார்க்கிற போதுதான் என் தனிமையை என்னாலே இன்னும் நன்கு புரிஞ்சுக்க முடியறது...'

'தனிமையிலேந்து தப்பிக்கத்தான் நாம என்னென்னமோ செய்யறோம். அப்படியிருக்கிறபோது தனிமைதான் எனக்குப் பிடிச்சிருக்குன்னு என்ன அர்த்தம்....?'

'நான் அப்படிச் சொல்லல்லே. எனக்குப் பிடிச்சிருக்கா இல்லையாங்கிற பிரச்னையே இல்லே... தனிமையை என்னாலே தவிர்க்க முடியாதுங்கறதை நான்புரிஞ்சுக்கணும்.'

அவன் புரிந்து கொண்டு விட்டானா?



புரிந்துகொள்வ தென்றால் ஒருவன் வரலாறு ஆவதுதானா?

'தாமோதரன் ஒரு தனி மனிதனல்ல, ஓர் இயக்கம். ஒரு புதிய சமுதாயத்தின் சிற்பி. மனத் தடைகளற்ற ஒரு கலைக் குடும்பத்தை நிர்வகிக்கும் ஒரு மேதை...'

உயிரோடு இருக்கும்போதே அவனை வரலாறாக ஆக்குவதற்காக அவனைப் பற்றி எழுதப்பட்ட இவ்வரிகளுக்கு அவனைப் பொறுத்த வரையில் இப்பொழுது என்ன அர்த்தம்? இருக்கிறது?–

'தி சீக்ரெட் ஆஃப் ஆர்ட் ஈஸ் செல்ஃப் ஆப்லிவியன்... ஒவ்வொரு படமும் என்னுடைய புதுப் பிறவி. இது வெறும் 'கிளிஷேஸ்'லே அடங்கிற விஷயமில்லே. கலைதான் உண்மை. படைக்கிறவன் வரலாற்றுக்கு உபயோகப்படப் போற வெறும் கருவிதான்....

'குள்ளமா, கோணல் மாணலா முதுகில் ஒரு பெரிய மூட்டையைச் சுமந்துண்டிருக்கிற தாமோதரனாலே, வண்ணம் வண்ணமா பாக்கிறவங்க பிரமிக்கும்படியா தன்னை வெளிப்படுத்திக் கொள்ளவும் முடியும். இதான் முக்கியமான விஷயம்...தாமோதரன் ஒரு 'இல்யூஷன்' அவன் கலை, 'தி ரியாலிட்டி' ஹ ஹா.... ஹ ஹா....'

அவன் சிரிக்கும்போது அப்படித்தான் வாய் விட்டுச் சிரிப்பது வழக்கம்.

அந்தச் சிரிப்பு இப்பொழுதும் கேட்கிறது.

உள்ளே சிரித்துக் கொண்டிருக்கிறானா?

அந்த அறைக்குள் மீண்டும் செல்ல அவனுக்குப் பயமாக இருந்தது.

அவன் சிரிப்பு ஒரு பாவனை...

இப்பொழுது அவ்வறையில் அவன் இந்நிலையில் இருப்பதும் ஒரு பாவனையோ?

மரணம் பிரத்யட்சம்...வாழ்க்கை ஒரு பாவனை.

அர்த்தமில்லாத வாழ்க்கையில் ஏதோ ஒரு புனிதத்தைக் காப்பாற்றுவது போல், அவன் பிடிவாதமாக இருந்ததின் விளைவு– அதோ அந்த அறையில் அவன் அந்நிலையில் இருக்கின்றான்....



'அந்த நான் குயவன் கை ஆட்டத்தாலே நேர்ந்த பிழை — அது நான்தான்... நான் பொறந்ததே இப்படி... இப்படிப் பொறந்ததுக்கு ஒண்ணு நான் தற்கொலை பண்ணியிண்டிருக்கணும், இல்லாட்டா, 'ரிச்சர்டு தி தேர்ட்' மாதிரி கொலைக்கு மேலே கொலையா செஞ்சிருக்கணும்... என் வாழ்க்கை போராடிக்க வேற காரணம் எதுக்கு, என் உருவமே போறுதா?... வாட் டு யு திங்க், மிஸஸ் அருண்?'

'ஆரம்பத்திலேருந்தே நீ மத்தவங்க மாதிரியில்லே, நீ பாக்கற கண்ணு வேறன்னு நினைச்சேன். ஆனா என் உருவத்தை ரொம்ப நெருங்கிப் பார்க்கிறபோது, உன்னுடைய அருவருப்பை உன்னாலே தவிர்க்க முடியலே....'

தனக்கு அருவருப்பில்லை என்பதை இனி எப்படி அவனுக்கு விளங்க வைக்க முடியும்?

அவள் ஒருவாறு தன்னைத் தைரியப்படுத்திக் கொண்டு அறையை நோக்கிச் சென்றாள்.

தாமோதரன் கிடந்த நிலையில் மாறுதல் இல்லை.

''தாமோ...''''தாமோ...''''தாமோ..'' மூன்றாந் தடவையாகக் கூப்பிட்டபோது அவள் குரல் அழுகையாக ஒலித்தது.

இப்பொழுது என்ன செய்வது? ஏதாவது செய்தாக வேண்டும்.

மூன்று வீடு தள்ளி டாக்டர் ஒருவர் இருக்கிறார் என்பது அவள் ஞாபகத்துக்கு வந்தது. கீழே இறங்கிச் சென்றாள்.

நல்ல வேளை டாக்டர் வீட்டில் இருந்தார்.

''தயவு செய்து உடனே வர முடியுமா? என் சிநேகிதர், அவருக்கு என்ன ஆகிவிட்டதென்று தெரியவில்லை.''

''மிஸ்டர் தாமோதரன்?''

''ஆமாம்.''

அவர் கைப் பெட்டியை எடுத்துக் கொண்டு அவளுடன் புறப்பட்டார்.

கதவில் தொங்கிய அந்த அறிவிப்பைப் படித்துவிட்டு அவர் புன்னகை செய்தார்.

'உங்களுடைய பலம் எனக்குத் தெரியும்... ஆனால் என்னை மெதுவாகத் தட்டுங்கள்...'

''என்ன மென்மையான உள்ளம் இவருக்கு!... எல்லாக் கலைஞர்களும் இப்படித்தான் என்று நினைக்கிறேன்....'' என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தார் டாக்டர்.

தாமோதரன் படுத்திருந்த நிலையைப் பார்த்தவுடன் அதிர்ச்சி யடைந்த நிலையில் நின்றார் டாக்டர். அவனைப் பார்த்தார்.

பிறகு அருகில் சென்று பரிசோதித்தார். எழுந்தார்.

''ஐ ஆம் ஸாரி... பட் அவர் இப்படிக் குடிக்கும்போது நீங்கள் தடுக்கவில்லையா?''

''இஸ் ஹி டெட்?''

''தென்வாட்? மாஸிவ் ஹார்ட் அட்டாக்'' டாக்டரின் குரலில் எரிச்சல் வெளிப்படையாகத் தெரிந்தது.

விம்மி ஒன்றும் பேசாமல் சிறிது நேரம் நின்று கொண்டிருந்தாள்.

''அவருடைய குடும்பத்தினர் யாரும் இங்கில்லையா?''

''இல்லை.''

''அவர் இப்படிக் குடித்தபோது நீங்கள் ஏன் தடுக்கவில்லை?''

''நான் தூங்கிப் போய்விட்டேன். நான் தடுத்தும் அவர் கேட்கவில்லை... இப்படி ஆகுமென்று நான் எதிர்பார்க்கவில்லை...''

அவள் எவ்வளவுதான் அடக்க முயன்றாலும் முடியாத நிலையில் அழுகை வந்துவிட்டது.

டாக்டர் அவள் தோளைத் தொட்டார். ''மேலே ஆகவேண்டியதைச் செய்யுங்கள்... போலீசுக்குச் சொல்லிவிடுவது நல்லது.....''

''போலீசுக்கா?''

''இயற்கையான மரணம் என்று அவர்கள் பதிவு செய்து கொண்டு விட்டால் நல்லது. பின்னால் ஏதாவது பிரச்னை எழுந்தால்?''

அவளால் இந்நிலையைச் சமாளிக்க முடியாது. போலீஸ் வந்தால் ஆயிரம் கேள்வி கேட்பார்கள்.

''ஓர் உதவி செய்வீர்களா?''

''எஸ்...''

''மிஸ்டர் அருண் என்பவரின் டெலிஃபோன் நெம்பர் தருகிறேன். அவரை உடனே இங்கு வரும்படி ஃபோன் செய்கிறீர்களா?''

''அவர் உங்களுக்கு வேண்டியவரா?''

''அவர் என் கணவர்.''

டாக்டருக்கு மற்றோர் அதிர்ச்சி. பிறகு சமாளித்துக் கொண்டு ''சரி'' என்று கூறிவிட்டு அறையை விட்டு வெளியே சென்றார்.

விம்மி 'டெர்ரேஸி'ல் வந்து நின்றாள்.

இது 'தற்கொலை' என்று போலீஸ் நிரூபிக்க முயன்றால்? அது தவறா? 'இப்படிப் பொறந்ததுக்கு ஒண்ணு நான் தற்கொலை பண்ணியிண்டிருக்கணும்...' பாட்டில் முழுவதையும் 'நீட்'டாகவே குடித்துத் தீர்த்திருக்கிறான்!

இரவு அவன் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்? அவள் எப்படித் தூங்கினாள்? அவனை எழுப்ப அவள் ஏன் முயற்சி செய்யவில்லை?

தாமோதரன் இப்படிச் செய்திருப்பான் என்று அவனைத் தெரிந்த யாரும் நம்ப மாட்டார்கள்.... எதையும் சந்திக்க ஒரு துணிவு வேண்டும் என்று எத்தனை தடவை அவன் உபதேசம் செய்திருக்கிறான்! ரீனாவும் கவிதாவும் அவர்கள் மிகவும் உற்சாகத்தோடு மேடையேற்றிய நாடகமொன்று தோல்வியடைந்தபோது, விமர்சகர்களின் கடுமையான கண்டனத்துக்கு உள்ளான சமயம் ஓர் ஏமாற்ற உணர்வில் அவர்கள் எது வேண்டுமானாலும் செய்துவிடக் கூடுமென்று அஞ்சி, தாமோதரன் அவர்களிடம் சொன்னது, அவள் நினைவுக்கு வந்தது. 'ஏற்படுகின்ற ஏமாற்றத்தினால் மனம் ஒடிந்து செயலழிவது ஏமாற்றத்துக்கு வெற்றி... மரணம் என்ற சத்தியத்தை நாம் சந்தித்தாக வேண்டுமென்ற நிர்ப்பந்தத்தின்

காரண மாகத்தான் காலதேவனை நாம் உதாசீனம் செய்கிறோம். கவிஞர்கள், 'காலா என் காலருகே வா', 'நமனை அஞ்சோம்' என்றெல்லாம் பாடுவதற்குக் காரணமென்ன? எப்படியும் சாவது நிச்சயம். இதற்காகத் தினம் செத்துக்கொண்டிருக்க வேண்டுமா?... என் பிறவியே ஏமாற்றம்.. அதற்காக நான் தற்கொலை செய்து கொண்டு விட்டேனா?...'

அவர்கள் இப்பொழுது இதை எப்படி நம்பப் போகிறார்கள்? நேற்று நடந்ததை அவர்களிடம் சொன்னால், அவர்கள் தாமோதரனைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை மறு பரிசீலனை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். வேண்டாம். அவனைப் பற்றிய அவர்களுடைய நினைவு அப்படியே தான் இருக்க வேண்டும். ஆனால் இப்படி அவன் ஏன் குடித்திருக்க வேண்டு மென்பதைப் பற்றி அவர்கள் ஆச்சரியப் படாமலிருக்க மாட்டார்கள். இதைப் பற்றி அவளை அவர்கள் விசாரிக்கவும் கூடும். இதற்கு என்ன பதில் சொல்வது?

''என்ன விம்மி?...வாட் ஈஸ் தி ப்ராப்ளம்?''

விம்மி திரும்பிப் பார்த்தாள். ராதிகா! அருண் எங்கே?

விம்மிக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அழுகை வந்துவிட்டது.

ராதிகா அவளருகில் வந்து அவள் தோள்களைப் பற்றிக் கொண்டாள்.

''என்னம்மா, சொல்லேன்... யாரோ டாக்டர் போன் செய்யறதாச் சொன்னார். அருண் ஆபீஸுக்குப் போயாச்சு... 'சம்திங் டெர்ரிபிள் ஹாஸ் ஹாப்பெண்ட்' அப்படின்னார்... எனக்கொன்றும் புரியலை... கம் ஆன், டெல் மி, அழாம சொல்லு.. அருணுக்குப் ஃபோன் பண்ணிட்டேன். அவனும் வருவான்...''

''தாமோதரன் ஈஸ் டெட்...''

''எஸ்....''

விம்மி சுவரருகே சென்று கைப்பிடிச் சுவரைப் பிடித்துக் கொண்டு நின்றாள்.

''ஆஸ்பத்திரியிலா?''

''நோ... அங்கே....''என்று அறைப் பக்கம் சுட்டிக் காட்டினாள்.

''என்ன உடம்பு?''

''போய்ப் பாரு...''

ராதிகா அறையை நோக்கிச் சென்றாள்.

''மை காட்!'' ராதிகா அடைந்த அதிர்ச்சி அவள் குரலில் தெரிந்தது. ராதிகா சிறிது நேரம் அப்படியே நின்றவாறு அவ்வறையை உற்றுப் பார்த்தாள்.

பிறகு விம்மி அருகில் வந்து நின்றாள்.

''இதுக்காகத்தான் இந்த இடத்துக்கு நீ வந்தியா?''

விம்மியின் கண்களில் நீர் கட்டுக்கடங்காமல் பெருகியது.

''நேத்திக்கு அருண் சொன்னான்... 'நாம எல்லாருமே பொறியிலே அகப்பட்டுக் கொண்ட எலிகள்'னு... ஹௌ ட்ரூ! இதுக்கெல்லாம் என்ன அர்த்தம்? நம்ம படைச்ச ஒருத்தன் இருக்காங்கறது உண்மையானா.அவனோட குரூர ஹாஸ்ய உணர்ச்சி இப்படியா இருக்கணும்!''

விம்மி ஒன்றும் பேசாமல் அழுதுகொண்டேயிருந்தாள்.

''திஸ் பாஸ்டர்ட், எக்கச் சக்கமா குடிச்சு செத்துப் போனான்! வாட் எ நாஸ்டி வே ஆஃப் டையிங்?''

விம்மி கண்களை மூடிக் கொண்டாள். அவளுக்கு லேசாகத் தலையைச் சுற்றியது.

''ஆர்ட்டிஸ்ட்ங்கிறே, அழகாச் செத்துப் போயிருக்கக் கூடாது?

''வாட் வாஸ் ஹிஸ் ப்ராப்ளம்?''

விம்மி பதில் சொல்லவில்லை.

''கம் ஆன். டெல் மீ, விம்மி....

''உங்க ரெண்டு பேருக்குள்ளே எந்த விதமான உறவு இருந்தது?...''

''இல்லேங்கறதுதான்அவருடையபிரச்னை'' என்றாள் விம்மி கண்களைத் திறக்காமல்.

ராதிகா தன்னையே பார்த்துக் கொண்டு நிற்கிறாள் என்று விம்மிக்குப் பட்டது.

''ஐ ஸீ... ஹௌ வுட் ஸ்லீப் வித் திஸ் கிரீச்சர்?....'' என்றாள் ராதிகா.

விம்மிக்குத் தலை மிக வேகமாகச் சுற்றியது.

''விம்மி, விம்மி....'' என்று ராதிகா பல ஆயிரம் மைல்களுக்கு அப்பாலிருந்து கூப்பிடுவது போலிருந்தது.

இது எந்த இடம்?

பாலைவனமா? எங்கு பார்த்தாலும் மணல், மணல் — கூழாங் கற்களாக இருக்கக் கூடாது? யாரோ ஒருவன் கூழாங் கற்கள் பொறுக்குகிறேன் என்று அடக்கமாகச் சொன்னானும். கூழாங் கற்கள் கடற் கரையில் அல்லவா இருக்கும்? இது கடற்கரை யில்லை... பாலைவனம். மணல்...மணல்... பொடிப் பொடியாக, துகள், துகளாக... வெய்யிலில் ஒளித் துணுக்குகளாக மின்னுகின்றன.

யார் இவர்கள்? முன் பின் தெரியாத முகங்கள்... ஒரு முகத்துக்கும் இன்னொரு முகத்துக்கும் வித்தியாசமில்லை. கண்ணுக்குத் தெரியாத சாட்டைக்குப் பயப்படுகின்றவர்கள் போல் வேலை செய்கிறார்கள்...,

என்ன செய்கிறார்கள்?

மை காட்.... நானும் அவர்கள் செய்யும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்.... பார வண்டியில் மணலை மூட்டை மூட்டையாகக் கட்டி ஏற்றி, இறக்கி, மூட்டையை அவிழ்த்து, மணலைக் கீழே கொட்டி மறுபடியும் மூட்டையாகக் கட்டி, ஏற்றி, இறக்கி, கொட்டி.... மறுபடியும் கட்டி ஏற்றி ஏற்றி....ஏற்றி....

(முற்றும்)

போலீஸ்

போலீஸ் போலீஸ் போலீஸ் போலீஸ்



"நீங்கள் ஆளுக்கு ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் நடக்கும் ஆர்ப்பாட்டங்கள், கதவடைப்புகள், ஸ்டிரைக்குகள், ஊர்வலங்கள், கண்டனங்கள் இவற்றை யெல்லாம் தேதிவாரியாகக் குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். தேர்தல் சமயத்தில் எந்தக் கட்சியினர் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளில் அதிகப் பங்கு பெற்றிருக்கிறார்கள் என்பதைக் கணக்கிடுங்கள். பிறகு-அந்தக் கட்சிக்கு வோட்டுப்போடாதீர்கள்.

"ஓர் ஊர்வலம் என்றால் அதனால் போலீஸ் பந்தோபஸ்து அந்த ஊர்வலம் போகும் பாதையில் அளிக்கப்பட வேண்டியிருக்கிறது. இதனால் நகரில் வேறு இடங்களில் போலீஸ் உதவி தேவைப்படும் போது முழுமையாக அதை நிறைவேற்ற வழியில்லாமல் போய்விடுகிறது.

"ஆயிரம் பேர் கொண்ட ஊர்வலமா, அதை அனுமதிப்பதானால், அப்படி ஊர்வலம் நடத்தும் கட்சியினர் ஐந்தாயிரம் ரூபாய்வரை அரசுக்குச் செலுத்தி ஊர்வல லைசென்ஸ் பெற வேண்டும் என்று சட்டம் போட்டால் தேவையற்ற ஊர்வலங்கள் குறையலாம் என்று ஒருவர் யோசனை சொன்னார். பரிசீலிக்கப்பட வேண்டிய யோசனைதான்!

"சுவரெல்லாம் சுவரொட்டிகள், தெருவெல்லாம் எழுதப்பட்ட வாசகங்கள், செய்தித் தாள்கள், ரேடியோ, டெலிவிஷன் என்று எத்தனையோ சாதனங்கள் இருக்கும்போது ஊர்வலங்கள் தேவையே இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

"குற்றம் புரிபவர்களில் ஆண்கள்தான் முதலிடம் பெறுகிறார்கள். சமீபத்தில் எனக்குத் தெரிந்த ஒரு கேஸ்: முப்பது வருட சர்வீஸ் போட்ட ஓர் ஆசிரியை ஒரு வீடு வாங்கினார். வேறு ஒருவருக்கு மாதம் ஐநூறு ரூபாய்க்கு வாடகைக்கு விட்டார். வந்தவரோ, அந்த வீடு 800 ரூபாய் வாடகை பெறும் என்று கூறி இரு மாத வாடகையை (ரூ. 1600) அட்வான்ஸாகச் செக் எழுதிக் கொடுத்தார். அடுத்த ஓரிரு நாட்களில் மூன்றாம் மனிதர் ஒருவரை அழைத்து வந்து அந்த வீட்டைக் காட்டி, மாதம் எண்ணூறு ரூபாய் வீதம் இருபத்து நாலு மாத வாடகையை அட்வான்ஸாக வாங்கிக் கொண்டு கம்பி நீட்டினார். பாவம் ஆசிரியை! மோசடி செய்தவர் கொடுத்த செக் திரும்பி வந்துவிட்டது. அது பற்றி விசாரிப்பதற்காகத்தான் வாடகைக்கு விட்ட தன் வீட்டுக்குப் போனால் அங்கிருந்து நகர மாட்டேன் என்று அடம் பிடிக்கிறார், மூன்றாமவர்.

"அதிகமான அளவில் வாகனங்கள் விபத்துக்குள்ளாகின்றன. வாகனங்களின் மோசமான பராமரிப்பும், முழுத் தகுதி இல்லாதவர்களுக்கு வாகனம் ஓட்டும் லைசென்ஸ் கொடுப்பதும் தான் காரணமாகும். முன்பெல்லாம் வாகன ஓட்டிகளுக்கு லைசென்ஸ் வழங்குவது காவல் துறையிடமிருந்தது. இப்போதோ போக்கு வரத்துத் துறையிடம் போய்விட்டது!

"போலீஸ்காரர் மிகவும் குறைந்தபட்ச பராமரிப்புச் செலவில் கிடைப்பது தமிழ் நாட்டில்தான். அதிகபட்ச வேலைப் பளுவும், மிகச் சிறந்த நிர்வாகத் திறமையும் தமிழ் நாட்டில்தான்.

"எண்பது சதவீத போலீஸ்காரர்கள், போலீஸ் கான்ஸ்டபிள்களாகவே ஓய்வு பெறுகிறார்கள்.

"முப்பத்தைந்து சதவீத போலீஸ்காரர்களுக்குத்தான் வீட்டு வசதி செய்து கொடுக்க முடிகிறது. ஏனையோரில் பெரும் பாலோர் குடிசைப் பகுதிகளிலோ, அப்பகுதிகளுக்கு அருகிலேயோ வசிக்கிறார்கள். இவர்களுக்கு அடிக்கடி குற்றம் மிழைக்கக் கூடியவர்களுடன் தொடர்பு, நட்பு ஏற்பட வாய்ப்பிருக்கிறது. இதனால் தங்கள் நண்பர்களான குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு அவர்கள் தயங்கலாம். இதைத் தவிர்க்க எல்லா காவலர்களுக்கும் தனிக் குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கலாம்.

"நடமாடும் நீதிமன்றம் என்ற ஒன்று இருந்தது. அந்த நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுவோர் பெரும்பாலும் பாதசாரிகளும், சைக்கிள் ஓட்டிகளுமாகவே இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்ததால் நடமாடும் நீதிமன்றம் முடமாக்கப்பட்டது. மறுபடி அதன் இயக்கத்துக்கு உயிர் கொடுத்து, பாதசாரிகள், சைக்கிள் ஓட்டிகள் மட்டுமின்றித் தவறு செய்யும் காரோட்டிகளையும் கைது செய்து, தண்டனையாக, சாலையோரத்திலேயே கரும்பலகை, சாக்கட்டி சகிதமாக ஒரு போலீஸ்காரரை நிற்க வைத்து விதி மீறுவோருக்குச் சாலை விதிகளைச் சொல்லிக் கொடுக்கலாம்.

"நகருக்குள் லாரிகளால் ஏற்படும் விபத்துக்கள் அதிகமாக உள்ளன. நகருக்கு வெளியே லாரிகளுக்கு ஒரு ஸ்டாண்ட் ஏற்படுத்தி, நகருக்குள் லாரி போக்கு வரத்தைக் கட்டுப்படுத்தலாம் என்று ஒருவர் யோசனை சொன்னார். யோசிக்க வேண்டிய விஷயம். திருச்சி, மதுரை போன்ற நகர்களின் வெளிப்புறத்தில் லாரி ஸ்டாண்ட் உள்ளன; சென்னையில் இல்லை."

-வில்லிவாக்கம் லயன்ஸ் கிளப் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் போலீஸ் கமிஷனர் ஸ்ரீபால் கூறியவை.

படம், கட்டுரை - பிரபு சங்கர்

ஹிப்பி முடி டௌன்... டௌன்!

— ஜூஜ —

'மயிர் நீப்பின் உயிர் வாழாக் கவரிமானப்பா நான்' என்று மன்றூடிப் பார்த்து விட்டான் ஜகன்.

'ஒரு மில்லி மீட்டர் கூட அசைந்து கொடுக்கத் தயாராக இல்லை அப்பா.'

நீண்டு வளர்ந்து தோளிலும் முதுகிலும் சாம்ராஜ்யத்தைப் போலப் பரந்து விரிந்து கிடக்கும் ஹிப்பி முடியை வெட்டி எறிந்து விட்டு, மிலிட்டரி கிராப்போடு வராதவரை இந்த வீடு உனக்கு 'ஹவுஸ் ஃபுல்' என்று வாசற் படியிலேயே நிற்க வைத்துக் கரூராகச் சொல்லிவிட்டார் அவர்.

'ஒரு அப்பனுக்கு இப்படியும் ஒரு கான்கிரீட் இதயமா? அப்படி என்ன ஊர் உலகத்தில் எவனும் வளர்க்காத ஹிப்பி முடியை நான் வளர்த்து விட்டேனாம்?' என்று வெதும்பினான் ஜகன்.

''என்னதான் சொல்லுங்க ஸார். இப்பவும்தான் எத்தனையோ பேர் புதுசு புதுசா வந்து பின்னாடி நின்னு வாசிக்கிறதுக்கு ஒரு பட்டாளத்தையே வச்சுட்டுப் பாடினாலும், அந்தக் காலத்திலே ஒரு பாகவதர், கிட்டப்பா வோட பாட்டுக்குப் பக்கத்திலே போக முடியுமா இவங்கல்லாம்....''

பேசத் துணை கிடைத்து விட்டால் அப்பா அறுக்கும் அறுவைகளில் இதுவும் ஒன்று.

'அப்பேர்ப்பட்டவர்கள் வைக்காத ஹிப்பி முடியையா நான் வைத்து விட்டேன்? இதை எடுக்கா விட்டால் என்னைப் பொறுத்தவரை இந்த வீடு 'ஹவுஸ் ஃபுல்'லாமே — ஹவுஸ் ஃபுல்' என்று பொருமினான் ஜகன்.

''என்னண்ணா, அப்பா 'ஹவுஸ் ஃபுல்'னு சொல்லி விட்டாரேன்னு பயப்படறியா? டோண்ட் வொர்ரீ... உனக்கு பிளாக்லே டிக்கட் தர்றதுக்கு நானுச்சு. வேளா வேளைக்குக் கொல்லைப் பக்கமா வந்து நில்லு. கொட்டிட்டுப் போறதுக்கு நான் ஏற்பாடு பண்றேன்' என்று சொல்லிவிட்டு எகத்தாளமாகச் சிரித்தாள் விஜயா.

ஜகன் பல்லைக் கடித்துக் கொண்டான்.

'இவள்தான் அப்பாவைத் தூண்டி விட்டிருப்பாள். பொறுமி. சீயக்காயிலிருந்து சீனுக்கனிமண் வரையிலும் போட்டுப் பார்த்து விட்டாள். எலி வாலுக்கும் இரண்டு சென்டி மீட்டர் குறைவாகத்தான் சடை வளர்ந்திருக்கிறது. என்னைக் கூடப் போடாமல் இவனுக்கெப்படி எக்கச் சக்கமாக வளர்கிறது என்ற பொறாமை. 'வேண்டாண்டி இந்தப் பொறாமை. அப்புறம் இருக்கிற கண்டெலி வால் ஜடையும் ஒரு நாளைக்குச் சொல்லாமக் கொள்ளாமக் காணாமப் போயிடும்' என்று மனத்திற்குள் கறுவிய ஜகன்,

''ஏண்டி இவனே, புள்ளையைக் கிள்ளி விட்டுட்டுத் தொட்டிலையும் ஆட்டறியா?'' என்றான் எரிச்சலாக.

''ஆஹா ....ஹா,'' என்று சிரித்தாள் விஜயா.

''சிரிக்காதே, பல்லைக் கழட்டிடுவேன்.''

''பல் செட்டு வச்சிட்டுச் சிரிப்பேன்.''

இப்போது டபுள் ஆ ஹா... ...ஹா.

தன்னுடைய கரும் ஹிப்பி முடிக்கு வந்த சோதனையை யாரிடமாவது சொல்லிக் கதற வேண்டும் போலிருந்தது ஜகனுக்கு.

கதற வேண்டும் என்றதுமே காமினிதான் நினைவுக்கு வந்தாள்.

காமினி அவனுடைய காதலி.

உடனே வில்லை விட்டு டிபார்ச்சர் ஆன அம்பைப் போல வீட்டை விட்டு வீதிக்கு வந்து, எந்த நிமிடத்திலும் டெலிவரி ஆகக் கூடிய கேஸைப் போல் பிதுங்கிப் பாய்ந்து கொண்டிருந்த பல்லவன்களில் தனக்கு வேண்டிய நம்பரை மேய ஆரம்பித்தான்.

கடைசியாக அந்த நம்பரும் வந்தது.

அந்த மனிதக் கும்பலில் அவசர அவசரமாக ஒரு இடுக்கைக் கண்டு பிடித்து அதற்குள் தன்னை நுழைத்துக் கொண்டு மூச்சு வாங்க மூக்கை மாத்திரம் அங்கும் இங்கும் நீட்டிக் கொண்டிருந்தான்.

ஒருவாறு முண்டியடித்து வேண்டிய பஸ் ஸ்டாப்பில் இறங்கினான்.

இங்கிருந்து ஒரு பத்து நிமிடம் ஒரு பொடி நடையில் காமினியின் வீட்டை அடைந்து விடலாம்.

விட்டான்.

அங்கே வாசற் படியிலேயே நந்தி மாதிரி உட்கார்ந்தி



ருந்தார் அருணாசலம் — காமினியின் அப்பா. அருகில் அந்த வாண்டுப் பையன் — காமினியின் மினித் தம்பி — எங்காவது தட்டுப்படுகிறானா என்று நோட்டம் விட்டான் ஜகன்.

'ம்ஹூஹூம்....'

மறுபடியும் காமினியின் வீட்டை நோட்டம் விட்டபோது, அவனைத் தன் இரண்டு அரைக் கண்களால் பார்த்தபடியே பொடியை மூக்குக்குள் முழு மூச்சோடு இழுத்துக் கொண்டிருந்தார் அருணாசலம்.

கொஞ்சம் ஏமாந்திருந்தால் தன்னையும் சேர்த்து மூக்குக்குள் இழுத்துத் தள்ளிவிடுவார் என்று தோன்றவே, அவசரமாக அந்த இடத்தைக் கடந்து நடக்கத் தொடங்கினான் ஜகன்.

தெருக் கோடி வரையிலும் சென்றுவிட்டு எதையோ மறந்து விட்டவனைப் போல் பாசாங்கு செய்து விட்டு மறுபடியும் திரும்பி வந்தான்.

'பொடி போட்ட வேகத்தில் ஒரு தும்மல் போட்டிருந்தால் கூட உடம்பு ஒரு இஞ்ச் நகர்ந்திருக்கணுமே. இந்த மனுஷன் ஒரு மில்லி மீட்டர் அந்தப் பக்கம் இந்தப் பக்கம் நகராமல் யோகாசனம் போட்டிருக்கிறார்' என்று முனகிக் கொண்டே இரண்டாவது முறையாக அருணாசலத்தைக் கடந்து நடக்க ஆரம்பித்தான் ஜகன்.

ஆள் நடமாட்டம் அதிகம் இல்லாத அந்தத் தெருவில் அடிக்கடி திரும்பி நடக்கப் பயமாக இருக்கவே, தூரத்திலிருந்தே காமினியின் வீட்டை நோக்கிப் பார்வையை வீசினான்.

'இடிச்சு வச்ச புளி இல்லே, வடிச்சுப் போட்ட கஞ்சி மாதிரியில்லே அந்த பெருசு ஒட்டிட்டிருக்காரு'.

ஜெகனுக்கு வந்த எரிச்சலில் அந்தச் சமயத்தில் மட்டும் யாராவது ஒரு மகான் அவன் முன் தோன்றி, 'வரம் கேள் மகனே' என்று கேட்டிருந்தால், 'அதோ அந்தப் பொடி மட்டை ஆளுக்கு உடனடியாக ஒரு டிசண்டிரியைக் கொடுத்துத் தலை தெறிக்க ஓட வையுங்கள்' என்று கேட்டிருப்பான்.

''ஹலோ, மாமா! என்ன, புள்ள புடிக்கறவன் மாதிரி போஸ் கொடுத்துட்டு நிக்கிறீங்க?''

'சட்டக்'கென்று திரும்பினான் ஜகன்.

''வாடா என் கன்னுக்குட்டி... தங்கக் கட்டி... என் காமினித் தம்பி'' என்றான் பரவசத்தோடு.

''இருக்கட்டும்... இருக்கட்டும்... என்ன விஷயம்?' என்று படாமலே நின்று கேட்டான் காமினித் தம்பி.

''கொஞ்சம் பக்கத்திலே வாயேன்... உன்னாலே ஒரு சின்ன உபகாரம். ஒரு சின்ன...''

''மெசேஜ் டு காமினியா?''

'பக்'கென்று பாய்ந்து 'லபக்'கென்று அவன் ஓட்டை வாயைப் பொத்தினான் ஜகன். 'பாவி, கண்டு விரலாட்டம் இருக்கான். 'காமினி'ங்கிற பெயரை எத்தனை அசால்டா யூஸ் பண்றான்' என்று மனத்துக்குள்ளேயே வசை பாடிக் கொண்டான் ஜகன். எரிச்சலையெல்லாம் அடக்கிக் கொண்டு 'அதேதான். சத்தம் போடாதே' என்றான். அவன் கையில் அந்தத் துண்டுக் கடிதத்தை வைத்து மடக்கினான்.

''அதோ அந்த பஸ் ஸ்டாப்புக்கிட்ட நிக்கறேன். காமினி தர்ற லெட்டரை அங்கே கொண்டாந்துடு... ப்ளீஸ்'' என்றான்.

''என்னோட மெஸஞ்சர் ஃபீ?'' என்று கையை நீட்டினான் மினித் தம்பி.

''கொண்டு வராம இருப்பேனா?'' என்று சொல்லிக் கொண்டே இரண்டு லாலிபாப்

கராத்தே பயிற்சி 26

பயிற்சியாளர்: டோனி பொன்னையா


சித்திரம்:

தயாரிப்பு: குண்டுமணி

நிழல் சண்டை (தொடர்ச்சி)

15 வலது காலை முன்வைத்துக் குத்துதல், 16 இடது காலை முன் வைத்துக் குத்துதல், 17 வலது காலை முன்வைத்து குத்துதல், 18 இடது காலை இடதுபுறம் பின் நோக்கித் திருப்பி இடது கையால் தடுத்தல். 19 வலது காலை முன் வைத்து வலது கையால் குத்துதல், 20 வலது காலை வலது புறமாகப் பின்னோக்கித் திருப்பி வலது கையால் தடுத்தல். 21 இடது காலை முன்வைத்து இடது கையால் குத்துதல். 22 ஆரம்ப நிலைக்கு வருதல்.

இத்துடன் முதல் நிழற்சண்டை (Kata) முடிவடைகிறது. இந்த Kata பெயர் தை - கோ-கு - சோடான் TAI - KYO - KU-SHODAN.



ரேவதியின் ஆல்பம்!

மெட்ரிக் படிப்பை முடித்துள்ள குமாரி ரேவதி கலை உள்ளம் படைத்தவர். ஒரு குட்டி ஓவியர். தவிர நாட்டியமும் கற்றுக் கொள்கிறார். அழகிய படங்களையும் ஓவியங்களையும் சேகரித்து ஆல்பம் செய்வது இவரது பொழுது போக்கு. 'மத்தவங்களுக்கு அனுப்பறதுக்காகக் கடை கடையா ஏறி இறங்கி இந்த அழகான பொங்கல் வாழ்த்துக்களை வாங்கினேன். ஆனால் இவற்றை ரசிக்க ஆரம்பிச்சவுடனே மத்தவங்களுக்கு அனுப்ப மனசு' வரலே. நானே ஆல்பத்தில் வச்சுக்கிட்டு மத்தவங்களுக்கு மறுபடி வேறே வாங்கி அனுப்பிச்சுட்டேன்' என்று கூறும் இவர் தீப்பெட்டியில் ஒரு நல்ல ஓவியமோ படமோ இருந்தாலும் கூட ஆல்பத்தில் சேர்க்கிறார்!

மேலட்டை வண்ணப்படம்; தகவல்: ஹரீஷ்



களை ஒரே சமயத்தில் அவன் வாயில் வைத்து அடைத்தான்.

காமினியின் தம்பிக்கு வாய் கொஞ்சம் வயசுக்கு மீறினதாக இருந்தாலும் காரியத்தில் கெட்டிக்காரன். அந்தே நிமிடத்தில் காமினியிடமிருந்து பதிலைக் கொண்டு வந்து டெலிவரி செய்து விட்டான்.

"நான் மட்டும் இந்த நாட்டின் பிரதமராக ஆனால் ஐந்தாம் படைக்கு உன்னைத்தான்டா தளபதியாக ஆக்குவேன்" என்று அவனுக்கு ஒரு பாராட்டுப் பத்திரத்தை வழங்கிவிட்டு, காமினி அனுப்பிய கடிதத்தைத் திறந்தான்.

'இன்று மாலை ஆறு மணிக்கு கண்ணகி சிலையிலிருந்து நூறு அடி தூரத்துக்குள் உலவிக் கொண்டிருக்கவும் — கா.'

'ஹுர்ர்ர்ர்ர்ர்ரா' என்று கத்தினான் ஜகன் —உள்ளத்திலேயே.

"ஜகன், என்னை நீங்கள் உண்மையிலேயே காதலிக்கிறீர்களா?"

தன்னுடைய ஹிப்பி முடிக்கு வந்த சோதனையைச் சொல்லி அழுவதற்காகக் காமினியை பீச் மணலிலே உட்கார வைத்த ஜகனுக்கு காமினியின் கேள்வி கலங்க அடித்துவிட்டது.

"காமினி! என்ன கேள்வியைக் கேட்டு விட்டாய்? இந்த வங்கக் கடல் சாட்சியாக உன் தங்கக் கையின் மீது அடித்துச் சொல்கிறேன். தினத்தந்தியில் வரும் கன்னித் தீவு முடிந்தாலும் முடியலாம். ஆனால் என் இதயத் தந்தியிலே மீட்டிக் கொண்டிருக்கிற நம் காதல் என்றைக்கும் தொடரும்.... தொடரும்..."

'உங்களிடத்தில் நான் ஒரு பிச்சை கேட்கலாமா?"

"பிச்சையா; அய்யோ என்ன இது? என்னென்னவோ பேசுகிறாய்?"

"ஆமாம், கண்ணாளா, உங்களிடம் மடிப் பிச்சை கேட்கவில்லை நான். முடிப் பிச்சை கேட்கிறேன்."

"முடிப் பிச்சையா?" முடியைப் பிய்த்துக் கொண்டான் ஜகன்.

"உங்களை நம்பி அடுத்த வாரம் ஒரு தலையலங்காரப் போட்டியில் கலந்துகொள்வதாகப் பெயர் கொடுத்து விட்டேன்!"

"என்னை நம்பியா?"

"உங்கள் முடியை நம்பி. இந்த அழகான சுருள் சுருளான ஹிப்பி முடி ஒரு அருமையான 'விக்' ஆக மாறி என் தலையை அலங்கரிக்க வேண்டும் கண்ணாளா" என்று ஜகனுடைய ஹிப்பி முடிக்குள் தன் வெண்டைக் காய் விரல்களை விட்டாடி கொஞ்சினாள் காமினி.

"நாசமாப் போச்சு. மாடு முட்ட வருதேன்னு இவ கிட்ட உதவிக்கு ஓடி வந்தா இவள் ரோடு பூராவும் 'ஜீஸ்' தெளிக்கிறாளே' என்று தளர்ந்து போனான் ஜகன். பட்ட முடியிலேயே படும் என்பது சரிதான் போலிருக்கிறது என எண்ணிக் கொண்டான்.

"காமினி, கடைக்குப் போனால் ஆயிரம் விக்குகளை அள்ளிக் கொண்டு வரலாமே. படாத பாடு பட்டு என்னைப் படாமல் வளர்த்த என் இலட்சிய முடிதானா உன் கண்ணில் பட்டது?" என்று பரிதாபமாகக் கேட்டான் ஜகன்.

"கண்டவன் முடியெல்லாம் கலந்திருக்கும் அந்த 'விக்'கெல்லாம் உங்கள் ஆருயிர்க் காதலியின் அருமை முடிகளோடு பின்னிப் பிணைவது உங்களுக்கே பிடிக்கிறதா?" என்று விக்க ஆரம்பித்தாள் காமினி.

போதி மரத்தடியில்தான் வரவேண்டும் என்று சட்டமா என்ன? ஜகனுக்கு அந்த பீச் மணலிலேயே 'பட்'டென்று உதித்தது ஞானோதயம்.

காமினியை வைத்தகண்வாங்காமல் பார்த்தான். அவன் முன்னால் 'பட...பட...பட' வென்று பல படிகள் உயர்ந்து கொண்டே போனாள் காமினி.

'காமினி, என்மீது உனக்கு எந்த அளவுக்கு காதல் இருந்தால் இன்னொருத்தன் முடிகூட உன்மீது படக் கூடாது என்று முடிவிரத பத்தினியாக இருப்பாய்! இதைப் புரிந்து கொள்ளாத மடையனாக இருந்து விட்டேனே. ஹிப்பி முடியை வெட்டினால் மறுபடியும் வளரும். ஆனால்... நம் காதல், கரை தட்டினால்... நோ...நோ... கரை தட்ட விடமாட்டேன்' என்று நினைத்துக் கொண்டவன், "ஹிப்பி முடி டௌன்... டௌன்" என்று கத்தினான் உற்சாகத்தோடு.

காந்தீயத்தை ஏற்ற திலகரின் சீடர்

கோபால கிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனையிலே வரும் ''இல்லை வெளியிலே கலந்து விட்டால் அவர் திரும்பியும் வருவாரோ'' என்ற வர்ண மெட்டிலே ''சுதந்திரப் பெருமை'' என்ற தலைப்புத் தந்து பாரதியார் பாடியுள்ளார்:

''வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ? — என்றும்
ஆரமு துண்ணுதற்கு ஆசைகொண்டார்
—கள்ளில்

அறிவைச் செலுத்து வாரோ?

''நாடு வேண்டுவது உத்தியோக சுதந்திரமல்ல; வெள்ளையரை வெளியேற்றும் வீர சுதந்திரம்! அதையன்றி நாட்டு மக்கள் வேறொன்றைக் கொள்வாரோ?'' என்று கேட்கிறார். மரணத்தை ஒழிக்கும் அமுதத்தை உண்டு தேவர்களாக விரும்புவோர் அறிவை அழிக்கும் கள்ளை விரும்புவார்களோ? என்றும் கேட்கிறார்.

இன்னும் கேட்கிறார்:

''விண்ணி லிரவிதனை
விற்றுவிட் டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ?
கண்ணிலும் இனிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ?''

விண்ணில் உலா வரும் சூரியன் போன்றதாம் வீர சுதந்திரம். மிண்டோ-மார்லி சீர்திருத்தமோ மின்மினி போன்றதாம்! சுதந்திரமென்பது கண்ணிலும் இனியது. அதனை அன்னியனிடம் விற்றுவிட்டு, அவனுக்குக் கைகட்டிப் பிழைப்பதோ? இது பாரதியாரின் கேள்வி.

''வந்தே மாதரம் என்று வணங்கியபின்
மாயத்தை வணங்குவரோ?
வந்தே மாதரம் ஒன்றே தாரகம்
என்பதை மறப்பாரோ?''

பரம்பொருளை அடைய விரும்பித் தவம் செய்யும் பக்தனை மயக்க ''மாயை'' சேட்டை புரியும் என்பது ஆன்மிக வேதாந்தம்! அது போல, பூரண சுதந்திரத்தை விரும்பும் தேசபக்தனை மயக்கச் சீர்திருத்தம் வழங்கி சேட்டை புரிகின்றது பிரிட்டிஷ் அரசு. இது, பாரதியாரின் அரசியல் வேதாந்தம்!

பாரதியார் வெறும் அரசியல்வாதி மட்டுமல்ல; ஆன்ம ஞானியும் ஆவார். அதனால், ''முக்தி'', ''மாயை'' என்னும் வேதாந்த வாதங்களை யெல்லாம் அரசியலிலே பயன்படுத்தியுள்ளார்.

''விடுதலை'' என்னும் சொல்லை 'முக்தி', 'சுதந்திரம்' என்னும் இரு வேறு பொருளைத் தரும் சிலேடைச் சொல்லாக்குகிறார்.

பாரதியார் தமது தாயகம் பூரணசுதந்திரம் பெறுவதை விரும்பினார்.

இதற்கு அவர்தான் முன்னோடி! ''சீர்திருத்தம்'' என்னும் சொல்லைக் கூட அவர் ஏற்க மறுத்தார். இந்த உண்மையை உணர்ந்துதான் ''வீர சுதந்திரம்'' என்னும் வாசகத்தைப் பயன்படுத்தினார். வீர சுதந்திரத்தை வேண்டி நின்றார் வேறொன்று வேண்டுவரோ? என்றும் கேட்டார். ஆம்; ''சீர்திருத்தம்'' என்று சொல்லவும் விரும்பாமல் ''வேறொன்று''என்கிறார் அந்த வீரக் கவிஞர்.

தமது அரசியல் குருவான லோக மான்ய திலகர் கூட பூரண சுதந்திரத்தைக் கோராத காலத்திலே, அவருடைய சீடர் பாரதியார் கோரினார். இன்னொரு முறையும் நினைவூட்டுகிறேன். பாரதியார் இந்தப் பாட்டைப் பாடியது 1907ம் ஆண்டிலாகும்.

— ம.பொ.சி



இந்திய விடுதலைப் போரின் தளபதிப் பொறுப்பைக் காந்தி அடிகள் ஏற்றபோது அதனை பாரதியார் வரவேற்றார்.


காந்திஜி 'ஒத்துழையாமை', 'சத்தியாக்கிரகம்', 'சட்ட மறுப்பு' என்னும் போர்க் கருவிகளைக் கையில் ஏந்திய வண்ணம் விடுதலைக் களத்தில் தளபதி பொறுப்பை ஏற்றார்.

பாரதியார் காந்தியடிகளிடத்தில் மட்டுமல்லாமல், அவர் போதித்த ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு ஆகியவற்றிலேயும் கவர்ச்சி யடைந்தார்.

காந்தியடிகளின் ஒத்துழையாமைத் தத்துவத்தை இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை ஏற்றுக்கொண்டது 1920 டிசம்பர் கடைசியில் நாகபுரி காங்கிரஸில்தான். பாரதியார் அதற்கு முன்பே காந்தியடிகளின் தலைமையையும், அவருடைய ஒத்துழையாமை சித்தாந்தத்தையும் வரவேற்று ''காந்தி பஞ்சகத்''தைப் பாடிவிட்டார்!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press. Race Course, Road, Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

தகடுகள் டிஸ்க்ராலாக இருந்தால் உங்களால் சேதம் பண்ண முடியாது



பெரும் வாரியான முக்கிய தொழில் சாலைகளுக்கான இரும்பு, நிலக்கரி மற்றும் பிரத்யேக தாதுப் பொருள்களை பெருமளவு கையாளுவதற்கு டிஸ்க்ரால் தகடுகள் மிகவும் உகந்ததாக இருக்கின்றன. டிஸ்க்ரால் தகடுகளின் பயனை எரிக்கலவாய்—கூடைகள், தடுப்புத் தகடுகள், மதகுக்கதவுகள், வேகமாக அசைகின்ற தகடுகள், தானிய இயந்திரங்களில் உபயோகிக்கும் பிரத்யேக தகடுகள், சுத்திகரிப்பு மில்கள் போன்ற இடங்களில் நன்கு காணலாம் .... முரட்டுத்தனமான உபயோகிக்கும் இடங்களிலும், தேய்வின் பயங்கரம் அதிகமாக உள்ள இடங்களிலும் டிஸ்க்ரால் மிகவும் பயன் படுகிறது.

பிரத்யேக தேய்வுத்தடுப்பின் திறத்தினாலும், புத்திசாலித்தனமான உலோகக்கலவையாலும் [illegible] செய்யப்பட்டதாலும், டிஸ்க்ரால் தகடுகள், கீறல்களாலும், அரைத்தூள்களாலும், அல்லது [illegible]லாலும் ஏற்படுகின்ற சேதத்தைத் தடுக்கின்றன. இதன் பயன், அடிக்கடி இயந்திரங்களின் பாகங்களை மாற்றும் நிலைமையையும், அநாவசியமான நேரச்செலவுகளையும், பணச்செலவுகளையும் தடுக்கிறது. எல்லாவற்றைக் காட்டிலும் டிஸ்க்ரால் கருவிகளை உருவாக்குவதில் எளிமையையும் உறுதியையும் இணைக்கிறது. தகடுகளின் இணைப்பு, இயந்திர வேலைப்பாடு, வெட்டுதல், துளையிடுதல் மற்றும் வளைதல், எல்லாம் எளிது. உங்களுக்கு வேண்டுமோ?

மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதவும்:

- டைரக்டர் ஆப் மார்க்கெட்டிங்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  43, சௌரங்கி ரோடு, கல்கத்தா-700 071
- ஜாயின்ட் சீப் ஆப் புரொடக்ஷன் கண்ட்ரோல்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  ஜம்ஷெட்பூர் 831 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் பில்டிங்
  87, மஹாத்மா காந்தி ரோடு
  பம்பாய் 400 023
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  பேங்க் ஆப் பரோடா பில்டிங்
  16, பார்லிமென்ட் ஸ்ட்ரீட்
  புது டெல்லி 110 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  20இஜ, மஹாத்மா காந்தி ரோடு
  பெங்களூர் 560 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  பார்க் சென்டர், 24 பார்க் ஸ்ட்ரீட்
  கல்கத்தா 700 016
- அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட், இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்
  31 நார்த் பீச் ரோடு [மூன்றாவது மாடி]
  மதராஸ் 600 001

TATA STEEL டாடா ஸ்டீல்

TIS 3563R3


டிப்பி டீ, டிப்பி டோய், டிப்பி டம்-டம்
டிப்பிஸ் ஸ்க்வாஷுகள்
தித்திக்கும் கனியமுதம்!
ஆவல் மீறுமே நாவில்
நீரூறுமே—சாறூறிய
கனிகளின் தேனூறு...
கிளையிற் பழுத்துக்
கிளிகொஞ்சிய சுளையமுதம்
கூவவைக்கும்: "பாரப்பா
பழ நியப்பா, ஜிலுஜிலு
சாறப்பா, தாகம் தீரப்பா"
சும்மாவா குட்டிவீரன்
டிப்பி, ஞானப் பழம்!
கொஞ்சுமழகு லேபல்
தரித்த டிப்பிஸ் லெமன்,
ஆரஞ்சு, மேங்கோ
ஸ்க்வாஷ்கள், லெமன்
பார்லி வாட்டர், லைம்
கார்டியல், பைனாப்பிள் கிரஷ்,
இன்சுவை சர்பத்துக்கான
ஸிரப் வகைகள்.
உறிஞ்சுவீர் பழக் களஞ்சியம் டிப்பிஸ்.
Dipy's
Dipy's
Dipy's
daCunha DIP 84 TAM